வாராந்த சஞ்சிகை

சுடர் ஒளி

ஜூன் 18 - ஜூன் 24 / 2014

பக்கம் 24

விலை 30/-

இன்னொரு இனவாதம்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலிப் பாய்ச்சல் திட்டமிடலில் மூத்த தளபதிகளான பால்ராஜ், தமிழ்ச் செல்வனுடன் சொர்ணம்

சமரின் மறுபெயர் ...

ஹிருத்திக் நிஹாலே

விடுதலைப்புலிகள் அமைப்பென்றதும் அதன் தலைவரை தவிர்த்து, சட்டென நினைவில் வரும் பெயர்கள்- இயக்கத்தை உரிமை கோரவல்லவையாக இருந்த தனி மனிதர்கள் என்றால் மிகச்சிலர்தான். குறிப்பிட்ட காலங்களில் சில பெயர்கள் அடிபட்டு பின்னர் காணாமல் போன கதைகள் நிறைய இருந்தன. நீண்டகாலத்திற்கு இந்த அந்தஸ்துடன் இருந்த பெயர்கள் மிகஅரிதானவை. பொட்டம்மான், பால்ராஜ், சொர்ணம் என மிகச்சிறிய பட்டியல் அது. சொர்ணம் எப்படி இந்தப் பட்டியலில் வந்தார் என்பது சற்று வியப்பிற்குரியது. சிந்தனைக் குரியது. ஏனெனில் இந்த பட்டியலில் உள்ளவர்கள் அளவில் அவர் எந்த காலத்திலும் பிரகாசித்து கொண்டிருந்தவர் அல்ல. அந்த அமைப்பில் இருந்து மிகமோசமான வீழ்ச் சியை சந்தித்த ஒரு தளபதியாகவும் அவர்தான் இருந்தார். எனினும் ஈழத்தமிழர்கள் மத்தியில் அவர் பற்றிய ஒரு மிகையான மதிப்பீடு இருந்து கொண்டேயிருந்தது. உண்மையைச் சொன்னால், அமைப்பிற்கு வெளியிலிருந்த தமிழர்களிடம் மட்டும்தான் அப்படியான அபிப்பிராயம் இருந்ததென்பதல்ல. அமைப்பிற்குள்ளிருந்தவர்கள் மத்தியிலேயே அவர் பற்றியதொரு அதீதமான பிரதிமை இருந்தது. இத்தனைக்கும் அவர் பற்றிய மதிப்பீடுகளின் அளவுக்கு அவரது களச்செயற்பாடுகள் இருந்ததென்று கூறமுடியாது. இப்படி சொல்வது பலரை சினமூட்டலாம். ஆயினும் அவர் பற்றிய ஒரு மதிப்பீட்டின் அவசியத்திற்காக இதனை இங்கு தருகின்றோம்.

யார் இந்த சொர்ணம்?

1964ஆம் ஆண்டு பிறந்த சொர்ணம், திருகோணமலையில்தான் வளர்ந்தார். அவரது பிறப்பு யாழ்ப்பாணத்தின் மானிப்பாய் என்றபோதும், திருகோணமலையின் அரசடி தான் அவரது வளர்ந்த இடம். தந்தை யோசெப். தாய் திரேசம்மா. திருகோண மலையின் புனித சூசையப்பர் கல்லூரியில் கல்விகற்றவர், 1982ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து 1983ஆம் ஆண்டில் தனது 19ஆவது வயதில் பயிற்சிக்காக இந்தியா சென்றார். தமிழ்நாட்டின் சிறுமலையில் நடந்த 3ஆவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றார். இவரது பயிற்சிமுகாம் கூட்டாளிகளில் ஒருவர்தான் கருணா. பயிற்சி முடிந்ததும் யாழ்ப்பாணம் வந்து சில மாதங்கள் நின்றார். அதன்பின்னர் மீண்டும் இந்தியா அழைக்கப்பட்டார். அவரை இந்தியாவுக்கு அழைத்தது விக்ரர். காரணம், பிறிதொரு பயிற்சிக்காக. அந்தச் சமயத்தில் இலங்கைத்தீவில் ஆர்.பி.ஜி என்றொரு ஆயுதமே பாவனையில் இருக்கவில்லை. இந்தியாவில் வைத்து சொர்ணம், தேவன் உள்ளிட்ட சிலரிற்கு பயிற்சி வழங்கப்பட்டது. (பின்னர் 1985இல் யாழ்ப்பாணத்தில் பண்டிதரின் முகாம் சுற்றிவளைப்பில்தான் இலங்கைப் படையினர் அதனை முதன்முதலாக கைப்பற்றி கண்கொண்டு பார்த்தனர்) இந்தியாவில் பயிற்சி பெற்ற சமயத்தில் அமைப்பின் தலைவ ரின் பாதுகாவலர் அணியில் தேர்வு செய்யப்பட்டார். இந்த தேர்வு விக்ரரினால் தான் நடத்தப்பட்டது. சொர்ணத்தின் உயர்ந்த தோற்றமும், இயல்பான கறார்த்தன்மையும் விரைவிலேயே அவரை தனித்தன்மைமிக்கவராக அடையாளம் காட்டியது. சொர்ணம் எவ்வளவு திறமைகள் மிகுந்தவராக இருந்திருப்பினும், அவர் வேறு பணிகளில் இருந்திருந்தால் அவ்வளவு விரைவில் அடையாளம் காணப்பட்டிருக்கமாட்டார். அமைப்பின் தலைவரின் மெய்ப்பாது காவலராக இருந்தமை என்பது அவரை விரைவிலேயே ஏணிப்படிகளில் ஏற்றிவிட்டது. பின்னாட்களில் குமரன், வேலவன், இரட்ணம் என எண்ணற்ற உதாரணங்களை கூறமுடிந்தாலும் விடுதலைப்புலிகளின் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்களாக இருப்பதால், விரைவிலேயே அடையாளம் காணப்பட்டு நட்சத்திரமான முதலாமவர் சொர்ணம்தான்.

தலைவரின் தீவிர விசுவாசி

ஆரம்பநாள்தொட்டு அவர் ஒரு தீவிரம்மிக்க போர்வீரனாக இருந்தார். ஒரு தீவிரம் மிக்க போராளி அவர். செயலின் இரண்டாம் விளைவுகளைச் சிந்திப்பவராக இருக்க வில்லை. இன்னும் விளக்கமாக சொன்னால், மூர்க்கத்தனமாக மேடையில் மோதிக் கொள்ளும் மல்யுத்தவீரனின் இயல்பைக் கொண்டிருந்தார். இதனைவிட மேலதிகமாக, அவர் தனது தலைமையை தீவிரமாக நேசிப்பவராக இருந்தார். அந்த விசுவாசம் பற்றி இரண்டாவது கேள்வியை எவருமே கேட்கமுடியாது. அதனை தனது வரலாற்றின் மூலம் நிரூபித்தும்விட்டார். ஏனெனில் அவர் மரணித்தபோது, இறுதியாக சொன்ன வாசகங்களில் ஒன்று, தலைவர் மரணிப்பதை தன்னால் கண்கொண்டு பார்க்க முடியாது. அதற்கு முன்பாக மரணித்து விட வேண்டும் என்பதே. விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியை சகித்து கொள்ள முடியாமல் மரணமான முதலாவது உயிரும் அவர்தான். அவர் களத்தில் கொண்டிருந்த தீவிரத்திற்கும், அமைப்பில் கொண்டிருந்த விசுவாசத்திற் கும் இவற்றை உதாரணமாக சொல்லலாம். கெரில்லாக்களாக வாழ்ந்த விடுதலைப்புலிகளின் ஆரம்பநாள்களில் அவர் ஒரு முன்னுதாரணம் மிக்கவராக விளங்கினார். எல்லாக் காரியங் களும் தீவிரமான உறுதியினாலும், விடாமுயற்சியினாலுமே சாதிக்க முடிபவையாக இருந்தன. உணவில்லாமல் இருக்க வேண்டுமா, இருந்தார். காட்டுக்குள் பதுங்கியிருக்க வேண்டுமா, பதுங்கியிருந்தார். பதுங்கியிருந்து ஒரு தாக்குதலை நடத்த வேண்டுமா, நடத்தினார். நேருக்குநேராக நின்று மோத வேண்டுமா, மோதினார். ஒருதரமும் இமைக்காமல் தனது தலைவரை பாதுகாக்க வேண்டுமா, பாதுகாத்தார். இவையெல் லாம் சேர்ந்து அவரை பிறிதெல்லாரையும் விட தனித்துவமானவராக தலைவரிடம் அடையாளம் காட்டியது. விடுதலைப்புலிகள் அமைப்பில் பராய வித்தியாசமில்லாமல் பிரபாகரனிடம் ஆத்மார்த்தமான பிணைப்பு கொண்டிருந்தவர்கள் பலர். வயதில் மூத்த அன்ரன் பாலசிங்கத்தில் தொடங்கி 30 வயதில் இறந்த சிலம்பரசன் வரை எண் ணற்ற உதாரணங்களை இதற்குச் சாட்சியாக கூற முடியும். இவர்களில் யார் உயர்ந்தவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலும் இலங்கை அதிசயம்தான்

■ அக்கினி புத்திரன்

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் முதற் கொண்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வரை வேலை யில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்கமுடியாமல் திண றிக் கொண்டிருக்கின்றன. அதிலும் அண்மையில் உல களவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி வேலையற் றோர் தொகையை பல மடங்கு அதிகரிக்கச் செய்துவிட் டது. பல நாடுகள் அகதிகள் வருகையைப் பெரும் எடுப் பில் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருவற் கும் இந்த வேலையில்லா பிரச்சினை ஒரு முக்கிய காரணம். இந்த விடயத்தில் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மட்டுமன்றி உலகின் அதிசயமாகவே மாறி விட்டது. அதாவது இலங்கையில் இயங்கும் ஆடைத் தொழிற் சாலைகளில் கடந்த வருடம் பதினைந்தாயிரம் பணி வெற்றிடங்கள் நிலவி யதாகவும் இந்தவருடம் இது மேலும் அதிகமாக இருக்கலாம் எனவும் தெரிய வந் துள்ளது. உண்மையிலேயே இது ஒரு அதிசயமான தகவல்தான். இலங்கையிலிருந்து சென்று, மத்திய கிழக்கு நாடுகளில் 18 இலட்சம் பேர் பணி யாற்றுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 80 வீத மானோர் வீட்டுப் பணிப் பெண்கள். வீட்டுப் பணிப் பெண்கள் வேலை என்பது எவ்வளவு கடினமானது என்பது எல்லோருமே அறிந்த விடயம்.

ஏறக்குறைய 15 மணி நேரம் கடுமையாக உழைக்க வேண்டும். பல இடங்களில் சித்திரவதைகளை அனுப விக்க வேண்டியும் வரலாம். சிறு சிறு குற்றங்களுக்கு கூட தசையடி, சிறைவாசம் என்பவற்றை சந்திக்க வேண் டும். கழுத்து வெட்டப்பட்டு மரண தண்டனை, சடலமாக அனுப்பப்படுதல் போன்ற கொடுமைகளையும் அனுப விக்க வேண்டி வரலாம்.

எனினும் குடும்ப வறுமை காரணமாக எந்த வித பாதுகாப்புமற்ற இடத்துக்கு கடல் கடந்து சென்று பண முழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமது பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அப்படியானால் சொந்த நாட்டில் ஆடைத் தொழிற் சாலைகளில் வேலைக்கான பணியிடங்கள் குவிந்து கிடக்க ஏன் எமது பெண்கள் மத்திய கிழக்கு நாடுக ளில் கடினமான உயிராபத்தான பணிகளுக்குச் செல் கிறார்கள்.

ஏன் இந்த நிலமை?

இலங்கையில் ராஜபக் ஷ சகோதரர்களின் குடும்ப ஆட்சியே நிலவுகின்றது என ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதற்கமைய நிதி, பாதுகாப்பு, பொருளாதார அபி விருத்தி ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கிடையே உண்டு. எனவே இலங்கை யின் பொருளாதாரம் , பாதுகாப்பு ஆகியவற்றின் முழுமை யான கட்டுப்பாடு இந்த மூவருக்குமே உண்டு.

கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கூட்டங்களில் பேசிய சில கருத்துக்கள் முக்கியமானவை. அவர் பேசும் போது " உலகிலேயே ஒன்பதாவது பணக்காரர் மஹிந்த ராஜபக்ஷ" எனத் தெரிவித்திருந்தார். எனினும் இது பற்றி எவ்வித எதிர்க் கருத்தும் இதுவரை வெளிவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு நிறுவனங்களால் தொடர்மாடிக் கட்டடங்கள் நிறுவப்படும் போது அவற்றில் ஒரு தொகுதி ராஜபக் ஷ குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன எனவும், அவர்கள் அதை விற்றுக் கோடிக்கணக்கில் சம்பாதிக் கிறார்கள் என்றும் சில உறுதிப்படுத்தப்படாத தகவல் கள் தெரிவிக்கின்றன. இப்படியான கொடுக்கல் வாங் கல்களை உறுதிப்படுத்த முடியாது என்பதால் இவற் றின் உண்மைத் தன்மையை சமர்ப்பிக்க முடியாது உறுதிப்படுத்தவும் முடியாது.

இப்படியான நடவடிக்கைகளின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தான் ஆடைத் தொழிற்சாலைகள். அங்கு கூட அரசுத் தரப்பு சக்திகளின் ஆதிக்கமே மேலோங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

இலங்கையின் மொத்த பொருளாதார உற்பத்தியின் நாலில் ஒரு பங்கு 10 குடும்பங்களின் கையிலேயே உள்ளது. இதே நிலை இலங்கையில் அந்நியச் செலா வாணியைப் பெற்றுத் தரும் ஆடை உற்பத்தித் துறை யில் நிலவுகிறது.

அதாவது இங்கையின் ஆடை உற்பத்தித் துறை அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த 10 குடும்பங்களின் கைகளிலேயே உள்ளது. ஒன்றிரண்டு தொழிற்சாலை கள் வேறு நபர்களிடமிருந்த போதும் இந்தத்துறையின் மேலாதிக்கம் அரச சார்பாக உள்ள தனியாரிடமே உள்ளது.

ஆடை உற்பத்தித்துறை அரச தரப்பின் வசம் இருப் பதற்கும், அங்கு பணிக்கு ஆள்கள் வராமல் இருப் பதற்கும் சம்பந்தம் என்ன?

அங்கு பணிபுரியும் ஒரு பெண்ணுக்கு மாதம் 78 அமெரிக்க டொலரே அதாவது ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாவே சம்பளமாக வழங்கப்படுகிறது. இங்கு பணி புரிவதற்காக கிராமங்களிலிருந்து வரும் பெண்கள் வீட்டு வாடகை, சாப்பாட்டுச் செலவு என உழைக்கும் பணத்தை முழுமையாகச் செலவிட்டால் அவளின் வீட்டுக்கு அனுப்ப எப்படிப் பணம் மிஞ்சும் ? எனவே வேலைக்கு வரும் பெண்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் நின்று விடுகின்றனர். சம்பள உயர்வு பற்றி ஏதாவது பேசி னாலோ அல்லது தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர் பாக ஏதாவது முயற்சி எடுத்தாலோ தமது அரசியல் செல் வாக்கைப் பாவித்து உரிமையாளர்கள் பொலிஸ் மூல மாகவோ, குண்டர்கள் மூலமாகவோ அவற்றை முளை யிலேயே கிள்ளி விடுவார்கள்.

இப்படியான நிலையில் அவர்களுக்கு வேலையை விட்டுச் செல்வதை விட வேறு வழியில்லை. புதிதாக வருபவர்க ளும் ஒன்றிரண்டு மாதங்களில் ஓடி விடுவார்கள். எனவே தான் உள்ளூர்க் கொடுமையை விட மத்திய கிழக்கு கொடுமை பரவாயில்லை எனப் பலரும் வெளிநாடு செல்கின்றனர்.

எப்பிடியிருப்பினும் அரசியல் அதிகாரம் மூலம் ஒரு சாரார் மேலும் மேலும் பணக்காரர் ஆக, பொது மக்களோ மேலும் மேலும் வறுமையில் தள்ளப்படுகிறார்கள். இத னால் உலக நாடுகள் வேலையில்லா திண்டாட்டத்தில் தடுமாற இலங்கையோ வேலைக்கு ஆள் கிடைக்காத அதிசயத்தில் மிதக்கிறது . இதுவும் மஹிந்தசிந்தனை யின் சாதனை தான்.

உணர்வின் ஊற்று

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்புபவர்களா? அப்படியாயின் உங்களுடைய கவியாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகி யிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை கவிதையாக்கி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முடிவுத் திகதி: 30.06.2014

தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி:

உணர்வின் ஊற்று 2

சுடர் ஒளி

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ வேல்.தர்மா

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் கழுகுப்பார்வை படர முன்னர் லிபியாவின் மும்மர் கடாஃபி ஈராக்கின், சதாம் ஹூசேய்ன் என இரு பெரும் தலைவர்கள் இருந்தார்கள். இருவரும் மதச்சார்பற்ற ஆட்சியை நடாத்தினார்கள். கடாஃபி தனது நாட்டில் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்கினார். சதாம் கட்டாய இலவசக் கல்வியை வழங்கினார். கடாஃபி மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். சதாம் நாடெங்கும் மின் விநியோகத்தை இலகுவாக்கினார். பல்வேறு இனக் குழுமங்களைக் கொண்ட

பிளவுபடும் ஈராக்

லிபியாவில் இன மோதல்கள் இன்றி கடாஃபி ஆட்சி செய்தார். சியா மற்றும் சுனி முஸ்லிம்களிடையே மோதல் இல்லாமல் சதாம் ஆட்சி செய்தார்.

சதாமும் கடாஃபியும் அடக்குமுறை ஆட்சியாளர்களாகவே இருந்தார்கள். இதற்குக் காரணம் மேற்கு நாடுகளுக்கு ஆதரவானவர்கள் அவர்களது ஆட்சியைக் கவிழ்க்க தொடர்ந்து சதி செய்து கொண்டே இருந்தனர். சதாம் குவைத், சவுதி அரேபியா போன்ற நாடுகளை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர முயன்றார். அதை அவர் படைவலு மூலம் சாதிக்க முற்பட்டார். கடாஃபி மற்ற நாடுகளுடன் இணைந்து ஒரு ஐக்கிய ஆபிரிக்க அரசை உருவாக்க முற்பட்டார். சதாம் மசகு எண்ணெய் விலையை அமெரிக்க டொலரில் நிர்ணயிப்பதை நிறுத்தி யூரோவில் நிர்ணயிக்க வேண்டும் என்றார். கடாஃபி ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலையை இத்தனை கிராம் தங்கம் என நிர்ணயிக்க வேண்டும் என்றார். அமெரிக்க டொலருக்கு எதிராக செயற்பட்ட இவர்கள் இருவரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஈராக்கில் அமெரிக்கா படை எடுத்தது. சதாம் ஹூசேய்ன் நீதி விசாரணை செய்து தூக்கில் இடப்பட்டார். லிபியாவில் நேட்டோப் படைகள் குண்டு மாரி பொழிந்தன. மும்மர் கடாஃபி தப்பி ஓடுகையில் நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டார்.

ஈராகில், சுனி, சியா, குர்திஷ் ஆகிய இனத்தவர்கள் வாழ்கின்றனர். மூன்றில் இரண்டு பங்கு சியா முஸ்லிம்களைக் கொண்ட ஈராக்கின் கிழக்குப் பிராந்தியத்தில் சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். சதாம் ஹூசேய்ன் சிறுபான்மையினரான சுனி முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர். ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாட்டுப் படைகள் அங்கிருந்து விலகும் போது ஈராக்கில் ஒரு "மக்களாட்சியை" உருவாக்கின. ஈராக்கில் 2006 ஆம் ஆண்டில் இருந்து நௌரி அல் மலிக்கி தலைமை அமைச்சராக இருக்கின்றார். ஊழல் மிகுந்த இவரது ஆட்சியில் சுனி முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டும் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். இதனால் சுனி முஸ்லிம்களிடையே தீவிரவாதம் தலை தூக்கியது. ஐ.எஸ்.ஐ.எஸ் என்னும் அமைப்பு உருவானது. ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது அபூபக்கர் அல் பக்தாடி தலைமையில் இயங்கும் ஒரு சுனி முஸ்லிம் அமைப்பாகும். Islamic State of Iraq and Syria என்பதன் சுருக்கமே ஐ.எஸ்.ஐ.எஸ் ஆகும். இது அல் கெய்டாவின் கிளை அமைப்பு, இணை அமைப்பு எனப் பல மேற்கத்தைய ஊடகங்கள் பரப்புரை செய்தாலும் இதற்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அல் கெய்டா மறுத்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு ஈராக்கிலும் சிரியாவிலும் உள்ள பிரதேசங்களை இணைத்து ஒரு இஸ்லாமிய அரசை உருவாக்க வேண்டும் எனப் போராடுகின்றது. இந்த அமைப்பு திடீரென ஈராக்கின் வட பிராந்தியத்தில் உள்ள பல நகரங்களைக் கைப்பற்றி தலைநகர் பாக்தாத்தை நோக்கி முன்னேறிவருவது முழு உலகத்தையுமே ஆச்சரியப் படுத்தியுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் எத்தனை போராளிகள் இருக்கிறார்கள் என யாருக்கும் தெரியாது. சில கணிப்பீடுகள் பத்தாயிரம் என்கின்றன. ஆயினும் இந்த அமைப்பு தம்மிலும் பார்க்க பத்து மடங்கு அதிக எண்ணிக்கையைக் கொண்ட ஈராக்கின் அரச படைகளை சின்னாபின்னப்படுத்தி வருகின்றது.

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு பெரும் நிலப் பரப்புகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கையில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக தனி நாடு கோரிப் போராடும் குர்திஷ் இனத்தின் பெஸ்மேர்கா போராளி அமைப்பு எண்ணெய் வளமிக்க கேர்குக் நகரத்தை ஒரு துப்பாக்கிக் குண்டு கூட வெடிக்காமல் கைப்பற்றிக் கொண்டது. குர்திஷ் மக்களின் தலைவர் மஸ்ஸோட் பர்ஜானி குர்திஷ் மக்களுக்கு என்று ஒரு அரசு உருவாகிக் கொண்டிருக்கின்றது என்றார்.

ஈராக்கில் சுனி முஸ்லிம்களுக்கு என ஒரு அரசு, சியா முஸ்லிம்களுக்கு என ஒரு அரசு, குர்திஷ்களுக்கு என ஒரு அரசு என மூன்றாகப் பிளவு படும் ஆபத்து இப் போது அதிகரித்துள்ளது. இதில் சுனி முஸ்லிம்களுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும், சியா முஸ்லிம்களுக்கு ஆதரவாக ஈரானும், குர்திஷ் மக்களுக்கு ஆதரவாக துருக்கியும் செயற்படுகின்றன. பலகாலமாக குர்திஷ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்து வந்த துருக்கி இப்போது அவர்களுடன் நல்ல உறவை வளர்த்து வருகின்றது. ஈராக்கில் குர்திஷ் மக்களுக்கு என ஒரு அரசு உருவானால் அது துருக்கியின் நட்பு நாடாக அமைவதுடன் துருக்கிக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவும் அமையும் என்ற நிலை இப்போது உருவாகியுள்ளது.

ஈராக் துண்டுபடும் நிலை ஏற்பட்டால் அங்கு ஒரு உறுதியான குர்திஷ் அரசு அமைய வேண்டும் என்பது துருக்கியின் விருப்பமாக உள்ளது.

ஈராக்கில் வைத்து ஈரானுக்கு ஒரு பாடம் புகட்ட சவுதி அரேபியா முயல்கிறது. ஈராக்கின் தற்போதைய சியா முஸ்லிம்களின் ஆட்சியைப் பாதுகாக்க ஈரான் பலவழிகளில் முயல்கின்றது. சியா முஸ்லிம்களின் தலைமையில் ஒரு உறுதியான ஆட்சி இருந்தால்தான் எரிபொருள் உற்பத்தி சீராக நடக்கும் என அமெரிக்கா நினைக்கிறது. ஈராக்கில் பரம வைரிகளான அமெரிக்காவும் ஈரானும் இணைந்து செயற்பட வாய்ப்பு உள்ளது. இதற்கான தனது விருப்பத்தை ஈரானிய அதிபர் ஹசன் ரௌஹானி தெரிவித்துள்ளார். ஆனால் சிரியாவிலும் லெபனானிலும் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு ஆதிக்கம் செலுத்துவதுடன் ஈராக்கில் ஈரானின் குடியரசுக் காவற்படையினலும் ஈரான் ஆதிக்கம் செலுத்துவது அமெரிக்காவை சற்று உறுத்தவும் செய்கின்றது. வெளி உதவியின்றி ஈராக்கின் சியா அரசு நிலைக்காது. ஈரானும் அமெரிக்காவும் ஒத்துழைத்தால் சவுதி அரேபிய அமெரிக்க உறவு மேலும் மோசமடையலாம். ஏற்கனவே சிரிய விவகாரத்தில் அமெரிக்காவின் அணுகு முறையில் சவுதி கடும் அதிருப்தியடைந்துள்ளது. இதனால் ஈராக்கில் மூன்று அரசுகள் உருவாகும் சாத்தியம் அதிகமாகின்றது.

ஈராக்கின் தற்போதைய பிரச்சினையில் ஒரு சதிக் கோட்பாடும் இருக்கின்றது. ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறும் போது ஒரு பத்தாயிரம் படைகளையாவது வைத்திருக்க வேண்டும் என அமெரிக்கா விரும்பியது. ஆனால் ஈரானின் ஆட்சேபனையால் அது கைவிடப்பட்டது. அதன் விளைவாகத்தான் இப்போது ஈராக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது என்கின்றன அமெரிக்க சார்பு ஊடகங்கள். இது ஆப்கானிஸ்தானில் பெருமளவு அமெரிக்கப்படையினர் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை ஆப்கானிஸ்தானியர்களுக்கு உணர்த்த நடத்தப்படும் நாடகமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாண சபைக்கு ஆயுதம் தரிக்காத போக்கு வரத்து பொலிஸாரைக் கொண்ட பொலிஸ் அதிகாரம் வழங்குவது . அதாவது மஹிந்த - மோடி சந்திப்பின் போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்தும் படியும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு அளிக்கும் வகையில் அதற்கு மேலதிகமாக வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார். அதன் பின் னரே நன்றாக யோசித்து விட்டு, மஹிந்த ராஜபக்ஷ ஆயுதமில்லாத பொலிஸ் வழங்கத் தயாராகிவிட்டார்

■ ஆசாத்

இறகு போடாத மயில்

"மயிலே மயிலே இறகு போடு" என்று கெஞ்சிக் கொண்டி ருந்தால் மயில் இறகு போடாது என ஒரு பழமொழி உண்டு. ஏதாவது நிர்ப்பந்தம் ஏற்பட்டாலே அது இறகு போடும்.

இப்போது இலங்கையில் எவரும் கேட்காமலே இறகு போடுவது போன்ற ஒரு தோற்றப்பாடு தெரிய ஆரம்பித் துள்ளது . ஆனால் இந்த மயில் இறகு போடுவது போல் ஏமாற்றிச் சாதகமான சூழலை உருவாக்குவதை நோக்க மாகக் கொண்ட நரித்தந்திரம் மிக்க மயில்.

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடித்ததாகக் கூறப்பட்டு கைது செய்யப் பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கும் படி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டளை யிட்டுள்ளார். அது இந்தியாவின் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதை ஒட்டி நல்லிணக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனக் கூறப்பட்டது.

ஏற்கனவே இந்தியப் பிரதமராக நரேந்திரமோடி பதவி யேற்றபோதும் கூட நல்லெண்ண அடிப்படையில் இலங் கைச் சிறையிலிருந்த இந்திய மீனவர்கள் விடுவிக் கப்பட்டார்கள்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையே முதல் சுற்றுப் பேச்சு இடம்பெற்று முடிந்த பின்பு கூட இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய் யப் பட்டனர். அந்த மீனவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற முடியாது என்ற தமிழக முதல்வரின் உறுதியான நிலைப்பாட்டால் அந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் நல்லெண் ணத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படவில்லை. தமிழக முதல்வரின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே விடுவிக்கப் பட்டனர். அப்போது வராத நல்லெண்ணம் இப்போது மட்டும் வந்துள்ளது என்பது வியப்புத்தான்.

இதுவரை 500 தடவைகளுக்கும் அதிகமாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட் டுள்ளனர். முந்நூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் அடித் தும், காயப்படுத்தப்பட்டும் , கொல்லப்பட்டுமுள்ளனர். ஏராள மான படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் சேத மாக்கப்பட்டுள்ளன.

அதாவது இலங்கைக் கடற்படையினர் போரின் போதும் சரி போரின் பின்னரான நாள்களிலும் சரி இந்திய மீன வர்களை ஒரு எதிர்ப்படை போலவே கருதிச் செயற் பட்டு வந்துள்ளனர்.

அப்போதெல்லாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு நல்லெண்ணம் ஏற்படவில்லை. அதிலும் இலங்கை அரசுக்கும், இந்தியாவுக்குமிடையே நெருக்கமான உறவு நிலவிய அந்த வேளையிலும் இந்திய மீனவர்கள் மீது ஒரு கடும் போக்கே கடைப்பிடிக்கப்பட்டது.

ஆனால் இப்போது மட்டும் அடுத்தடுத்து இந்திய மீனவர் கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் விடுதலை செய் யப்படுவது ஒரு அதிசயமான முன்னெடுப்புத்தான்.

ஆனால் இது தானாக மயில் இறகு போடும் சம்பவ மல்ல. அடிப்படையில் தானாகவே இறகு போடுவது போன்ற ஒரு நாடகம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மன்மோகன் சிங்குமல்ல. தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கருணாநிதியுமல்ல. இருவருமே அதிரடி நடவடிக்கைகளுக்குத் தயங்காதவர்கள். தாம் சரியென நினைப்பவற்றை எவ்வித விட்டுக்கொடுப்புமின்றி இறுக்க மாகச் செய்து முடிப்பவர்கள். இதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றாகவே தெரிந்து வைத்துள்ளார்.

அப்படியான ஒரு சர்ந்தர்ப்பத்தில் தான் நரேந்திரமோடி - ஜெயலலிதா சந்திப்பு நிகழந்துள்ளது. இந்தச் சந்திப்பின் போது தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து இலங்கையின் வடக்கு, கிழக்கிலும் , புலம்பெயர் தமிழர் மத்தியிலும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டு மென ஐக்கிய நாடுகள் சபையை இந்தியா கோரவேண்டு மென தமிழக முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார். அது மட்டுமன்றி கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டு மெனவும் ஜெயலலிதா மோடியை வற்புறுத்தினார்.

இதுநாள்வரையும் காங்கிரஸ் அரசின் பலவீனத்தை வைத்துக் கொண்டு வாலாட்டி வந்த இலங்கை அரச தரப்பினருக்கு இது ஒரு அதிர்ச்சி வைத்தியமாக அமைந்து விட்டது.

இந்த இரு கோரிக்கைகளும் இலங்கையின் சம் மதத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக இனப்பிரச்சினைத் தீர்விலும், மீனவர் பிரச்சினை விடயத்திலும் இலங்கை யில் [illegible] இந்தி யாவே கையாளவேண்டும் என்பதே ஜெயலலிதாவின் எதிர்பார்ப்பு. அதாவது இவற்றில் இலங்கை அரசின் விருப்பு வெறுப்பு களை அவர் பெரிதுபடுத்தவில்லை. எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ வழமையான வட்டத்தைவிட்டு வெளியே வரவேண்டிய சூழ்நிலை தோன்றிவிட்டது என்பதை நன்றாகப் புரிந்துவிட்டார்.

எனினும் அவர் தனது வழமையான ஏமாற்று நாடகத் திலும் நம்பிக்கை இழந்து விடவில்லை. அதனால் தான் இப்போது மஹிந்த மயில் ஒரு மெல்லிய சிலிர்ப் பில் இரு இறகுகளைப் போடப் போவதாக ஒரு தோற் றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்று நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவது என்ற போர்வையில் மீனவரை விடுவிப்பது. (இது மீனவர் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்கு கச்சதீவை இந்தியா மீளப் பெற வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கை ஏற்படுத்திய அதிர்வின் விளைவு தான்)

அடுத்தது மாகாண சபைக்கு ஆயுதம் தரிக்காத போக்கு வரத்து பொலிஸாரைக் கொண்ட பொலிஸ் அதிகாரம் வழங்குவது . அதாவது மஹிந்த- மோடி சந்திப்பின் போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்தும் படியும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு அளிக்கும் வகையில் அதற்கு மேலதிகமாக வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார். அதன் பின் னரே நன்றாக யோசித்து விட்டு, மஹிந்த ராஜபக்ஷ ஆயுதமில்லாத பொலிஸ் வழங்கத் தயாராகிவிட்டார். அடிப்படையில் இந்திய அழுத்தங்களை சமாளிக்கும் வகையில் மயில் இரு இறகுகளைப் போடுவதாகவே ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இது உண்மையில் இறகுகளல்ல. இறகு போன்ற வடிவி லான சருகுகள் மட்டுமே. இங்கும் வழமையான ஏமாற்று விளையாட்டுத் தான்.

இலங்கை சர்வதேச விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலையிலும் அது இறகு போடாத மயிலாகவே உள்ளது.

ஒரு புறம் ஐக்கிய நாடுகள் சபையாலும் , மறுபுறம் இந்தி யாவாலும் ஏற்படக்கூடிய அழுத்தங்கள் இலங்கையில் இறகு போட வைக்கும் நிலையையே உருவாக்கும் என்பதுக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் கருணையும் பொதுபலசேனாவின் குருதியும்

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக பேரினம் தன்னுடைய அடுத்த இரை எது என்பதை வெளிப்படையாகக்காட்டி விட்டது. எப்போதுமே சிறுபான்மை இனத்தவரின் இருப்பு தன்னுடைய அதிகாரத்துக்கு சவாலாகவே இருக்கும் என்றே பேரின ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். எனவே தம்மை எதிர்க்கும் இனம் பூண்டோடு அழிய வேண்டும் அல்லது தலைகுனிந்து பேரினத்தில் கட்டளைக்கேற்றபடி ஆடவேண்டும். இதற்காக ஆட்சியாளர்கள் வெவ்வேறு திட்டங்கள் போடுவார்கள். ஒன்று தோற்றால் அடுத்த திட்டத்துக்கு தாவுவார்கள். இத்தகைய நிகழ்வுகளே வரலாற்றின் பக்கங்களில் அனேகமாகக் காணப்படுகின்றது. ஹிட்லரின் யூத எதிர்ப்புக்கொள்கை லட்சக்கணக்கான அப்பாவி யூதமக்களை காவுகொண்டது. அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானோருக்கு தாங்கள் எதற்காகக் கொல்ல்ப்படுகின்றோம் என்ற காரணம் கூடத் தெரியாமல் இருந்தது. அவர்கள் ஹிட்லரின் ஆட்சியை எதிர்க்கவில்லை. ஜேர்மனிக்கு எதிராக துரும்பளவு கூடத் துரோகம் செய்யவில்லை. ஆயினும் அவர்கள் கொல்லப்பட்டார்கள். காரணம் அவர்கள் அனைவரும் பிறப்பால் யூதர்களால் இருந்ததுதான். இந்த இனச் சுத்திகரிப்பு என்ற வேலையை ஹிட்லர்போன்ற கொடுங்கோலர்களே செய்துவந்திருக்கின்றார்கள். இரண்டாம் உலகப்போரின் முடிவோடு ஜேர்மனி ஹிட்லரின் சகாப்தம் முடிவுற்றாலும் வேறு பெயர்களில் வேறு ரூபங்களில் புதிய ஹிட்லர்களின் பிரசவம் நிகழ்ந்தபடிதான் இருக்கின்றது. இப்போதைய ஹிட்லர்கள் தனிமனிதனாக மட்டுமின்றி அமைப்பு ரீதியாகவும் உருவெடுத்திருக்கிறார்கள். தமக்கெதிரான இனமொன்றை கருவறுக்க இலங்கையின் பேரினம் அண்மையில் உற்பத்திசெய்த ஒரு அமைப்புத்தான் பொதுபலசேனா. தமிழர்களுக்கெதிரான இனப்போரை முடிவுக்கு கொண்டுவந்தபின்னர் சிங்களப் பேரினவாதிகளுக்கு முஸ்லிம்கள் அச்சுறுத்தலானவர்களாகத் தெரிந்தார்கள். ஏனெனில் இலங்கையில் முக்கிய பொருளாதார நிலைகளை முஸ்லிம்களே தம்வசப்படுத்தியிருந்தார்கள். இந்த நிலைமை நீடித்தால் ஒரு காலத்தில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கையின் பொருளாதாரம் சென்றுவிடும் சாத்தியங்களும் அதிகம். அத்துடன் உலகளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் நாடுகளின் தொடர்புகளால் அவர்கள் அரசுக்குகெதிரான கிளர்ச்சிகளிலும் ஈடுபடலாம் என்று பேரினம் நம்பியது அல்லது அவ்வாறான பிரமையில் மூழ்கியது.

இதன் விளைவாகவே முஸ்லிம்களை ஆட்டம்காணச்செய்வதற்கு பேரினத்தின் கொடூர சக்திகள் பொதுபலசேனாவாக அவதாரம் எடுத்தன. இந்த அமைப்பின் தோற்றம் முதல் பேருவளை அளுத்கம வன்முறை வரை முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளே முதன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஹலால் முத்திரை நீக்கம் - பள்ளிவாசல்கள் இடிப்பு - மாடுவெட்டுவதற்கு எதிரான போராட்டம் என்று பொதுபலசேனா தனியே முஸ்லிம் மக்களை ஒடுக்குவதில் மட்டுமே தன் கவனத்தை செலுத்துகின்றது. முஸ்லிம்களை ஒடுக்கும் பொதுபலசேனாவின் நடவடிக்கைகளில் முஸ்லிம் அமைச்சர்கள் கூடத் தப்பவில்லை. அந்த அமைச்சர்கள் என்னதான் அரசின் அடிவருடிகளாக இருந்தபோதும் அவர்களின் அலுவலகத்திற்குள்ளே நுழைந்து அடாவடி செய்யும் அளவுக்கு பொதுபலசேனாவின் நடவ டிக்கைகள் தீவிரம் பெற்றிருந்தன. இந்த அமைப்பின் செயற்பாடுகள் எதனையும் அரசு வாய்திறந்து கண்டித்ததில்லை. கைகட்டிக் கொண்டு முகத்தில் புன்னகை தவழ வேடிக்கை பார்த்து மகிழ்ந்தது. இந்தத் தைரி யத்தில்தான் முஸ்லிம் மக்களின் குடியிருப்புகளை எரித்தும் அவர்களைக் கொன்றும் அந்த அமைப்பு வெறியாட்டம் ஆடியிருக்கிறது. இனியாவது இந்தக் கொலைகார அமைப்பை தடைசெய்ய அரசு முன்வரவேண்டும். இல்லாவிட்டால் இலங்கையில் புத்தரின் கருணை கடுகளவும் இல்லாமல் போய்விடும்.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சீகை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

இலங்கையின் இனப்பிரச்சினையை மதவாதப் பிரச்சினையாக மாற்றி சர்வதேச அழுத்தங்களில் தப்பித்துக் கொள்ளும் காய்நகர்த்தல்களில் அதிகார பீடம் மும்முரமாக இறங்கியிருக்கிறது. பொதுபல சேனா, சிங்கள ராவண போன்ற பௌத்த இனவாத அமைப்புக்கள் இந்தச் செயற்றிட்டத்திற்காக களமிறக்கப்பட்டு இருக்கின்றன. சிங்கள இனவாதத்தை தொடர்ந்தும் தக்கவைத்திருந்தாலே வாக்கு வங்கியைச் சிங்கள மக்கள் மத்தியிலே காப்பாற்றிக் கொள்ளலாம் என்றே ஆட்சியாளர்கள் சிந்திப்பதாகத் தெரிகின்றது. சிங்கள - முஸ்லிம் மக்களுக்கிடையே பிரிவனை வாதத்தை தூண்டுவதில் பௌத்த அமைப் புக்கள் வெற்றி கண்டும் வருகின்றன. இதற்கு மிகப் பிந்திய உதாரணமே பேருவளை, அளுத்கம இனவன் முறை. இந்த வன் முறையின் போது மூவர் உயிரிழந்ததுடன், 80க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இது தவிர பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும், வீடுகளும் எரியூட்டப்பட்டன.

பொதுபல சேனா ஒரு பயங்கரவாத அமைப்புக்கு நிகரான அமைப்பென்று அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களே கூறி வருகின்றனர். இந்த நிலையில் பேருவளை ,தர்க்கா நகர் நோக்கி இந்த அமைப்பினர் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த எப்படி அனுமதியளிக்கப்பட்டது ? அதுவும் குறித்த பேரணி இனக்கலவரம் ஒன்றுக்கான சதி என்று முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து பொலிஸில் முறையிட்ட பின்னரும் இதற்கு அனுமதியை வழங்கியது யார்? என்ற கேள்விகள் தவிர்க்க முடியாமல் எழுகின்றன. இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும் தெரியாமல் இலங்கையில் எவரும் மூச்சுக் கூட விட முடியாது. அப்படிப் பட்ட நிலையில் அளுத்கம, பேருவளை ஆர்ப்பாட் டத்தின் எதிர் விளைவுகளை ஏன் இந்தப் புலனாய்வுச்சிங்கங்கள் மோப்பம் பிடித்து அதனைத் தடுக்கவில்லை? என்ற கேள்வியும் மண்டையைக் குடையவே செய்கின்றது.

இப்பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போது கூட அளுத்கம, பேருவளை பகுதிகளில் நடைமுறைபடுத்தப் பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காலவரையறையின்றி நீடிக் கப்பட்ட செய்திகளையே கேட்க முடிந்தது. எனவே உண்மை களை மூடிமறைக்க இன்னும் அரசுக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது போலும்.

வன்முறையின் முன்கதை

கடந்த வாரம் பௌத்த பிக்கு ஒருவரின் சாரதியை முஸ்லிம் இளைஞர் ஒருவர் தாக்கியிருந்தார். இதன் எதிரொலியாக சம்பந்தப்பட்ட பிக்குவும் தாக்குதலுக்கு இலக்கானார். இதனை அடுத்து குறித்த முஸ்லிம் இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். ஆயினும் அவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு பிக்குகள் உள்ளிட்ட சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலோ அல்லது முஸ்லிம் பகுதிகளிலோ இப்படியொரு ஆர்ப்பாட்டம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்றிருந்தால் விளைவு என்னவாகி இருக்கும் என்பதை ஊகிக்க முடியாது. பயங்கரவாத தடைச்சட்டம் தொடக்கம் அவசர கால சட்ட விதிகள் வரை எல்லாமே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாய்ந்திருக்கும். பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் என்று கூறி இரவோடு இரவாக அப்பாவித் தமிழ் இளைஞர்கள் நாலாம் மாடியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டிருப்பார்கள். ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தை மட்டும் பொலிஸார் ஏன் கண்டும் காணாமல் விட்டுவிட்டனர். பொலிஸாரின் பாரபட்சம் இத்தோடு முடிந்து விடவில்லை. பிக்கு தாக்கப்பட்டதற்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று பொதுபல சேன அமைப்பினரால் பகுதியான தர்க்கா நகர் நோக்கி நகர்ந்து செல்ல பொலிஸ் கண்ணை மூடிக் கொண்டு அனுமதி கொடுத்தது.

குறித்த பேரணி மூலம் இனவன்முறை ஒன்றுக்கு திட்டம் தீட்டப்படுவதாக முஸ்லிம் அமைப்புகள் பொலிஸில் முறைப்பாடு செய்த பின்னும் பொதுபலசேனாவின் ஆர்ப் பாட்டத்தை தடுக்க பொலிஸார் சிறு துரும்பைக் கூட அசைக்க வில்லை. திட்டமிட்டபடி பொதுபல சேனாவின் பேரணி தர்க்கா நகர் நோக்கி நகர்ந்தபோது சில வீடுகள் தாக்கு தலுக்கு இலக்காகத் தொடங்கின. முஸ்லிம்களின் கடைகள் தீ மூட்டப் பட்டன. ஆனாலும் அங்கிருந்த பொலிஸார் உடனடி நடவடிக்கைகளில் இறங் காமல் கைகட்டி வேடிக்கை பார்த்தனர். வெலிவேரியாவிலும், சிலாபத்திலும் நிலைமை கட்டுமீறிச் சென்றதால் துப்பாக்கிச் சூடு நடத்திய அரசபடைகள் இங்கு மட்டும், துப்பாக்கியைக் குப்புறக் கவிழ்த்துவிட்டு, தம்பாட்டுக்கு இருந்தன. அங்கு அமைதியை நிலைநாட்ட(?) கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்த படை யினர், பேருவளையில் மட்டும் ஒரு இறப்பர் தோட்டாவை கூட பயன்படுத்தாதது ஏன்?

ஒருமாதிரி தமக்குத் தலையிடியாக இருந்த தமிழர்களின் எழுச்சிக்கும் உரிமைக்குரலுக்கும் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதிவிட்ட பேரினம், தன்னுடைய அடுத்த இரை தேடும் படலத்துக்கு முஸ்லிம்களைத் தேர்வு செய்திருக்கிறது. அதனால் தான் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் போர் முடிவுக்கு வந்தபின்னர் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

பள்ளி வாசல்கள் தகர்க்கப்படுகின்றன. முஸ்லிம்களின் வீடுகள் எரியூட்டப்படுகின்றன. பள்ளி வாசல்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. முஸ்லிம் அமைச்சர்களின் அலுவலகங்கள் பிக்குகளால் சோதனையிடப்படுகின்றன.

இனி, முஸ்லிம்களின் குருதியைக் குடித்து ஏவறைவிட்டால் தான் பேரினத்தின் பசி அடங்கும் போலும். இனியாவது அரசுடன் ஒட்டிக்கொண்டு சுயநல அரசியல் நடத்தும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தம்மினத்தைப் பாதுக்க, பதவிக் கதிரைகளை தூக்கி எறிந்துவிட்டு வருவார்களா என்பதே முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அனுஷ்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி: தடையும் பலியும்

எப்படி வந்தது வேள்வி?

- ஆலயப் பரிபாலன சபைத் தலைவர்

கவுணாவத்தை நரசிங்கர் ஆலயம் எப்ப தோன்றினது எண்டு எங்களில ஆருக்கும் தெரியாது. எண்டாலும் எனக்கு ஒரு ஆச்சி சொன்னவா 300 வருசத்துகு முந்தி இந்தியாவில் இருந்து வந்த ஒருவரால தானாம் எங்கட கோயில் ஆரம்பித்து வைக்கப்பட்டது எண்டு...

அப்பிடி இந்தியாவில் இருந்து வந்த இருவரில் ஒருவர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை அமைத்தாராம். மற்றொருவர் எங்கட கோயில் இருக்கிற இடத்திற்கு சூலம் ஒன்றும் கோழிச் சேவல் ஒன்றும் கொண்டு வந்தவராம். வந்து இந்த இடத்தில கோயில் ஒன்று அமைத்து வழிபட்டால் ஊருக்கு நன்மை என்று கூறி தான் கொண்டுவந்த சூலத்தை குத்தி விட்டு. அன்றே தான் கொண்டு வந்த கோழிச் சேவலையும் அறுத்து பலிகொடுத் தாராம்.. அதுக்குப் பிறகு அந்தக்காலத்தில முதல்முதலாக பெண்ணொருவரையே வெட்டி நரபலி கொடுக்கப்பட்டது. பிறகு எப்படி மனிசரை வெட்டுறது எண்டு தான் கிடாய் வெட்டத் தொடங்கினம். இப்படித் தான் தொடங்கினது எங்கட கிராமிய வழிபாடு.

இஞ்ச சைவக் குரு தான் பூசை செய்யுறது வழக்கம். வெள்ளிக்கிழமைகளில் இரண்டு நேரப்பூசை. மற்ற நாட்களில் ஒரு நேரப் பூசைதான். திருவிழா என்று செய்வது இல்லை. ஆறாம் மாதம் 6ஆம் திகதி பெரிய குடத்தில 20 நாட்களுக்கு தொடர்ந்து எரியுற அளவிற்கு எண்ணைவிட்டு விளக்கு ஏற்றுவோம். பிறகு 14ஆம் திகதி வேள்வி நடக்கும். அண்டைக்கு யாழ்ப்பாணச் சனம் முழுக்க எங்கட கோயில்ல தான் கூடும்.

இனி 20ஆம் திகதி 8ஆம் மடை .அது இரவு தான் நடக்கும். அதுக்கு இப்படி ஆடு வெட்டு இல்லை. பலகாரம் மட்டும் தான் படைப்பம்.

தொடர்ந்தும் நாங்கள் விளக்கு வைச்சா பிறகு வழமையான பாரம்பரியத்தில எது கும் மாத்த மாட்டம். முந்தி வேள்வி எண் டால் முதல் வெட்டுற ஆட்டின் தலையும் ஒரு சேவலின் தலையும் நெருப்பில சுட்டு படைப்பம். ஆனால் அது இப்ப இல்லை. இப்ப ஒரு ஆடும் ஒரு கோழிச் சேவலும் வெட்டி கறி சமைத்து அதோட கள்ளு. சாராயம் போன்ற குடிவகைகளும் பலகாரம் பழங் கள் என்று வைத்து படையல் செய்வம்.

கவுணாவத்தை நரசிங்க வைரவரின் அற்புதங்கள்

காலம் காலமாக எமது பரம்பரையினர் நோய் ஏற்பட்டாலோ அல்லது நரசிங்க வைரவருக்கு நேர்த்தி வைத்து தமக்கு வேண்டியதை கிடைக்கச் செய்வர். இது தான் எங்கள் நம்பிக்கை. தனியே ஆடு வெட்டுறது தான் நேர்த்தியில்லை. சிலர் வாழைக்குலை நேர்த்தி வைப்பர்.சிலர் பலாப்பழங்களை வெட்டி நேர்த்தி வைப்பர். சிலர் பலகாரங்கள் படைத்து நேர்த்தி வைப்பர்.

நோய் ஏற்பட்டால் வைரவரின் கையில் காசு நேர்ந்து கட்டி விட்டு வீட்டுக்கு வர நோய் குணமடைந்து விடும். எனது மகன் 8 வயது வரை வாய் பேசவில்லை. இத னால்எங்கள் எல்லோருக்கும்மிகுந்த கவலை. வைரவருக்கு கறுப்பு கடா வெட்டுவதாக நேர்த்தி வைத்து கடாவும் சொன்னபடி வெட்டினேன். எனது மகன் மறு நாள் வாய்பேச ஆரம்பித்தான். இப்படி வைரவ னின் அற்புதங்கள் சொல்ல முடியாதளவு இருக்கின்றன.

அனுமதியும் வழக்கும்

கவுணாவத்தை ஆலயத்தில் விலங்குகளைப் பலியிடக் கூடாது என்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் 1981ஆம் ஆண்டு பங்குனி 04ஆம் திகதிஅப்போது இந்து கலாசார அமைச்சராக இருந்த இராசதுரை என்பவர் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். எனினும் ஆலய நிர்வாகத்தினர் இங்கிருந்து கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு சென்று வழக்கில் வெற்றியும் பெற்று திரும்பினர்.

ஆலயங்களில் விலங்குகளைப் பலியிடக் கூடாது என்ற சட்டம் இலங்கையில் அன்று இருக்கவில்லை. எனவே இவ்வாறு பலியிடலைத்தடுக்க எவராலும் முடியாது. அவ்வாறு தடுப்பதானால் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்தே நிறுத்த முடியும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அதனைச் சாதகமாக கொண்டே பரம்பரை பரம்பரையாக பலியிடல் கவுணாவத்தையில் தொடர்ந்தது.

இந்த நிலையில் தான், கவுணாவத்தை ஆலயத்தில் மிருகங்களைப் பலியிடல் செய்யக் கூடாது. அந்த வேள்வியைத்ன் தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி தனிநபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார். அதன்படி நிர்வாகத்தினரை அழைத்த நீதிமன்று உரிய சட்டவிதிகளுக்கு அமையவே இந்தமுறை வேள்வியை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் வேள்விக்கு அனுமதி வழங்கியது. அதன்படி உரிய சட்டவிதிகளுக்கு அமைய வேள்வியும் , 500 கடாக்களைப் பலியெடுத்து நடந்து முடிந்துவிட்டது.

நேர்த்திதான் வியாபாரம் அல்ல

- கவுணாவத்தை ஆலயப் பக்தர்

வேள்வியின் நோக்கம் நேர்த்தி மட்டும் தான். ஒவ்வொரு முறையும் நேர்த்திவைத்து 500 கடாக்கள் ஆலயத்தில் வெட்டப்படுகின்றன. வீடுகளில் 5 இலட்சம் செலவழித்து ஒருவர் கடா ஒன்றை வளர்த்து ஆலயத்தில் நேர்த்திக்காக வெட்டிவிட்டு இறைச்சியை கொடுக்கும் போது 80 ஆயிரமோ அல்லது அதுக்கு சற்று அதிகமான விலையில் தான் விற்கமுடியும் . பணம்,நேரம் என்பவற்றைச் செலவழித்து பராமரித்தும் நஷ்டமே ஏற்படுகின்றது. இந்த நிலையில் வேள்வி என்பது வியாபாரத்துக்காகத்தான் நடத்தப்படுகின்றது என்று சிலர் சொல்கிறார்கள். இது தவறானதாகும்.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை பக்திபூர்வமாக நிறை வேற்றிவிட்டு போகின்றனர். இது அவர்களுடைய நம்பிக்கை. இந்த முறையும் 500 மேற்பட்ட கடாக்கள் வெட்டப்பட்டன . இறைச்சி விற்றுக் கிடைக்கும் பணத்தில் அரைவாசியைப் கோயிலுக்கே தான் வழங்குவார்கள். இந்தமுறை வேள்விக்கு என வெளிநாட்டில் இருந்து வந்த 6 பேர் 6 கடா வெட்டிவிட்டு கிடைத்த பணம் முழுவதையும் கோயிலுக்கே வழங்கி விட்டு சென்றுவிட்டனர். இவ்வாறு மக்கள் ஆர்வமாக இருக்கும் போது எவ்வாறு வேள்வியை நிறுத்த முடியும்.கோமாதா எங்கள் குலமாதா என்று பசுவை சைவர்கள் போற்றும் போது பசு வதை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதற்கு சைவ அமைப்புக்கள் ஏன் களமிறங்கிப் போராட ஒன்று திரண்டு வரவில்லை? வலி. வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 16 பசுக்கள் இறைச்சிக்காக வெட் டப்படுகின்றன. இவற்றைக் கேட்க யார் உள்ளனர்?

நாங்கள் சிறுவயதில் படித்துள்ளோம் பசு சாதுவான மிருகம் என்று. ஆனால் ஆடு சாதுவான மிருகம் என்று படிக்கவில்லை. தெய்வமாக போற்றப்படும் பசுவையே வெட்டும் போது யாழ். மாவட்டத்தில் எதிர்த்துக் குரல் கொடுக்காத அமைப்புக்கள் ஆடு வெட்டுவதற்கு மட்டும் ஏன் எதிர்த்துக் குரல் கொடுக்கின்றன?

ஊடகங்கள் மீது கோபம்

நீதிமன்ற தீர்ப்பு பல ஊட கங்களில் வேள்விக்கு தடை என செய்தியாக வெளிவந்தது. இதனால் கருகம்பனை மக்கள் ஊடகங்கள் மீது மிகுந்த கோபத்தில் உள்ளனர். "பரம்பரை பரம்பரையாக தாம் வேள்வி செய்து வரு கின்றநிலையில்மக்களுக்கு தவறான கருத்தை ஊட கங்கள் வழங்கியுள்ளன. ஆலயத்துக்காக ஆடு வளர்க்கின்ற ஒருவர் வேள்விநடைபெறவில்லை என்றால் ஏங்கிச் செத்துப் போய்விடுவார். அவ்வாறு ஒரு நிலை நடைபெற்றி ருந்தால் அதற்கு ஊடகங் கள் தான்பதில் கூறவேண் டும்"என முகத்தில்கோபம் கொப்பளிக்க , கண்கள் சிவந்தபடி ஊர்பெரியவர் ஒருவர் கூறினார். எங்கள் நோக்கம் வியா பாரம் இல்லை முற்றுமுழு தாக நேர்த்திதான்.

எஸ். வி. மேனகா

அதிகாலை 3மணி. கவுணாவத்தை ஆலய வளாகமே சனக்கடல் போல காட்சியளித்தது. ஒரு பக்கம் பக்தர்கள் வெள்ளம். மறுபக்கம் வேள்விக்காக கொண்டு வரப்பட்ட அலங்கரிக்கப்பட்ட கடாக்கள். பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் ஆலய்ச் சூழல். கடாக்களின் மிகப்பெரிய உருவத்தைப் பார்க் கப் பெரும் பிரமிப்பாகவே இருந்தது. கவுணாவத்தை நரசிங்கருக்கு என நேர்ந்து விடப்பட்ட முதல் கடா பலியிடத்தை வந்தடைந்தது .

சற்றைக்கெல்லாம் கத்தி ஒன்று மின்னியபடி ஓங்கி யெழ, "மே..மே..மே " என்ற கடாவின் கேவல் ஒலி எழுந்து அடங்கியது. அடுத்தகணம் தலையற்று கடா நிலத்தில் வீழ்ந்து, துடித்து, பின் அமைதியானது. இரத்தம் சுற்றுப்புறமெல்லாம் சிதறியது.

அதற்குப்பின்னர் வேள்வி சூடு பிடிக்கத் தொடங் கியது. நேர்த்திக்காக , கடா கொண்டு வந்தவர்கள் தங்களது கடாக்களை வரிசைப்படி பலிபீடத்துக்கு கொண்டு செல்லத்தொடங்கினர். வழமைக்கு மாறாக-யாருமே எட்டிப்பார்க்க முடியாத அளவுக்கு உயரமான வெள்ளைத் தகரங்களால் -அடைக்கப் பட்ட பலியிடம் நோக்கி தாம் கொல்லப்படப் போவதை அறியாத கடாக்கள் தமது உரிமையாளர் களுடன் கம்பீரமாக சென்று கொண்டிருந்தன. கடாக்கள் ஒவ்வொன்றாக வீழ்த்தப்பட, பலியிடத் தின் ஒரு புறமாக இரத்த ஆறொன்று ஓடத்தொடங்கி யது. இன்னொரு முனையூடாக கம்பீரமாகச் சென்ற கடாக்கள் முண்டங்களாக இழுத்துச் செல்லப்பட்டு, பங்குகளாகப் பிரிக்கும் படலம் தொடங்கியது.

கண்முன்னே ஒருவான பெரும் கொலைக்களத்தைப் பார்க்க அச்சமெழுந்தது. கடாக்களின் அணிவகுப் பும், குருதியாற்றின் பெருக்கெடுப்பும், முண்டங்க ளின் வீழ்கையும் காலைச் சூரியன் உதிக்கும் வரை தொடர்ந்தது.

எப்போது முற்றுப்புள்ளி?

ஆலயத்துக்கு உரித்தானவர்களும் சைவ அமைப்புக்களும் பலியிடல் ஆல யத்திற்குள் செய்ய முடியாது என கருத்து தெரிவித்து வருகின்ற நிலையில் நீதிமன்ற அனுமதிகளுடன் சட்ட விதி முறைக்கு அமைய இந்த முறை யாருமே பலியிடுவதை பாக்க முடியாத வாறு உயர மாக மறைப்பிட்டும் சுகாதார முறைப்படி யும் கடாக்கள் வெட்டப்பட்டன.

" கவுணாவத்தை வேள்வியைத் தொடர்ந்து நடத்தவே மக்களும் ஆர்வ மாக உள்ளனர். வெளிநாடுகளில் இருந்தும் வேள்விக்காக பலர் வருகின்றனர். இந்த நிலையில் வேள்வியை நிறுத்துவது என்பது இப்போது கடினம் தான். எனினும் இன்னும் இரண்டு மூன்று தலை முறை கள் போனதும் கடா வெட்டு வது நாகரீ கம் இல்லை என எமது பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் விரும்பினால் இந்த வேள்வி தானாகவே நிறுத்தப்படும். அதுவரை எங்கள் வழிபாடு தொடரவே செய்யும்" என்று சொல்கிறார் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர்.

பல்வேறு அமைப்புக்கள் கவுணாவத்தை ஆலயத்தில் வேள்வி என்ற பெயரில் நடக்கும் மிருக பலியைத் தடுக்க வேண் டும் என வலியுறுத்தின. எனினும் அவர்க ளில் பலர் களத்தில் இறங்கிப் போராட தயாராகவில்லை. வெறும் நாலைந்து பேர் மட்டுமே உண்ணாவிரதப் போரட் டத்தில் குதித்து மிருகபலிக்கு எதிரான எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இவ்வாறு ஆதரவுக் குரல்களுக்கும் எதிர்க்குரல்களுக்குமிடையே விவாதப் பொருளாகிப் போன கவுணா வத்தை வேள்வி தொடருமா? இல்லையா? என்ப தைக் காலமே தீர்மானிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவகுமார் நிரோசன்
4ஆம் வருடம், மெய்யியற் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

ஏனிந்தப் பண்பாட்டுச் சிதைவு?

"பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட மரபுகளினதும், கலை வடிவங்களினதும் மொத்த வடிவமாகும்" என்பர் மலினோவஸ்கி. பண்பாடு நம்முடைய தன்மையை நேரிடையாக வெளிப்படுத்துகின்றது.

நம்முடைய சிந்தனை செயல்களின் வழிகளில், கலைகளில், மதத்தில், ஒழுக்கத்தில், பொழுதுபோக்கில் எல்லாம் பண்பாடு மிளிர்கின்றது. இமானுவெல் காண்ட் எனும் மேலைத்தேய மெய்யியல் அறிஞர் பண்பாட்டில் ஒழுக்க விழுமியங்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டினார். அவர் வெளிப்புற நடவடிக்கைகள் நாகரிகம் என்றும், அகத்தைப் புலப்படுத்துகின்ற ஒழுக்கம் போன்றவை பண்பாடு எனவும் குறிப்பிட்டார்.

பண்பாடு என்ற சொல் பண்படுதல், சீர்படுதல், அல்லது திருந்துதல் என்ற பொருள்களை உடையது. எனவே பண்பாட்டில் முன்னேற்றகரமான அல்லது திருந்திய அல்லது பண்பட்ட மாற்றங்களே அன்றி எதிர்நிலையான மாற்றங்களுக்கு இடமில்லை. அத்தகைய எதிர்நிலையான மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுது பண்பாடு சிதைவுறுகின்றது அல்லது அழிவுறுகின்றது எனலாம். இன்றைய காலகட்டத்தில் பல்வேறு வகையான ஒழுக்க மீறல்களின் விளைவாகப் பண்பாடு சிதைவுறுவதனைக் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. இதற்குப் பண்பாடுச் சிதைவைத் தடுக்க வேண்டு மென்ற போதிய விழிப்புணர்வு இல்லாமையே கார ணம் எனலாம்.

ஒரு சமூகத்தினுடைய பண்பாட்டுக்கும் அதனுடைய ஒழுக்க விழுமியங்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இவை ஒன்றிலொன்று பரஸ்பரம் செல்வாக்குச் செலுத்துவனவாக விளங்குகின்றன. பொதுவாக பண்பாடு

என்பதனை வரைவிலக்கணம் செய்கின்ற பொழுது அதன் உட்கூறுகளுள் ஒன்றாக ஒழுக்க விழுமியங்களும் இணைந்து கொள்கின்றன. இதனை பண்பாடு என்பது குறித்து வழங்கப்படுகின்ற பல்வேறு வரை விலக்கணங்களும் எமக்குக் காட்டி நிற்கின்றன. பொதுவாக "பண்பாடு என்பது நம்பிக்கைகள், அறிவு, ஒழுக்க விழுமியங்கள், சட்டம், கலை, நடத்தைக் கோலங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமைத் தொகுதி" என வரைவிலக்கணப்படுத்தப் படுவதனைக் காணலாம்.

எதைச் செய்வது? எதை விடுவது?

எட்வர்ட் ரெயிலர் என்ற மானுடவியலாளர் "மனித சிந்தனையையும், நடத்தையையும் சமூக ரீதியாக ஒழுங்கு படுத்துவதே பண்பாடு" என்றார். அவ்வாறு ஒழுங்கு படுத்துவதில் அந்தச் சமூகத்தினுடைய ஒழுக்க விழுமியங்கள் முதன்மையான பங்கினை வகிக்கின்றன எனலாம். ஏனெனில் பண்பாட்டின் உட்கூறுகளை பெறுமானங்கள், நெறிமுறைகள், பொருள்கள் என மூன்று வகையாகப் பகுக்கலாம். இவற்றுள் நெறி முறைசார் கூறுகள் பெரும்பாலும் ஒழுக்க விழுமியங்களுடன் தொடர்புடையவை அதாவது நெறியியல்சார் கூறுகள் என்பது மக்களின் தனிப்பட்ட வாழ்வையும், சமுதாய வாழ்வையும் நெறிப்படுத்தும் கூறுகளையும் குறிக்கும். தனிப்பட்ட நிலையிலும், சமுதாயத்திலும் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வகையான நடத்தைமுறையைப் பின்பற்ற வேண்டும், எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது போன்ற விதிமுறைகளோடு தொடர்புடைய கூறுகளே நெறியியற் கூறுகளாகும். இதில் மதிப்புக்கள், நெறிமுறைகள், விதிகள், குடிவழக்குகள், மர பாண்மைகள், அளிப்புக்கள், பழக்க வழக்கங்கள் முதலானவை அடங்கும். இத்தகைய நெறியியற் கூறுகளாகிய ஒழுக்க விழுமியங்கள் மீறப்படுவதனால் பண்பாட்டின் உட்கூறுகளில் சிதைவு ஏற்படுகின்றது. இதனால் பண்பாடு சிதைவுறுகின்றது.

பண்பாடும் தனிமனிதனும்

தனிமனித செயல்கள் இன்றி பண்பாடென்பதே இல்லை என்பது பீற்றர் எல் பேகரின் சிந்தனையாகும். அதாவது ஒருவருடைய செயலும் நோக்கமும் மற்றையவர்களுடைய செயல்களுடனும், நோக்கங்களுடனும் அது பண்பாட்டின் நேர்வாக சார்பற்ற வடிவத்தைப் பெறுகின்றது. உதாரணமாக கருத்துநிலைகள், சமய நம்பிக்கைகள், ஒழுக்க நியமங்கள், சமுதாய இலட்சியங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை மீண்டும் மனிதனுடைய பிரக்ஞையினால் உள்வாங்கப்பட்டு தனிமனிதனாலும், சமூகத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்க நியமங்களாகவும், கூட்டு நடத்தைக் கோலங்களாகவும், சமூகம் சார்ந்த சொல்லாடலுக்குரிய விதிமுறைகளாகவும், வாழ்க்கைக்குரிய பொதுவான விதிமுறைகளாகவும் மாறி விடுகின்றன. இதனால் பண்பாடென்பது அடிப்படையில் அனைத்தையும் உள்ளடக்கியதும், மனிதர்களால் கட்டியமைக்கப்பட்டதும், அவர்களால் புரிந்து கொள்ளப்படக் கூடியதுமான அர்த்தத்தைக் கொண்டிருக்கும். எனவே தனிமனித செயல்கள் இன்றி பண்பாடென்பதே இல்லை. இத்தகைய தனி மனிதனுடைய செயல்கள் ஒரு சமூகத்தின் பண் பாட்டினைக் கட்டமைப்பதில் எவ்வளவு தூரம் செல் வாக்குச் செலுத்துகின்றதோ அவ்வளவு தூரம் பண் பாடு தனிமனித செயல்களில் செல்வாக்குச் செலுத்து கின்றது. ஒரு சமூகத்தினுடைய பண்பாட்டினால் விதிக்கப் படுகின்ற ஒழுக்க விழுமியங்களை தனி மனிதன் மீறுகின்ற பொழுது அது பண்பாட்டில் சிதைவை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக பாலியல் உந்தலை எவ்வாறு தணிப்பது? எதனை உண்பது? என மனித உடல் ஒருபொழுதும் தீர்மானிப்பதில்லை. அவற்றினை அடையும் வழி வகைகள் சமூகப் பண்பாட்டுக் காரணிகளாலேயே நிர்ணயிக்கப்படும். பாலியல் வேட்கையைத் தணிக்கக் கூடிய சரியான வழி வகை யாதென தனிமனிதர் அறிவர்.

எனினும் மனிதர்கள் பண்பாட்டை உருவாக்கிக் கட்டுப் படுத்த, பண்பாடு மனிதனின் நடத்தைக் கோலத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

போருக்குப் பின் பண்பாட்டுச் சீரழிவு

தனிமனிதர்களில் இருந்து குடும்பங்கள் உருவாகின்றன. குடும்பங்களில் இருந்து சமூகங்கள் உருவாகின்றன. எனவே தனிமனிதனால் ஏற்படுத்தப்படுகின்ற நெறிமுறை மீறல்களும், தனிமனித ஒழுக்க சிதறல்களும் தான் சமூகப் பண்பாட்டுச் சீரழிவுக்கு நேரடியான காரணிகளாகும். போருக்குப் பின்னரான இன்றைய சூழலில் ஒப்பீட்டளவில் ஒழுக்க மீறல்கள் அதிகரித்துச் செல்வதனைக் கண்டுகொள்ள முடியும். இதற்கு அன்றாடம் வெளிவரும் செய்திகள் சான்று பகர்வதாக அமைகின்றன. பாலியல் வல்லுறவுகள், சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் அவலங்கள் இன்னும் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இளைஞர் யுவதிகளிடையே போதைவஸ்துப் பழக்கம் அதிகரித்துச் செல்கின்றது. தெருச் சண்டியர்களின் அட்டகாசங்களும், வாள்வெட்டுக்களும் தலை தூக்கியுள்ளன. இத்தகைய ஒழுக்க மீறல்கள் பண் பாட்டு வேர்களில் ஏற்படுத்துகின்ற சிதைவுகள் அந்த சமூ கத்தையே சிதைத்துவிடுவதாக அமைந்துவிடும்.

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையில் மனிதன் மனச்சாட்சியை மறந்து பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு சொல்வதொன்றும், செய்வது இன்னொன்றாகவும் காணப் படுகின்றான். கடமையை மறந்து "பணம் பணம்" என்று அலைகின்றான். மூத்தோரை மதிக்காத இந்தக்கால மக்கள் வெளிப்பகட்டுக்களை மதிக்கின்றனர். களவு, கொள்ளை, கொலை போன்ற செயல்களில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்கின்றனர். பொறாமைப்படுதல், பொய் சொல்லுதல் என்பன வெல்லாம் இன்றைய மனிதனுக்கு கைவந்த கலை. இப் படியே மனித சமூகத்தின் பண்புகள் கீழ்நிலைப்பட்டுக் கொண்டிருந்தால் பண்பாடு எவ்வாறு மேல் நிலையை எய்தமுடியும்?

குற்றமும் அசுத்தமும்

பண்பாடு குறித்து ஆய்வு செய்த மேரி டக்ளஸ் என்பவர் ஒழுக்க மீறல்களாகிய குற்றங்களை அசுத்தம் என்பதுடன் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். அவர் குற்றமும், அசுத்தமும் ஒரே இயல்புடையன. இரண்டுமே வேண்டத் தகாதவை என்றார். நியமமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க விதிமுறைகளை மீறுவது குற்றமாகின்றது. ஒரு பொருளின் தவறான நிலையிடத்தால் ஏற்படுவது அசுத்தமாகும். ஒரு சமூகத்தின் நியமமான ஒழுக்க விதிமுறைகளை ஒருவரோ அல்லது பலரோ மீறுவது அந்த சமூகத்தினுடைய பண்பாட்டுக்கு விடுக்கப்படும் சவாலாகும் என்றார். சமூகங்கள் சடங்குகள் மூலம் இச்சவால்களை முறியடித்து தம்மை மீளவும் ஸ்தாபித்துக் கொள்கின்றன. மேலும் குற்றங்கள் அல்லது ஒழுக்க மீறல்கள் தண்டனையால் அகற்றப்படுகின்றன.

உதாரணமாக பாலியல் வல்லுறவு, கொலை, போதைப் பொருள் பாவனை என்பன எமது சமூகப் பண்பாட்டைப் பொறுத்தவரை அந்தப் பண்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையும் ஒழுக்க விலகல்களாகும்.

ஒழுக்க மீறல்கள் எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகின்ற ஒன்று. எனினும் அவை அந்தச் சமூகங்கள் பின்பற்றும் ஒழுகலாற்றுக்கும், நியமங்களுக்கும் முரணானவையாகும். அவை தனிமனிதர்களுடைய சமூக இருப்பிற்கும், சமூகப் பண்பாட்டிற்கும் ஒருங்கே அச்சமூட்டுவனவாகும். இதனால் குற்றமிழைப்பவரை அல்லது ஒழுக்க விதிமுறைகளை மீறுபவரை தண்டிப்பதன் மூலம் பண்பாட்டுச் சிதைவினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் இன்றைய காலகட்டத்தில் பண்பாட்டினை இயற்கைப் பண்பாடு, உற்பத்திப் பண்பாடு என இரண்டாக வகைப்படுத்தலாம். ஒரு சமூகத்தினது மரபார்ந்த அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதே இயற்கைப் பண்பாடு ஆகும். மாறாக உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராள மயமாக்கல் போன்ற காரணங்களால் விளைந்த பண்பாடு உற்பத்திப் பண்பாடு ஆகும். இந்த செயற்கைப் பண்பாடு தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒழுக்க மீறல் களுக்கு வித்திட்டு இயற்கைப் பண்பாட்டின் அழிவுக்கு வழி வகுக்கின்றது எனலாம்.

வீழ்ச்சி உடனே நிகழ்வதில்லை

பல நூற்றாண்டுகளைக் கண்ட மரம், ஒரு நாள் ஓங்கியடித்த புயலில் வேரோடு மண்ணில் விழுந்து கிடந்தது. வன்மை முறுக்கேறிய இத்தனை பெரிய மரம் எப்படி ஒரு நாள் புயலை எதிர்த்து நிற்க முடியாமல் விழுந்து விட்டது என்கிற விவரம் புரியாமல் ஊர் மக்கள் ஒன்றுகூடி வியந்து நின்றனர். அப்போது அங்கே ஒரு துறவி வந்து சேர்ந்தார்.

"இவ்வளவு வலிமை மிக்க மரம் ஒரு நாள் புயலில் எப்படி விழுந்திருக்க முடியும்?" என்று கூடி நின்ற மக்களில் ஒருவன் துறவியைக் கேட்டான்.

மரத்தின் ஒவ்வொரு பகுதியையும் துறவி உற்றுப் பார்த்தார். வெளித் தோற்றத்தில் வலுவாகத் தோன்றிய மரத்தின் உள்ளே ஒரு பெரிய பொந்து இருப்பதைக் கண்டவர், "நண்பர்களே! இந்த மரத்தின் வீழ்ச்சி ஒரு நாள் நிகழ்ச்சி அல்ல. பல நாள்கள் உள்ளே நிகழ்ந்த உள் அழிவுதான், இன்று இந்த மரம் புயலை எதிர்கொள்ள முடியாமல் விழுந்து கிடப்பதற்குக் காரணம். எந்த ஒன்றுமே ஒரு நாள் நிகழ்வில் வீழ்வதில்லை என்ற உண்மையை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள்" என்றார்.

அது போலவே பண்பாடு என்பதும் மின்னலைப் போல திடீரென்று தோன்றி, புயலைப் போல ஒரு நாளில் மறைந்து விடுவதில்லை. பண்பாடு என்பது ஓர் இனம் காலம் காலமாகப் பழகி வரும் வாழ்க்கை ஒழுக்கம். "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" என்று கலித்தொகை கூறும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவன் வாழும் மண்ணின் மரபுகள் பண்பாடாக மலரும். காலப்போக்கில் வாழ்க்கையில் படிந்து கிடக்கும் அசுத்தங்கள் அகன்று மனிதனின் சிந்தனை செழுமையுறும்போது பண்பாடு சிறக்கிறது. பண்பாடு சிறப்படைவதில் ஒழுக்க விழுமியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. எனவே ஒழுக்க மீறல்களைத் தவிர்த்து பண்பாட்டினைக் காத்து அதனை மேம்பாடடையச் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் ஆடுபுலி ஆட்டம்

■ ஹரன்

இந்திய-இலங்கை உறவு கொந்தளிப்பு நிலையை அடைந்ததைப் போன்ற ஒரு தோற்றப்பாட்டை கடந்தவாரம் இருநாட்டு ஊடகங்களிலும் சர்வசாதாரணமாக அவதானிக்க முடிந்தது. அந்தளவுக்கு மீனவர் கைதுகள் வகைதொகையின்றி நடந்து முடிந்தன. இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் இலங்கைக் கடற்படையினரும் வலு சீரியஸாக இயங்கியதை அவதானிக்க முடிந்தது. வழமையாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களின் போதெல்லாம் அணிலேற விட்டவர்களைப் போல வேடிக்கை பார்த்த இலங்கைக் கடற்படையினர் திடீர் உசார் வரப் பெற்று ரோந்துகளை அதிகரித்தனர். நாட்டின் சுற்றுப் புறங்களிலுள்ள கடற்பகுதிகளில் ஊடுருவித் தொழில் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு தொடங்கி மன்னார் வரை அத்துமீறிய இந்திய மீனவர்களைக் கைது செய்வதில் அதிக ஆர்வத்தையும் காட்டியிருந்தனர். இந்தத் திடீர் ஆர்வத்துக்கும் கடமையுணர்வுக்கும் என்ன காரணம் ?. கடந்த சில வருடங்களாக- போர் முடிவுக்கு வந்த பின்னர்- இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தீவிரம் மிக்க ஒன்றாக மாறியிருந்தது. குறிப்பாகப் போர்க்காலங்களில் நிலவிய கடல்வலயத் தடை , பாஸ் நடைமுறை , கடற்புலிகள்- கடற்படையினர் மோதல் என்பவற்றால் இலங்கை மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட நடுங்கினர். உயிரைப் பணயம் வைத்து கடலுக்குச் சென்றால், கடற்படையினரின் துப்பாக்கி வேட்டுக்குத் தப்பி, கரை திரும்புவது அதிசயத்திலும் அதிசயம். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி நெடுந்தீவுக் கடற்கரை வரை தைரியமாக வந்து மீன்களை இந்திய மீனவர்கள் படகுக்கூட்டங்களில் வந்து அள்ளிச் சென்றனர். அவர்கள் மீது இலங்கைக் கடற்படையும் கைவைக்கத் தயங்கியது. ஏனெனில் இந்திய மீனவர்கள் போன்று போக்குக் காட்டிவிட்டே கடற்கரும்புலிகள் இலங்கைக் கடற்படைக் கலங்களைக் காவு கொள்வது வழக்கம். அந்த நடுக்கத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறும் போதெல்லாம் அதைக் கண்டும் காணாதது போல, இலங்கைக் கடற்படையினர் நடந்து கொண்டனர்.

ஆனால் போர் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் , அத்துமீறும் மீனவர் பிரச்சினை இரு நாட்டு எல்லைகளிலும் சூடுபிடிக்கத் தொடங்கியது.

" எமது கடற்பரப்பில் அத்து மீறி மடியடித்து இந்திய மீனவர்கள் தொழில் செய்கிறார்கள். எமது கடல் வளம் அள்ளப்படுகிறது" என்ற ஈழத்தமிழ் மீனவர்களின் குரல்களும் தீவிரம் பெற்றன. இதன் உச்சக்கட்டமாக இரு தரப்பு மீனவர்களும் கடலில் மோதிக் கொள்ளும் சூழலும் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டது. இந்த மோதல்களின் போது பருத்தித்துறை , நெடுந்தீவுக் கடற்பகுதிகளில் பெருமளவு இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களால் சிறைபிடிக்கப்படும் சம்பவங்களும் அரங்கேறின. பின்னர் நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் இடம்பெற்ற மனிதப்படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று தமிழகம் கொந்தளிக்க, அதற்குப் பழிவாங்கும் வகையில் இலங்கை மீனவர்கள் மீது பாய்ந்தது இலங்கை அரசு.

" இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் புகுந்தால் இந்திய மீனவர்கள் தயவு தாட்சண்யம் இன்றிக் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் படகுகள் பறிமுதல் செய்யப்படும்" என மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பகிரங்கமாக எச்சரித்தார். அவர் எச்சரித்தது போலவே , இந்திய மீனவர்கள் வகைதொகையொன்றி மாட்டுப்பட்டனர். சில சமயங்களில் கடற்படையின் துப்பாக்கியும் அவர்கள் பக்கம் திரும்பியது. முழங்கியது. இதனால் மெல்ல மெல்ல இந்திய மீனவர்களின் ஊடுருவல் ஓரளவுக்குக் குறையத் தொடங்கியது. இப்படி இந்திய ஊடுருவல் ஒய மறு பக்கத்தில் சீன மீனவர்களின் அத்துமீறல் இலங்கைக் கடற்பரப்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் கொஞ்சம் கொஞ்சமாக அரங்கேறத் தொடங்கியது. இந்தியாவுக்கு கதவடைத்து விட்டு சீனாவை வரவழைத்து ஒப்பந்தம் செய்து கொண்ட இலங்கை அரசு, இலங்கை மீன் வளத்தை சீன மீனவர்கள் அள்ளிக் கொண்டு போக பூரண அங்கீகாரத்தையும் வழங்கியது. சிங்கக் கொடியைத் தாங்கியபடி சீன மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் சர்வ சாதாரணமாகவே வந்து சென்றனர். பருத்தித்துறை முனை கடற்பகுதிவரை இவர்களின் அத்துமீறல் தொடர்ந்தது. அதன் பின் இந்திய மீனவர் பிரச்சினைக்கு தற்காலிகமாக ஒரு இடைவேளை விடப்பட்டது. ஆனால் இந்திய மத்திய அரசை மோடி நிர்வாகம் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்திய மீனவர்கள் கைது என்ற விவகாரம் மீண்டும் தூசு தட்டப்பட்டது. கும்பல் கும்பலாக மீன்களைப் போல இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் சிக்கிக் கொள்வதும், பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவதுமாக ஆடுபுலி ஆட்டம் தொடர்கிறது. ஜனாதிபதி மஹிந்தவின் ருவிட்டர் சமூக வலைத்தளத்திலும் இது பற்றிய பதிவேற்றங்களைக் காண முடிந்தது.

"இந்திய - இலங்கை உறவை நெருக்கமாக்க இந்திய மீனவர்களை விடுதலை செய்யுங்கள்" என தனது



உத்தரவை கடற்படைக்கோ அல்லது நீதி நிர்வாக பரிபாலன கட்டமைப்புக்கோ நேரடியாகவே விடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இலங்கையில் எந்தக் குற்றச்சாட்டின் பொருட்டும் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டவர்களையோ அல்லது குற்றவாளியாக நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்டவரையோ பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யும் அதிகாரம் நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி என்ற ரீதியில் மஹிந்தருக்கு உண்டு. ஆனால் நேரடியாக அந்த உத்தரவை விடுக்காமல் ருவிட்டரில் பதிவு செய்து , 'பப்ளிசிற்றி' செய்தபின்னர், ஏன் மீனவர் விடுதலை உத்தரவை விடுத்தார் என்பதிலேயே பல ராஜதந்திர அரசியல் மர்மங்கள் புதைந்திருக்கின்றன.

மோடி பிரதமராக பதவியேற்றதில் இருந்து "13+ ஐ நடைமுறைப் படுத்துங்கள் அல்லது அதற்கும்அப்பால் சென்று தமிழர்களுக்கு உரிமையை வழங்குங்கள்" என்ற மிரட்டல்களை இலங்கையை நோக்கிகடுமையாக விடுக்கத் தொடங்கியது இந்தியாவின் புதிய மத்திய அரசு. ஜனாதிபதியின் நண்பரான சுஷ்மா ஸ்வராஜ் இந்திய வெளிவிவகார அமைச்சராக இந்தியாவின் பதவிக் கதிரையில் அமர்ந்திருக்கின்ற போதிலும் இலங்கைக்கு எதிராக இந்தியா கடும் போக்குடனேயே நடந்து கொள்கின்றது.இதனால் இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சில தற்காலிக சாதகச் சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குள் இலங்கை தள்ளப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்திய அரசை தன் பக்கத்துக்கு கொண்டுவர இந்திய மீனவர் பிரச்சினையை இலங்கை கையில் எடுத்துள்ளது.

அவர்களை விடுதலை செய்வதும் .

" இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிப் புகுந்தால் இந்திய மீனவர்கள் தயவு தாட்சண்யம் இன்றிக் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் படகுகள் பறிமுதல் செய்யப்படும்" என மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பகிரங்கமாக எச்சரித்தார். அவர் எச்சரித்தது போலவே , இந்திய மீனவர்கள் வகைதொகையொன்றி மாட்டுப்பட்டனர். சில சமயங்களில் கடற்படையின் துப்பாக்கியும் அவர்கள் பக்கம் திரும்பியது, முழங்கியது.

விளக்கமறியலில் வைப்பதும் பிறகு இலங்கை அரசாங்கம் மனமிரங்கி விடுவிப்பதான காட்சிகள் தொடர்கதையாக நீள்கின்றன. இதன் மூலம் கௌதம புத்தரைப் போல தானும் ஒரு கருணைக்கடல் என இலங்கை ஜனாதிபதி இந்தியாவை நம்ப வைக்கப் படாதபாடு படுகின்றார்.

இந்தக் கருணைகடல் நாடகத்தால், இந்தியாவிடம் நல்லபிள்ளை பேர் வாங்கி, அங்கிருந்து வரும் தற்காலிக அழுத்தங்களை வேண்டு மென்றால் இலங்கை அரசால் தடுத்துக் கொள்ள முடியும். ஆனால் தொடர்ந்தும் இதே உத்தியை வைத்துக் கொண்டு மோடி அரசால் வரப்போகும் அழுத்தங்களை இலங்கையால் எதிர்கொள்ள முடியாது. மீன்வர் பிரச்சினையைக் கேடயமாக்கி தலைக்கு வருவதை தலைப்பாகையோடு போகச் செய்து கொண்டிருக்கும் இலங்கையின் போக்குக்கு மோடி அரசு என்ன விதத்தில் காய் நகர்த்தப்போகிறது என்பது விரைவில் தெரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயியே சரணம்

பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 18

சீர்டி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்.

பிச்சை எடுப்பதன் தேவை

பாபா உண்மையிலேயே அத்தகைய பெரிய சிறப்புடையவராக, கடவுளாகவிருந்தால் தமது வாழ்நாள் முழுக்கப் பிச்சையெடுக்கும் வழக்கத்தை ஏன் அவர் மேற்கொண்டவராய் இருக்கவேண்டும்? என்னும் கேள்வி சிலரது உள்ளத்தில் எழக்கூடும். இந்தக் கேள்வி, இரண்டு நோக்கு நிலைகளில்கருதப்பட்டு விடையிறுக்கப்படலாம்.

(1) பிச்சையெடுத்து வாழ்வதற்கு உரிமையுள்ள தகுதியான மக்கள் யார்? வம்சா விருத்தி, செல்வம், புகழ் இந்த மூன்று முக்கிய ஆசைகளையும் துறந்து, துறவை மேற்கொள்வோரே பிச்சையெடுத்து வாழத் தகுதியுடையோராவார். என்று நமது சாஸ்திரங்கள் பகருகின்றன. இவர்கள் சமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து வீட்டில் உண்ண முடியாது. அவர்களை உண்பிக்க வேண்டிய கடமை இல்லறத்தாரின் தோள்களில் விழுகிறது. சாயிபாபா இல்லறத்தாருமல்ல. வானப்பிரஸ்தருமல்ல. அவர் பிரமச்சாரியம் அனுஷ்டித்த ஒரு துறவி. அதாவது சிறு பருவம் முதற்கொண்டே துறவியாவார். இந்தப் பிரபஞ்சமே தமது வீடு என்பதும் தாமே பிரபஞ்ச ஆதாரமும் அழிவற்ற பிரமமுமாகிய பகவான் வாஸுதேவர் என்பதும் அவருடைய உறுதியான அபிப்பிராயமாகும். எனவே அவருக்கு இரந்து உண்ணும் வழக்கத்திற்கு முழு உரிமை இருக்கிறது.

(2) மற்றவை கீழ்க்கண்ட நிலையின்படி, பஞ்ச்ஸூனா -ஐந்து பாவங்களும் அவைகளின் பிராயச் சித்தமும், உணவுப் பொருள்களும் சாப்பாடும் தயாரிப்பதற்காக இல்லறத்தார் ஐந்துசெயல்கள் அல்லது நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதாவது (1) கண்டணீ - பொடியாக்குதல், (2) பேசணீ - அரைத்தல், (3) உதக்கும்பி - பானைகளைக் கழுவுதல் ,(4) மார்ஜனீ - பெருக்கிச் சுத்தப்படுத்துதல், (5) சுள்ளீ - அடுப்புப் பற்றவைத்தல்,

இந்தச் செயல்முறைகள் எல்லாம் ஏராளமான சிறிய கிருமிகளையும் ஐந்துக்களையும் கொல்வதற்கு ஏதுவாகிறது. இவ்வாறாக இல்லறத்தார்கள் ஓரளவு பாவத்தைச் செய்தவர்களாகிறார்கள். இந்த பாவத்துக்குப் பரிகாரமாக நமது சாஸ்திரங்கள் ஐந்து வகையான தியாகங்களைச் செய்யப் பகர்கின்றன. (1) பிரம்மயக்ஞம் அல்லது பிரமத்துக்குச் சமர்ப்பித்தல், (வேத அத்யயனம் அல்லது வேத பாராயணம்) (2) பித்ரு யக்ஞம் - மூதாதையருக்குச் சமர்ப்பணம். (3) தேவ யக்ஞம் - தேவதைகளுக்குச் சமர்ப்பித்தல்,(4) பூத யக்ஞம் - ஐந்துகளுக்குச் சமர்ப்பணம், (5) மனுஷ்ய் அதிதி யக்ஞம்-மனிதர்களுக்கும் அழைக்கப்படாத விருந்தாளிகளுக்கும் சமர்ப்பித்தல். சாஸ்திரப்படி இந்தத் தியாகங்களை முறையாக அனுசரித்தால் மனத் தூய்மை பெற்று ஞானமும் தன்னையுணர் தலையும் பெற உதவும். பாபா வீட்டுக்கு வீடு சென்றதன் மூலம் இல்லறத்தார்க்கு அவர்களின் புனிதக் கடமையை ஞாபகப் படுத்தினார். பாபாவால் தங்கள் வீட்டிலேயே இங்ஙனம் பாடம் கற்பிக்கப்பட்டவர்கள் பேறு பெற்ற மக்கள் ஆவார்கள்.

பக்தர்களின் அனுபவங்கள்

ஸ்ரீகிருஸ்ண பரமாத்தமா பகவத் கீதையில் 'ஒரு இலை, மலர், பழம் அன்றி நீர் இவற்றைப் பக்தியுடன் எவனொருவன் எனக்குச் சமர்ப்பிக்கின்றானோ அந்த உள்ளத் தூய்மையுடைய மனிதனின் பக்தி மிகுகாணிக்கையானது என்னால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது" என்றுகூறியிருக்கிறார். சாயி பாபாவின் விடயத்தில் ஒரு பக்தர் உண்மையிலேயே எதையாவது சமர்ப்பிக்க விரும்பியிருந்து பின்னால் அதையே சமர்ப்பிக்க அவர் மறந்து விட்டாரெனினும், பாபா அவருக்கு அல்லது அவரது நண்பருக்கு அந்தக் காணிக்கையை ஞாபகப்படுத்தி, அதை அவரை அளிக்கச் செய்து, அதையே ஏற்றுக்கொண்டு பக்தரை ஆசீர்வதித்திருக்கிறார். இதுபோன்ற சில நிகழ்வுகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஸாஹேப் தர்கட் சாயிபாபாவின் ஓர் உறுதியான பக்தராவார். அவருடைய மனைவியும் மகனும் இன்னும் சற்று அதிகமாகவே அன்பு செலுத்தினார். ஒருமுறை திருமதி தர்கட்டும் அவர்களது மகனும் தர்கட்டும் சீர்டிக்குப் போவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மகன் போக விரும்பவில்லை. காரணம் அவன் பாந்த்ரா வீட்டை விட்டுப் போவானாகில் வீட்டில் பாபாவின் பூஜை முறையாக கவனிக்கப் படமாட்டாது. என்று அவன் கருதியதே ஆகும். எனினும் தனது மகன் செய்வதைப் போன்றே அதேவிதமாக, தான் பூஜா கருங்களைச் செய்வதாக தகப்பனார் உறுதியாக வாக்களித்த பின்பு ஒரு வெள்ளிக்கிழமை இரவு தாயும், மகனும் சீர்டிக்குப் புறப்பட்டனர்.

மறுநாள் சனிக்கிழமை தர்கட் அதிகாலையில் எழுந்திருந்து பூஜை செய்வதற்கு முன் நீராடி விட்டுப் பூஜை அறையில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, பாபா எனது மகன் செய்த அதே மாதிரியாக நான் பூஜை செய்யப்போகிறேன். ஆனால் தயவுசெய்து அதை ஒரு இயந்திர கதியான பயிற்சியாக ஆக்கிவிடாதீர்கள் என்று கூறிக்கொண்டே பூஜைசெய்து சில கற்கண்டுக் கட்டிகளை நைவேத்தியமாகப் சமர்ப்பித்தார். அந்தக்கண்டு பகல் உணவின்போது பகிர்ந்தளிக்கப்பட்டது.

அந்தநாள் மாலையும், அதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமையும் எல்லாம் நலமாகவே நடந்தேறின. தொடர்ந்து வேலை நாளான திங்கட்கிழமையும் நன்றாகவே கழிந்தது. தனது வாழ்நாளிலேயே இம்மாதிரியாகப் பூஜையை செய்தறியாத தர்கட் தன் மகனுக்கு வாக்களித்தபடி எல்லாம் மிகவும் திருப்திகரமான முறையிலேயே நடந்தேறிக் கொண்டிருப்பதில் தனக்குள்ளேயே பெருமளவு நம்பிக்கை பெற்றார். அடுத்த நாளான செவ்வாயான்று வழக்கம் போல காலையில் பூஜையை நிகழ்த்திய பின் தனது வேலைக்குச் சென்றார். மதியம் வீட்டுக்கு வந்து உணவு பரிமாறப்பட்டபோது பகிர்ந்து கொள்ள கற்கண்டுப் பிரசாதம் இல்லாததைக் கண்டார். அவர் தமது சமையல் காரனை விசாரித்ததில், காலையில் எவ்வித நைவேத்தியமும் செய்யப்படவில்லை என்று அறிந்தார். பூஜையின் அந்த அம்சத்தை நிகழ்த்த அவர் அடியோடு மறந்திருந்தார்.

இத்தவறுக்காக பாபாவை பிரார்த்தித்துவிட்டு தனது மகனுக்கு உண்மைகளைக் கூறி ஒரு கடிதம் எழுதி அதை பாபாவின் பாதத்தடியில் வைத்து புறக்கணிப்பிற்காக தம்மைப் பொறுத்தருளவும் வேண்டுமாறு எழுதியிருந்தார். செய்வாய்க்கிழமை மதியத்தில் பாந்த்ராவில் இது நிகழ்ந்தது.

ஏறக்குறைய இதேநேரத்தில் சீர்டியில் மத்தியான தீபாராதனை நிகழ்வதற்குச் சிறிதே முன்பாக பாபா திருமதி தர்கட்டை நோக்கி அம்மா, பாந்த்ராவில் உள்ள உனது வீட்டிற்கு ஏதேனும் உண்ணலாம் என்ற எண்ணத்துடன் சென்றிருந்தபோது நான் உண்பதற்கு தர்கட், ஏதும் விட்டு வைக்கவில்லை. என்பதை வருத்தத்துடன் அறிந்தேன். எனவே பசி தணிக்கப்படாமலேயே திரும்பி விட்டேன் என்று கூறினார்.

அந்தப் பெண்மணிக்கு இது ஒன்றும் புரியவில்லை. அருகிலிருந்த மகனோ அதாவது பாந்த்ராவில் பூஜையில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்று அனைத்தையும் புரிந்து கொண்டு வீடு திரும்ப பாபாவின் அனுமதியை வேண்டினான். பாபா இதை மறுத்தார். எனினும் அங்கேயே பூஜை செய்ய அனுமதித்தார். அப்போது, சீர்டியில் நிகழ்ந்த விபரங்களையெல்லாம் பற்றி மகன், தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதி வீட்டில் பூஜையை அலட்சியம் செய்ய வேண்டாமென்று மன்றாடி வேண்டியிருந்தான்.

இரண்டு கடிதங்களும் ஒன்றையொன்று தாண்டிப் போய் இருவருக்குமே அடுத்த நாள் கிடைத்தன. (ஞானத்தை தேடுவோம்)

சொற்சிலம்பம் போட்டி இல. 625



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

சொற்சிலம்பம் போட்டி இல. 625

சொற்சிலம்பம் போட்டி 625ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜீலை02 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே ஜீலை09 ஆம் மற்றும் ஜீலை 16 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேலிருந்து கீழ்

1. பூரண சந்திரன்.
2. பிரிப்பு.
3. தென்னம் மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது.
4. ஐஸ்வர்யம்.
5. மதி.
8. விபீஷணன் புத்திரி.
10. உணவுத் தொகுதியில் நடக்கும் செயற்பாடு.
12. மழை. வெயிலுக்கு இது உதவும்.
13. குளிசை.
15. அழிந்து போனபின் மிச்சம்.
16. தடி.
17. தோல் வாத்தியம்.
18. ஊதும் கருவி.
20. பெரும் நீர்த் தேக்கம்.

இடமிருந்து வலம்

1. இரண்டரை டசின்.
4. ஒரு பாத்திரம்.
6. கூட்டம்.
7. புகழ்.
9. உதவும் ஏற்பாடு.
11. வேறுபட்டு வருவது.
12. பெண்கள் ஆடும் கூத்து.
13. பதில்.
14. ஈரமான இடத்தில் வளரும்.
16. தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கும் செயற்பாடு.
18. தங்குமிடம்.
19. இது கிடுகிடுவென உயரும்.
21. சூறாவளி.
22. இந்துக்களின் பூசைக்குப் பயன்படும் இலை.

சொற்சிலம்பம் போட்டி இல. 623க்கான விடைகள்

மேலிருந்து கீழ்

1.விவேகம், 2. வாட்டு, 3. கடுக்காய், 4. பால், 5. தலைவிதி, 7. முன், 9.கவி, 11.தரித்திரம், 13.மாசி, 14.பேரம், 15.பாணி, 16.தசம், 17.அரிசி, 18.அகர, 20.சாவி, 21.நதி

இடமிருந்து வலம்

1.விவாகம்,4.பாதம்,6.வேட்டு,7.முல்லை,8.கடுக்கன்,10.வித, 12.சாவி, 13.மாதிரி, 14.பேய், 15.பாசி, 16.தர, 17.அணி, 18.அதி, 19.சம்சாரி,21.நகர,22.விசித்திரம்.

போட்டி இல. 622இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு	(J)ஜெனிவிபெனாண்டோ, 141, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
2 ஆம் பரிசு	திருமதி.மஞ்சுளா இராஜமுத்து, பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.
3 ஆம் பரிசு	ஸ்ரீ.துஷ்யா, சென்ற் ஆன்ஸ் றோ.க.த. பாடசாலை, மானிப்பாய்.

பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி.சி. எழிலோவியம்,
ஆக் வீதி, உடுவில் ,சுன்னாகம்.

(2) வ. ஆ.அதிரூபசிங்கம்,
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(3) சிவகுமாரன் சம்பூரணி,
முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(4) திரு. க.தில்லை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(5) திருமதி.தி. புவனேஸ்,
நாவற்குழி கிழக்கு ,கைதடி.

(6) க. தில்லையம்பலம்,
கதிர்காம கோவிலடி,வதிரி ,கரவெட்டி.

(7) செ. சின்னத்துரை,
இல:131, D -10, உருத்திரபுரம்.

(8) பொ. கயிலாயபிள்ளை,
இல:77, 2ஆம் பகுதி,விசுவமடு மேற்கு.

(9) செ. முத்துப்பிள்ளை,
1ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(10) வாகினி தயாபரன் ,
இல:90, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

11

அவர்களுக்கு வெண்ணெய் எங்களுக்கு சுண்ணாம்பு

இலங்கையில் இனவாதம் மதவாதத்தில் இருந்துதான் ஆரம்பித்தது. அதனாலேயே சிறுபான்மை-பெரும்பான்மை என்ற கருத்து மேலோங்கி நாட்டில் இனவாத நெருப்பு இன்னும் ஓயாமல் எரிந்து கொண்டிருக்கிறது.

கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களால் பொசன் பண்டிகையை கொண் டாடப்பட்டது .அப்படிக் கொண்டாடியதை யாரும் குறை சொல்ல முடியாது.ஏனென்றால் பல்கலைக்கழகம் என்பது அனைத்து இனமாணவர்களுக்கும் உரியது. ஆனால் ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கும் வெவ்வேறான நடைமுறைகளே சினம் கொள்ள வைக்கின்றன.

பல்கலைக்கழகத்தில் சிறிய ஒரு விழா நடைபெறுகிறது என்றால் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் அனுமதி பெறவேண்டும் என்பது கட்டாயம். அத்துடன் அந்தவிழா தொடர்பானமுழுமையானவிபரங்களையும் துணைவேந்த ரிடம் சமர்ப்பிக்க வேண்டும் . அதனைக் கூட மாணவர் ஒன்றியங்கள்மூலம்தான்சமர்ப்பிக்கமுடியுமேதவிரதனியே மாணவர்கள் என்ற ரீதியில் சென்று துணைவேந்தரிடம் அனுமதி பெறமுடியாது.

ஒருவாறாகக் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்று நிகழ்வு நடத்தப்பட்டாலும் அந்த நிகழ்வு தொடர்பான நடைமுறை நீளவே செய்யும். குறித்த நிகழ்வுக்கான கணக்கறிக்கை மாணவ ஆலோசகர் ஊடாக துணைவேந்தரிடம் சமர்ப் பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறினால் அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி நடத்தியவரின் பரீட்சை பெறுபேறு உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படும். இதுதான் இதுநாள் வரையும் பல்கலைக்கழக நடைமுறை. இந்த நடைமுறை தனியே தமிழ் மாணவர்களுக்கு மட்டும்தான். சிங்கள மாணவர்களுக்கு அவை பொருந்தாது என்பதையும் பொசன் பண்டிகையில் ஒளிர்ந்த தீபங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரை ஒன்றியத் தலை வர்கள் சந்திப்பது என்பது கூட அவ்வளவு லேசுப்பட்ட காரிய மல்ல. அவரைச் சந்திக்க வேண்டும் என்றால் முன்னனுமதி பெறவேண்டும். அவசரம் என்றால் கூட சந்திக்க முடியாது.ஆனால் சிங்கள மாணவர்கள் யாராக இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் அவரைச் சந்திக்க முடியும். தமிழ் மாணவர்களுக்கு தாழிட்டு அடைக்கப்பட்ட துணை வேந்தரின் கதவுகள் சிங்கள மாணவர்களைக் கண்டதும் தானாகவே திறந்து வழிவிடும் வல்லமை கொண்டவை. அதேபோன்று சிங்கள மாணவர்கள் ..எந்த விழாக்கள் நடத்தினாலும் அதற்கு எந்தவிதமான அனுமதியும் தேவையில்லை. அதே போன்று கணக்கு வழக்கு அறிக்கையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை. இதுதான் பல்கலைக்கழகத்தின் தற் போதைய நிலைமை.

போரில் உயிரிழந்த சொந்தங்களை நினைவு கூர விடாது பல்கலைக்கழகத்தினையும். கூடவே மாணவர் விடுதியி னையும் மூடி தமிழ் மாணவர்களின் உணர்வுகளைக் கட்டிப் போட்டது பல்கலை நிர்வாகம்.

அது மட்டுமன்றி நினைவேந்தலை நடத்த முற்பட்டதாகக் கூறி, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் பயங்கர வாத புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட போதும் நிர்வாகத்தினர் கை கட்டி, வாய் பொத்தி வாளாவிருந்தனர்.முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மிக அமைதியான முறையில் அனுஷ்டிக்க பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கைக் கூட வழங்க நிர்வாகம் ஆரம்பத்தில் சம்மதிக்கவில்லை. இறுதியில் கடுமையான இழுபறிக்கு பின்னரே அரைமன துடன் கைலாசபதி கலையரங்கை முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்பை நடத்த நிர்வாகம் அனுமதி வழங்கியிருந்தது. இந்த நினைவேந்தலில் கூட குறிப்பிட்டளவான விரிவுரை யாளர்களே கலந்து கொண்டிருந்தனர். அஞ்சலிப்பில் கலந்து கொள்ளப் பல விரிவுரையாளர்களுக்கு மனமிருந்தாலும், தக்கனின் யாகத்துக்குப் போய் சிவனின் கோபத்துக்கு ஆளான தேவர்களைப் போல தாமும் துணைவேந்தரின் நெற்றிக்கண் பார்வைக்கு ஆளாகிவிடுவோமோ என்ற அச்சத்திலேயே ஏனைய விரிவுரையாளர்கள் வரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முன்பதாக, அதை நடத்த விடாமல் திடீரென பல்கலைக்கழகத்துக்கு மூடுவிழா நடத்தியமை, பேராசிரியர்களுக்கும் ,மாணவர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான துண்பிர சுரங்கள் பல்கலையில் ஓட்டப்பட்டமை தொடர்பாக இது வரையும் எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிட பல் கலைக்கழக நிர்வாகம் மறுத்து வருகின்றது.

பல்கலைக்கழகத்தில் இராணுவத் தலையீடுகள் இருக்க கூடாது என்று மாணவர்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் பொசன் பண்டிகை பல் கலைக்கழகத்தில் கொண்டாடப்படும்போது அங்கு இராணு வத்தினர் அழைக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்ல மருத்துவ பீடத்தில்பல்வேறு அபிவிருத்திவேலைகள் இராணுவத்தினர் மூலமே நிறைவேற்றப்படுகின்றன. இதனை பல்வேறு தடவைகள் மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியும் அதனைத் துணைவேந்தர் கருத்தில் எடுக்கவேயில்லை.

உண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் இராணுவத்தினரின் தலையீடும்,அரசியல் தலை யீடும் அதிகரித்துள்ளன என்பது வெளிப்படையாகவே தெரி கின்றது. உதாரணமாக பல்கலைக்கழகத்தில் கொண் டாடப்பட்ட பொசன் முற்றவெளியில் படையினர் அமைத்த வெசாக் கூடு ஒன்றும் , பல்கலையில் நடைபெற்ற பொசன் நிகழ்வுக்கு கொண்டுவரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது. அத்துடன் பல்கலையில் பொசன் பண்டிகையின் அலங் கரிப்பு வேலைகளில் சிவில் உடையில் இராணுவத்தினரே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் . இந்த பொசன் நிகழ்வுக்கான நிதிப்பங்களிப்பையும் படையினரே வழங்கினர் என்பது வெள்ளிடைமலை.

இந்த நிகழ்வு வெறுமனே ஒரு சமய நிகழ்வாக மட்டுமன்றி, தமிழ் மாணவர்களை வலிந்து சினமூட்டும் நடவடிக்கையாகவும் அமைந்திருந்தது.

ஏனென்றால் வழமையாகவே பொசன் நிகழ்வில் வெளிச்சக்கூடுகளே அலங்காரத்துக்கு பயன்படுத்தப்படும். ஆனால் இங்கோ சிட்டி விளக்குகளில் பௌத்த தர்மச் சக்கரமும், அரசிலையும் சுடர் விட்டுப் பிரகாசித்தன. இந்த நிகழ்வின் இன்னொரு முக்கிய அம்சமும் தமிழ் மாணவர்களைச் சினமூட்ட வைத்தது. அதுதான் துணைவேந்தரின் வருகை. வழமை யாகவே தமிழ் மாணவர்கள் ஏதாவது நிகழ்வொன்றுக்கு அழைத்தால் ஆயிரத்தெட்டுக் காரணத்தைச் சொல்லி , தட்டிக்கழிக்கும் துணைவேந்தர், பொசன் கொண்டாட்டம் தொடங்க ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே வந்து காத்திருந்தார். வாயெல்லாம் பல்லாக வந்தோரை வரவேற்கவும் செய்தார். துணைவேந்தரின் அதீத அக்கறையைப் பார்த்த பலரும், "இது மாணவர்கள் நடத்தும் நிகழ்வா? அல்லது துணைவேந்தரின் வீட்டு நிகழ்வா?" என்று குழம்புமளவுக்கு, விழுந்து விழுந்து துணைவேந்தர் பொ சன் பண்டிகையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இவ்வாறு இனரீதியான பேதங்களை வலிந்து தோற்றுவிக்கும் விழாக்கள் நடத்தப்பட்டால் நிச்சயமாக அது மோசமான விளைவு களைத் தான் கொண்டு வரும் . பொசன்தினத்துக்காகக் கட்டப்பட்ட பௌத்தக் கொடிகள் இன்னும் அகற்றப்படாமல் பல்கலைக்கழகச் சூழலில் இன்னும் படபடத்துக் கொண்டே இருக்கின்றன. அதனால் யாழ்.பல்கலைக்கழகத்தினை பார்க்கும் போது பௌத்த விகாரை ஒன்றுக்குள் நுழைவது போலவே உணர்வு மேலிடுகின்றது. ஆனால் தமிழ் மாணவர்கள் ஏதாவது அலங்கரிப்பு வேலைகள் செய்திருந்தால் நிகழ்வு முடிந்த உடனேயே அவற்றைஅகற்ற வேண்டி இருந்திருக்கும். மாலை 7 மணிக்கு பின்னர் பல்கலைக்கழக வளாகத்தில் யாரும் நிற்கவும் முடியாது . ஆனால் சிங்கள மாணவர்கள் நள்ளிரவு வரை தீபமேற்றி கொண்டாடலாம். பகலில் ஜஸ்கிறீம் கொடுத்து மகிழலாம். மாதக்கணக்கில் பௌத்தக் கொடியை எட்டுத்திக்கும் பறக்க விடலாம். இதுவே பல்கலை நிர்வாகத்தின் கொள்கை.

"பல்கலைக்கழகத்துக்குள் இனரீதியான குரோதத்தை வளர்க்கும் விழாக்கள் நிறுத்தப்பட வேண்டும். முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க வேண்டு மானால் அதனை உங்கள் வீடுகளில் அனுஷ்டியுங்கள். நீங்கள் படிக்க த்தானே வந்தீர்கள் .அதை மட்டும் பாருங்கள் "என்று தமிழ் மாணவர்களுக்கு யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியும் பல்கலை நிர்வாகமும் கூறியிருந்தன. அதேபோன்று "சிங்கள மாணவர்களே! பொசனா அல்லது வெசாக்கா எத இ வேண்டுமானாலும் உங்கள் வீடுகளில் கொண்டாடுங்கள். பல்கலைக்கழகத்தில் இனரீதியான விழாக்கள் வேண்டாம்" என பல்கலை நிர்வாகம் புத்திமதி கூறுமா?

ஊழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

இறங்கிவந்த வைரமுத்து

இளையராஜாவின் கூட்டணியில் ஒரு காலத்தில் ஹிட் பாடல்களாக எழுதி வந்தவர் வைரமுத்து. அவருடன் ஏற்பட்ட விரிசலையடுத்து ஏ.ஆர்.ரகுமானுக்கு பாடல் களை எழுதினார். அந்த நேரங்களில் முன்னணி நிறு வனங்களுக்கு மட்டுமே பாடல்கள் எழுதினார்.

அதோடு, கிழக்கு சீமையிலே படம் வந்த நேரத்தில் லட் சக்கணக்கில் தனது சம்பளத்தையும் உயர்த்தியவர். அதனால் சிறிய பட்ஜெட் நிறுவனங்கள் வைரமுத்துவை நெருங்கவே பயந்து ஒதுங்கி நின்றன.

ஆனால் இப்போது நிலைமைமாறிவிட்டது. புதுமுக பாடலாசிரியர்களின் படையெடுப்பு வைரமுத்து போன்ற முன்னணி பாடலாசிரியர்களுக்கு பெரிய தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஓய்வின்றி பாடல் எழுதி வந்த வைரமுத்து அவ்வப்போது ஒரு படத்துக்கு பாடல் எழுதும் நிலையில் இருக்கிறார்.

அதனால், முன்பு மாதிரி முன்னணி நிறுவனத்துக்குத்தான் பாட்டெழுதுவேன் என்பதை விட்டு விட்டு சிறிய நிறுவ னங்களுக்கும் இறங்கி வந்து பாட்டெழுதுகிறார்.

சகாப்தம் படப்பிடிப்பு மலேசியாவில்

விஜயகாந்தின் இரண்டாவது மகன் சண்முக பாண்டியன் "சகாப்தம்" என்றபடத்தில்கதாநாயகனாக நடித்து வருகிறார். மகனின் படப்பிடிப்பு பணிகளை கவனிப்பதற்காக விஜயகாந்த் மனைவி பிரேமல தாவுடன் மலேசியா சென்றுள்ளார்.

மலேசியா மற்றும் சிங்கப்பூரில் 10 நாள்கள் தங்கியிருந்து படப்பிடிப்புகளை முடித்து விட்டு சென்னை திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

பணிய சொந்

அஜீத் தனது தோட்டக்கார செலவில் வீ புரம் சாலை அஜீத் அந்த ஆளுக்கு அ செய்து கொ அதன் பிறகு நடைபெற்றது பங்கேற்றார் ருந்தார்கள். கள் விறுவிற தற்போது அஜீத் தற்போ நடிப்பதற்காக படப்பிடிப்பை கிரஹப்பிர ஒவ்வொருவ

படம்: ஐந்தாம் தலைமுறை சித்தவைத்திய சிகாமணி

குடும்பப் பாங்கான படங்களில் நடிக்கத் தயார் – சினேகா

பிரபல நடிகைகளாக தமிழ்ச் சினிமாவில் இருந்த சிம்ரன், ரம்பா, ஜோதிகா, தேவயானி என பல நடிகைகளும் திருமணம் முடிந்த கையோடு, குடும்பம் குழந்தைகள் என்று வாழ்க்கையை நடத்துகின்றனர்.

ஆனால், நடிகர் பிரசன்னாவை காதலித்து திருமணம் செய்துகொண்டுள்ள சினேகா திருமணத்துக்கு பிறகும் குடும்பப் பாங்கான சிறந்த பாத்திரம் கிடைக்குமானால் சினிமாவில் தொடர்ந்து நடிப்பேன் என்று கூறியுள்ளார்.

அந்த வகையில், திருமணத்திற்கு பிறகு ஹரிதாஸ் என்ற படத்தில் நடித்த சினேகா, தற்போது பிரகாஷ்ராஜ் இயக்கி நடித்துள்ள உன் சமையலறையில் என்ற படத்தில் கதாநாயகியாகவே நடித்திருக்கிறார். இப்படி அவர் திருமணத்திற்கு பிறகு நடித்த இரண்டு படங்களிலுமே அவருக்குப் பொருத்தமான வேடங்கள் அமைந்தன.

இதற்கிடையே, தனது கணவர் பிரசன்னாவுடன் இணைந்து தயாரிப்பு நிறுவனம் தொடங்கியபோதும், முன்பு போலவே பரவலாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்படும் சினேகா, தனது அபிமான இயக்குநர்க ளிடமும் தனக்கேற்ற வேடங்கள் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்களுக்கு சொந்தப் பணத்தில் வீடு

அஜீத் தனது வீட்டில் வேலை பார்க்கும் சமையல்காரர், தோட்டக்காரர், சாரதி உள்ளிட்ட 10 பேருக்கு சொந்த செலவில் வீடு கட்டியுள்ளார். இதற்காக பழைய மகாபலிபுரம் சாலையில் ஐந்து கிரவுண்ட் நிலம் வாங்கிய அஜீத் அந்த இடத்தை பணியாளர்கள் பெயரிலேயே ஆளுக்கு அரைப்பரப்பு காணி என பத்திரப் பதிவும் செய்து கொடுத்தார்.

அதன் பிறகு வீடுகள் கட்டுவதற்கான பூமி பூஜை நடைபெற்றது. இதில் அஜீத் மனைவி ஷாலினியுடன் பங்கேற்றார். பணியாளர்கள் குடும்பத்தினரும் வந்திருந்தார்கள். கடந்த சில மாதங்களாக கட்டுமானப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன.

தற்போது 10 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அஜீத் தற்போது கௌதம் மேனன் இயக்கும் படத்தில் நடிப்பதற்காக மலேசியா சென்றுள்ளார். சில தினங்களில் படப்பிடிப்பை முடித்து விட்டு சென்னை திரும்பியதும் கிரஹப்பிரவேசம் நடத்தி தனது பணியாளர்கள் ஒவ்வொருவரையும் புதுவீட்டில் குடிவைக்கிறார்.

ஆர்கேயின் படத்தில் வடிவேலு?

ஷாஜி கைலாஷ் இயக்கும் என் வழி தனி வழி எனற படத்தில் நாயகனாக, பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் ஆர்கே. நாயகிகளாக பூனம்கபூர், மீனாட்சி தீக்ஷித் நடிக்கின்றனர். ராதாரவி, விசு, ஆஷிஷ் வித்யார்த்தி, தலை வாசல் விஜய், இளவரசு, சம்பத், ரோஜா விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர். இந்தப் படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார். ராஜரத்தினம் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.

எல்லாம் அவன் செயல் படத்தில் ஆர்கே. வடிவேலுவுடன் இணைந்து நடித்த நகைச்சுவை காட்சிகள் இன்றளவும் பேசப்படுகின்றன. எனவே, வடிவேலுவை இந்தப் படத்திலும் எப்படியாவது நடிக்க வைத்துவிட வேண்டும் என்கிற முடிவில் இருக்கிறார் ஆர்கே. இதற்காக அவர் வடிவேலுவை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

ஆனால் வடிவேலுவிடம் இருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லையாம். இருந்தாலும் அவரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் வழி மேல் விழி வைத்து காத்துக்கொண்டிருக்கிறார் ஆர்கே.



மீண்டும் மருதநாயகம்

கமல் கதாநாயகனாக நடிக்கும் படம் மருதநாயகம். இந்தப் படத்தை தானே இயக்குவதாகவும் அறிவித்தார். தனது சொந்த பட நிறுவனமான ராஜகமல் இன்டர் நேஷனல் மூலம் தயாரிக்க முடிவெடுத்ததுடன் படத்தின் பூஜையை 1997இல் நடத்தினார். இதில் இங்கிலாந்து ராணி எலிசபெத் கலந்துகொண்டார். பூஜையைத் தொடர்ந்து படப்பிடிப்பும் ஆரம்பமானது.

சில நாள்கள் படப்பிடிப்பு நடந்த நிலையில் பண நெருக்கடியால் படப்பிடிப்பு தடைப்பட்டது. இதன் பின்னர் மருதநாயகம் படப்பிடிப்பை மீண்டும் ஆரம்பிக்க கமல் பலமுறை முயன்றும் நடைபெறவில்லை.

தற்போது ஹெரிவிட் பட நிறுவனமான 'பொக்ஸ் ஸ்டார் ஸ்டூடியோ' மருதநாயகம் படத்தை எடுக்க முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. எனவே படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து கமல் கூறுகையில், "மருதநாயகம் பெரிய பட்ஜெட் படம். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய மூன்று மொழிகளில் எடுக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு உள்ளூரில் தயாரிப்பாளர் கிடைப்பது கஷ்டம். ஆனாலும் விரைவில் இந்த படத்தை எடுப்பேன்" என்றார்.

படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். ரவி கே.சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார்.

15 வருடங்களுக்குப் பின் மீண்டும் சினிமாவுக்கு

காதல் மன்னன் படத்தில் அஜீத்துக்கு ஜோடியாக அறிமுகமானார் மானு. சிங்கப்பூர் தமிழ்ப் பெண்ணான இவர் அந்த படத்தின் வெற்றி பின்னர் திரையுலகில் பெரிய நடிகையாகி விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பின்னர் தேடிவந்த பட வாய்ப்புகளை கூட தவிர்த்துவிட்டு சிங்கப்பூர் சென்ற மானு, அங்குள்ள தொலைக்காட்சிகளில் முகம் காட்டி வந்தார். அந்தவகையில், கிட்டத்தட்ட 15 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தற்போது இயக்குநர் ஜெயம் ராஜா நடித்துள்ள என்ன சத்தம் இந்த நேரம் என்ற படத்தில் நடித்துள்ளார் மானு.

இந்த படத்தின் இசைவெளியீட்டு விழாவுக்காக சென்னை வந்திருந்த மானு, 15 வருடங்கள் ஆனபோதும் அதே பழைய இளமையான மானுவாகவே காட்சி கொடுத்தார். மேலும், இந்த படத்தில் நான்கு குழந்தைகளுக்கு அம்மாவாக நடித்தது நல்ல அனுபவமாக இருந்தது. அதனால் இது மாதிரி என் மனதை தொடும் வேடங்கள் கிடைத்தால் அவ்வப்போது சினிமாவில் நடிப்பேன் என்றார் மானு.

குரு சுக்ரன் படத்தில் நாயகர்கள்

குரு சுக்ரன் என்ற படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்கள் குரு, கமல்நாத் என்ற இரட்டை சகோதரர்கள். சாதனா டைட்டஸ் என்ற புது முகம் படத்தின் நாயகி. இவர்கள் தவிர சிங்கமுத்து, சண்முகராஜன், நரேன், நடிக்கிறார்கள். இசை அமைப்பாளர் சந்திரபோஸ் மகன் சந்தோஷ் இசை அமைக்கிறார்.

படப்பிடிப்புகளை குற்றாலம், தென்காசி ஆகிய பகுதிகளில் நடத்தியிருக்கிறோம்" என்கிறார் இயக்குனர் பி. ஆனந்த்.

ரஞ்சித் இயக்கத்தில் கார்த்தி

பருத்திவீரன் படத்தில் கிராமத்து வாலிபனாக நடித்த கார்த்தி அதன்பிறகு நான் மகான் அல்ல, சிறுத்தை, சகுனி, அலெக்ஸ் பாண்டியன் போன்ற அதிரடியான படங்களிலும் அசத்தலான உடையில் கதாநாயகன் வேடங்களில் நடித்தார். ஆனால் அது எடுபடவில்லை. இதையடுத்து மீண்டும் அழுக்கு உடை அணிந்து நடிக்கும் கிராமத்து வேடத்துக்கு மாறி இருக்கிறார். இப்படத்தை ரஞ்சித் இயக்குகிறார். இவர் அட்டகத்தி என்ற படத்தை இயக்கியவர்.

கார்த்தியை வைத்து இவர் இயக்கும் படத்துக்கு மெட்ராஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

அரசியலில் இருந்து ஆன்மீகத்திற்கு..

நடிகையாக இருந்து அரசியல்வாதியாக மாறியவர் குத்து ரம்யா என்கிற ரம்யா எஸ்பந்தனா. கர்நாடகாவின் முன்னாள் முதல்வரான எஸ்.எம்.கிருஷ்ணாவின் பேத்தியான இவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, கட்சியில் சேர்ந்த சில மாதங்களிலேயே தாத்தாவின் செல்வாக்கைப் பயன்படுத்தி கடந்த முறை எம்.பி. இடைத்தேர்தலில் சீட் வாங்கினார். கர்நாடகா மாநிலத்தில் உள்ள மாண்டியா தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.பியான பிறகு நடிப்புக்கு முழுக்குப்போட்டுவிட்டு முழுநேர அரசியல்வாதியாக செயல்பட்டார்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற மக்களவை தேர்தலிலும் அதே மாண்டியா தொகுதியில் போட்டியிட்டார். இந்தமுறை தோல்வியடைந்தார் ரம்யா. தொகுதிக்கு ஏராளமான விஷயங்கள் செய்து கொடுத்ததினால் நிச்சயம் வெற்றியடைவோம் என்ற எதிர்பார்த்த ரம்யாவுக்கு தோல்வி கடும் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது போலும். எனவே ஆன்மீகத்தின் பக்கம் தன் கவனத்தை திருப்பியுள்ளாராம் ரம்யா. யோகா, தியானம் என்று மனதை அமைதியடையச் செய்வதோடு, சமீபகாலமாக யாருடனும் பேசாமல் மவுனவிரதமும் கடைபிடிக்கிறாராம் ரம்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிப்பறையில் குழந்தை

பிறந்த குழந்தையை பெண் ஒருவர் கழிப்பறையில் விட்டு சென்றுள்ளது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இச்சம்பவம் பிரான்ஸ் விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள ஓர்லி விமான நிலையத்தின் கழிப்பறையில் பெண் ஒருவர் குழந்தையை பெற்றெடுத்து விட்டு, அங்கேயே போட்டுவிட்டு சென்றுள்ளார். கழிப்பறையை சுத்தம் செய்ய வந்த பெண்மணி குழந்தை பேப்பரில் சுற்றி, பொலிதீன் பையில் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். தற்போது இந்த குழந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், குழந்தையின் தாய் யார் என்பது குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரிட்டனைச் சேர்ந்த, அமலியா என்ற, மூன்று வயது பெண் குழந்தைக்கு, வித விதமான, சப்பாத்துகளை சேகரிப்பது என்ற வித்தியாசமான ஆசை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தன் தாயாரின் சப்பாத்துக்களை அணிந்து பார்த்த அமலியாவுக்கு பின் அதிகமான சப்பாத்துக்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. இதனால், தனக்கு கைச்செலவுக்குக் கிடைக்கும் பணம் முழுவதையும், சப்பாத்துக்கள் வாங்குவதற்கே பயன்படுத்துகிறாள். அதேபோல பிறந்த நாள் உள்ளிட்ட விருந்துபசாரங்களில் பங்கேற்கும்போது தனக்கு பரிசளிக்கும் விருந்தினர்களிடம், சப்பாத்துக்களை மட்டும் பரிசளிக்கும்படி, கட்டாயமாக கேட்கிறாள். இதுவரை, இந்த குட்டி சுட்டி, 35 சோடி சப்பாத்துகளை வாங்கிக் குவித்திருக்கிறாள்.

கல்வியில் அசத்தும் வானரங்கள்

அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள மருத்துவ பல்கலையில், நரம்பு உயிரியல் துறை நிபுணராக பணியாற்றுபவர், மார்கரேட் லிவிங்ஸ்டன். இவரும், இவரின் குழுவைச் சேர்ந்தவர்களும், குரங்குகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் வித்தியாசமான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர். இதற்காக, மூன்று குரங்குகளை தேர்வுசெய்து, கடந்த சில மாதங்களாக, அவற்றுக்கு, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகியவை குறித்து, பாடம் கற்று கொடுத்து வருகின்றனர். 1 முதல் 25 வரையிலான எண்களையும், "ஏ" முதல், "இசட்" வரையிலான எழுத்துகளையும், மூன்று குரங்குகளுமே, நன்றாக கற்று விட்டன. ஒரு பலகையில், எண்களையும், எழுத்துகளையும் எழுதி, குறிப்பட்ட எண் அல்லது, "ஏ" எழுத்து ஆகியவற்றை சத்தமாக உச்சரித்தால், மூன்று குரங்குகளும், சரியாக அவற்றை அடையாளம் காட்டுகின்றன.

நாடகக் கலைஞர்கள் நிர்வாணப் போராட்டம்

பிரான்சில் நாடக கலைஞர்களுக்கு அந்நாட்டு அரசாங்கத்தால் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பிரான்சில் யூலை 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் திரையரங்கு கலாச்சார விழாவிற்கு நாடக குழுவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அந்தநாட்டு காலாச்சார அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால் கலைஞர்களோ, இதில் கலந்து கொள்வதற்கு தங்களுக்கு ஊதியம் வழங்குமாறு கூறியுள்ளனர்.

இதனை ஏற்க மறுத்த அமைச்சர், இந்தநாட்டில் உங்களுக்கு அரசாங்கத்தால் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேலையற்றோருக்கு வழங்கப்படும் ஊதியமும் வழங்கப்படுகிறது. ஆதலால் இந்த நிகழ்ச்சிக்கு ஊதியம் வழங்கமுடியாது என்று கூறியுள்ளார்.

இதனைத் எதிர்த்து நாடக கலைஞர்கள் நிர்வாண போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாய்லாந்தில் வாழ்ந்து வரும் 14 வயது சிறுமியான சுபத்ரா சாசுபானுக்கு ஹைபர்டிரிசோசிஸ் என்ற விநோதமான நோய்த் தாக்கம் உள்ளது.

இந்தநோயினால் ஹார்மோன் பாதிப்பு ஏற்பட்டு, சுபத்ராவுக்கு தலையில் இருப்பது போன்றே முகத்திலும் முடி வளர்ந்துள்ளது.

கண் மற்றும் வாய் தவிர முகம் முழுவதும் முடி படர்ந்து காணப்படுகிறது. தலைமுடியை வெட்டி விடுவது போலவே, அவ்வப்போது சிறுமியின் முகத்தில் உள்ள முடியையும் வெட்ட வேண்டுமென சுபத்ராவின் தாயார் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், சுபத்ராவின் இந்த நிலையை சாதனையாக அங்கீகரித்துள்ளது கின்னஸ் நிறுவனம்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், தனது 90 ஆவது பிறந்தநாளை, ஸ்கை டைவ் அடித்து உற்சாகமாக கொண்டாடினார். அமெரிக்காவின் கென்னி பன்க்போர்ட் விமானப்படை தளத்தில், முன்னாள் ராணுவ வீரர்களின் உதவியுடன், ஹெலி கொப்டரில் இருந்து குதித்த புஷ், வானில் மிதந்தவாறு தனது பிறந்தநாளை கோலாகலமாக கொண்டாடினார்.

விண்ணிலே பிறந்தநாள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்ணின் பெருத்தக்க யாருள்..?

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவருடைய வீட்டுக்கு நீண்ட ஒரு இடைவெளிக்குப் பிறகு போயிருந்தேன். முன்பிருந்ததைவிட நல்ல வசதியாக அமைதியாக இருந்தது வீடு. அவருடைய மனைவி மிகுந்த பொறுப்புணர்வுள்ளவர்.எதையும் சிந்தித்துச் செய்யும் ஆற்றல் அவரிடம் இருக்கின்றது.அவருக்கு இரண்டு பிள்ளைகள் .மூத்தவன் பெடியன்.இரண்டாவது பொம்பிளைப்பிள்ளை. நான் போய் கொஞ்ச நேரத்தால பெடியன் வந்தான்.மோட்டார் சைக்கிள் குதிரை மாதிரி இருந்தது.காதில தோடு.கலைஞ்ச முடி. "பெடியன் எங்கயாவது வேலை பாக்கிறானே..?" "ஓ! ஒரு பிறைவேற் கொம்பனியில வேலை செய்யிறான்.மாதம் இருபதாயிரம் ரூபா சம்பளம்." "அப்ப பிள்ளை என்ன செய்யிறாள்?." "அவள் கொஸ்பிற்றல்ல நேர்ஸ்ஸா இருக்கிறாள்.." "உங்களுக்கு பரவாயில்ல..பெடியனும் உழைக்கிறான்.பிள்ளையும் உழைக்கிறாள்.பிறகென்ன.." "பெடியன் உழைக்கிறான் தான்.அதை வீட்டில கண்ணில கூட காட்டுறான் இல்லயே..பிள்ளை தான் இவ்வளத்தையும் பொறுப்பாக பாக்கிறாள்.அவனிட்ட எவ்வளவு சொல்லியும் பலனில்லை.முந்தியெல்லாம் பொம்பிளைப்பிள்ள பிறந்தா கூடவே பிரச்சினையும் பிறந்ததா சொல்லுவினம்.இப்பெல்லாம் வீட்டில ஒரு பொம்பிளைப்பிள்ள இல்லையெண்டால் பெத்தவை பாடு நரகம் தான்..ம்." எனக்கு ஆயிரம் ஒஸ்கார் விருது கிடைத்தமாதிரி இருந்தது."பெண்ணிற் பெருத்தக்க யாருள"என்று கத்திப் பாடவேண்டும் போலவிருந்தது.

உலக நாயகி அனுராதா கொய்ராலா

உலகில் மிக வேகமாக கட்டுப்பாட்டை கடந்து பரவிவருகின்ற பாலியல்தொழிலிலிருந்து பல ஆயிரம் பெண்குழந்தைகளைக் காப்பாற்றி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்ற அனுராதா கொய்ராலா 2012 ஆம் ஆண்டு உலக நாயகியாக அடையாளம் காணப்பட்டார். நேபாளத்தைச் சேர்ந்த இவர் இதுவரையில் நேபாள எல்லையில் விற்கப்படுகின்ற குழந்தைத் தொழிலாளர்கள் 12000பேரை பாதுகாத்துள்ளார்.

அமெரிக்காவின் சி. என். என். தொலைக்காட்சி 2007 ஆம் ஆண் டுமுதல் தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை தெரிவுசெய்து உலக ஹீரோவாக அறிவித்து வருகின்றது. மிகப்பெரிய விபச்சாரச் சந்தையாகக் கருதப்படும் இந்திய - நேபாள எல்லையில் விற்கப்படுகின்ற இளம்பெண்களையும் குழந்தைகளையும் அனுராதா கொய்ராலாவும் அவரது மைத்தி நேபால் அமைப்பும் சேர்ந்து பாதுகாத்து வருவதைக் கருத்திற்கொண்டு அவருக்கு இந்த அடையாளத்தை 2012ஆம் ஆண்டு சி.என்.என். வழங்கி யுள்ளது. 1993 ஆம் ஆண்டிலிருந்து தன்னலமற்ற இந்தச் சேவையை செய்து வரும் இந்தப் பெண்மணியால் இதுவரை 12000 பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

கொக்கு பற... பற...

குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டுவது என்பது சற்றுச் சிரமமான விடயம்.அதிலும் குறிப்பாக மிகவும் சிறிய பராயத்தில் அடித்தளம் இடுகின்ற போது மிகவும் அவதானமாக அவர்களது மனம் சலிப்படையாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.ஆனால் இப்போதெல்லாம் அவசரமான இயந்திரத்தனமான உலகில் அவற்றை எல்லாம் பக்குவமாக எடுத்துச்சொல்ல பெற்றவர்களுக்கு நேரம் போதுமான தாக வில்லை.அதனால் இயந்திரத்தனமாகவே பிள்ளைகளிடத்திலும் கல்வியைத் திணிக்க முயற்சிக்கிறார்கள்.

உங்கள் குழந்தை மிகவும் சிறிய பராயத்தில் குறிப்பாக மூன்று வயதொட்டிய பிள்ளையாக இருந்தால் விளையாட்டோடு விளையாட்டாக கல்வியைக் கொடுங்கள்.மாலை நேரங்களில் விளையாடுகின்ற போது அல்லது உணவூட்டுகின்ற போது வானத்தில் பறக்கின்ற பறவைகள் பற்றிச் சொல்லிக்கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அறிவும் வருகின்ற நேரம் உணவூட்டுவதிலும் கஷ்டம் இருக்காது.

அதே போன்று அவற்றை எண்ணி எண்ணி ஆரம்பக் கணக்கினை குழந்தைகளுக்குப் பதியவைக்கலாம். இதுபோன்று இயல்பான முறையில் முயற்சிப்பது குழந்தைகளின் மனதிலும் சந்தோசத்தைக் கொடுப்பதோடு ஆரோக்கியமான எதிர்காலத்துக்கும் வழி வகுக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எது மரியாதை?

எனது பெரியக்கா குடும்பத்தினர் லண்டனில் இருந்து வந்திருந்தார்கள். அக்காவின் மூத்தவளுக்கு 17 வயதுதான். ஆனாலும் எல்லோருடனும் பெரியவர்கள் போல பழகுவாள். கலகலப்பானவள். எல்லா விடயங்களையும் தோண்டித்துருவி அறிய விரும்புபவள். அத்தோடு ஒவ்வொருவரினதும் வயது, தகுதி என்பன அறிந்து அவர்களுக்குரிய மரியாதையும் கொடுப்பாள்.

லண்டனில் இருந்தபடியால் ஊர்ச் சாப்பாடுகளை அவள் உண்டு பழக்கமில்லை. ஆனாலும் ஒடியல் கூழ்,கொழுக்கட்டை என்பவற்றை அடிக்கடி செய்வித்து ருசித்தாள். கடைசியில் அவற்றை எப்படிச் சமைப்பது என்று சொல்லித் தரும் படி என்னை உடும்புப் பிடியாகப் பிடித்து விட்டாள். வேறுவழி? அவளைக் கதிரையில் இருக்கச் சொல்லிவிட்டு முன் விறாந்தையில் இருந்தபடி, கொழுக்கட்டைக்கு மா பதமாக குழைக்கும் வித்தத்தைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன். அவளும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அக்காவுக்கு படிப்பித்த மாஸ்ரர் வீட்டுக்கு வந்தார். அக்காவும் அவரைக் கண்டு , பள்ளிக் கூட நினைவுகளை இரைமீட்டிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் நான் அதைக் கவனித்தேன்.

அக்காவின் மகள் மாஸ்ரருக்கு முன்னால் கால் மேல் கால் போட்ட படி அமர்ந்திருந்தாள். எனக்கு 'பக்' என்றிருந்தது. எல்லாருக்கும் மரியாதை கொடுக்கிற பிள்ளை ஏன் இப்பிடி செய்யிறாள் என்று குழப்பம். அவள் என்னைப் பார்த்த ஒரு சமயத்தில் , காலைக் கீழே விடும் படி சைகை செய்தேன். ஆனால் அவளோ குழப்பமாக என்னைப் பார்த்தாள். நான் மீண்டும் மீண்டும் சைகை செய்த பின்னரே காலை கீழே விட்டாள். பின்னர் மெதுவாக உள்ளே போய் விட்டாள். நானும் அவளைத் தொடர்ந்தேன்.

" சித்தி! ஏன் காலை கீழ விடச் சொன்னனீங்கள்?" என்று அவள் என்னைக் கேட்டாள்.

"பின்ன? அவர் எவ்வளவு பெரிய ஆள். உங்கட அம்மாவுக்கு படிப்பிச்சவர். அவருக்கு முன்னால மரியாதை இல்லாமல் இப்பிடி காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டிருந்தா அவர் என்ன நினைப்பார்?" என்றேன் நான்.

" ஏன் சித்தி, காலுக்கு மேல கால் போட்டா மரியாதையில்லாத செயலோ?" அப்பாவியாக அவள் கேட்டாள்.

" ஓமம்மா"

" ஐயோ சித்தி அது எனக்கு தெரியாதே. அங்க லண்டனில காலுக்கு மேல கால் போடுறது தான் மரியாதையான அடக்கமான செயல். அதுதான் அப்பிடி இங்க இருந்தன்" என்றாள் அவள்.

கலாசார வேறுபாடுகள் ஒவ்வொரு செய்கைக்கும் வேறுவிதமான அர்த்தங்களைக் கற்பிக்கின்றன. அவள் லண்டனில் பிறந்து வளர்ந்த பெண் என்பதால் தங்கள் முறையில், அவள் மரியாதை கொடுப்பதாக நினைத்துச் செய்ததை எங்கள் கலாசாரக் கண்ணால் அவமரியாதை செய்துவிட்டதாக அல்லவா நினைத்து விட்டேன். அவளை ஆதரவோடு அணைத்துக் கொண்டேன்.

தண்ணீர்...! தண்ணீர்...!!



■ எஸ்.சிவதாசன்
நீர்வழங்கல் சபை

1956 ஆம் ஆண்டு John Barnes மற்றும் Peter Magee ஆகிய விஞ்ஞானிகளினால் எலிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் dimethyl nitrosamine கல் ஈரலில் புற்றுநோய் கட்டிகளை ஏற்படுத்துகின்றன எனக் கண்டறியப்பட்டது. 1970 ஆம் ஆண்டு நோர்வேயில் சோடியம் நைத்திரைற் (NaNO2) பயன்படுத்தி பாதுகாக்கப்படும் கடல் உணவுகளை உட்கொண்ட விலங்குகளில் 90% மான வற்றில் ஈரலில் புற்றுநோய்கள் அவதானிக்கப்பட்டன. அதாவது சோடியம் நைத்திரைற் ஆனது dimethyl amine உடன் தாக்கமுற்று dimethyl nitrosamine உருவாக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. இங்கு இத்தகவலை குறிப்பிடுவதற்கான காரணம் மக்கள் தமக்கு ஏற்படக்கூடிய பாரிய நோய்களிலிருந்து தம்மை பாதுகாத்தல் வேண்டும். நீங்கள் பருகும் நீரானது சுத்தமானதா சுகாதாரமானதா என்பதை தயவு செய்து உங்களின் நலம் கருதி பரிசோதித்த பின்னர் அருந்துங்கள். நீங்கள் நினைக்கலாம் கொதித்தாறிய நீரைப் பருகினால் சரி என்று அப்படி நினைப்பது தவறான தாகும் ஏனெனில் நீரைக் கொதிக்க வைக்கும்போது நைதரேற் போன்றன செறிவடையுமே தவிர அவை அகற்றப்படாது. நீரிலுள்ள நைதரேற்றினை கரிவடிகட்டிகளையோ (charcoal filters) அல்லது நீர் மென்மையாக்கிகளையோ (Water softeners) அல்லது குளோரினேற்றம் செய்தோ அல்லது நீரை கொதிக்க வைத்தோ அகற்ற முடியாது. எனவே மிகவும் செலவு கூடிய முறைகள் மூலமே நைதரேற் ஐ அகற்றலாம். அதாவது Reverse osmosis, disfillation மற்றும் Ion exchange முறைகள் மூலமே அகற்ற முடியும். எனினும் இத் தொழினுட்பங்கள் மிகவும் செலவு கூடிய முறைகளாக இருப்பதுடன், பராமரிப்பு செலவும் கூடியவையாகும். எனவே யாழ் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படவிருக்கும் பெரும் சுகாதார பிரச்சினைகளை கருத்திற் கொண்டு மக்களுக்கு தூய குடிநீரை வழங்கவேண்டிய அனைவரினதும் கடமையாகும். எனவே அத்தகைய தூய நீரை எங்கிருந்து பெறுவது ?

எனவே, இத்தகைய பாதக நிலையிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமானால் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு போதிய அறிவூட்டப்பட்டு அசேதனப் பசளைகளை குறைவாகவும் சேதனப் பசளைகளை கூடுதலாகவும் பாவிப்பதற்கு பழக்க படுத்த வேண்டும். பின்பு படிப்படியாக இரசாயனங்களைப் பாவிக்காத சேதனமுறை விவசாயத்திற்கு மாற்றப்பட வேண்டும். இதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.

விவசாயிகள் பயிர்களுக்கு அளவான நீரை மாத்திரம் பயன்படுத்துவதற்கு அறிவூட்டப்படுவதுடன் சொட்டு நீர்ப் பாசனம், விசிறல் நீர்ப்பாசனம் மற்றும் குறைந்த நீர்ப் பயன் பாட்டுடன் விளைவிக்கக்கூடிய புதிய பயிரினங்களை அறிமுகப்படுத்தல் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புதிய கிணறுகளை அமைத்தலை கட்டுப்படுத்த வேண்டும். இதுவும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப் படக்கூடிய செயற்பாடே.

குறைந்து வரும் தரைக்கீழ் நீரின் அளவினை அதிகரிப்பதற்கு மழை நீரைத்தேக்கவும், கடல் நீரேரிகளை நன்னீராக்கவும், குடாநாட்டிலுள்ள சிறு குளங்களை நன்கு பராமரிக்கவும் தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட அனைத்து மலசல கூடங்களும் பாதுகாப்பான முறையில் கட்டப்பட வேண்டும் அல்லது அனைத்து மலசலகூடக் கழிவுகளும் குழாய் மூலம் பிறிதொரு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட வேண்டும்.

சில குறிப்பிட்ட விவசாய நிலங்களில் நீர் கீழ்நோக்கி செல்வதை தடுக்க கூடியவாறு அமைப்புக்களை ஏற்படுத்தி விவசாய நிலங்களின் நீரானது பாறைகளை சென்றடையாது தடுப்பதன் மூலம் தாவரங்களுக்கு தேவையான நீரை மீணடும் மீண்டும் இறைத்தலைக் குறைக்கலாம் அத்துடன் மேலதிக உரங்கள் இட வேண்டிய தேவை ஏற்படாது. ஏனெனில் இவ் நீரிலே மேலதிகமாக காணப்பட கூடிய நைதரேற் போன்றவற்றை தாவரங்கள் உறிஞ்சக்கூ வாய்ப்பு ஏற்படும். இம்முறையானது இஸ்ரேல் போன்ற நாடுகளில் பயன்படுத்த படுகின்றதாக அறிகின்றேன். எனினும் இம் முறையானது மழை காலங்களுக்கு ஏற்றதாக அமையுமா என்பது தெரியாது. ஏனெனில் வெள்ளப் பெருக்கு போன்றன ஏற்பட வாய்ப்பாக அமையும்.

அத்துடன் யாழ் குடாநாட்டிலே நைத்திரேற் உரங்களை தடைசெய்வதன் மூலமும் விவசாயிகளை மாற்றுப்பயிர் செய்கைக்கு ஊக்குவிக்க முடியும். எனவே குடிநீர் பிரச்சினையானது அனைத்து மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பெரும் பிரச்சினையாக இருப்பதனால் மிக முக்கியமான அவசரமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். மக்களுக்கு சுத்தமான குடி நீரை வழங்கும் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு தற்போதைய தரைக்கீழ் நீர் கொள்ளளவு போதுமானதாக குடாநாட்டில் இல்லாததாலும், மக்களை மாசடைந்து வரும் நீரினால் ஏற்படக்கூடிய உடனடி ஆபத்துக்களில் இருந்து விரைவாக பாதுகாக்க வேண்டியிருப்பதனாலும், குடி நீரின்றி அவதியுறும் தீவுப் பகுதி முதலான தரைக் கீழ் நீர் மிகவும் குறைந்த பகுதிகளுக்கு குடி நீர் விநியோகம் செய்ய வேண்டியிருப்பதனாலும், குடாநாட்டிற்கு வெளியிலிருந்தே மேற்பரப்பு நீரைக் கொண்டு வந்து சுத்திகரித்து பின்பு சுத்தமான குடி நீரை மக்களுக்கு விநியோகம் செய்தல் வேண்டும். ஏனெனில் குடாநாட்டு தரைக்கீழ் நீரைச் சுத்திகரிக்க ஏற்படும் செலவை விட மேற் பரப்பு நீரை சுத்திகரிக்க ஏற்படும் செலவு குறைவாகும்.

எனவே இப்பாதிப்புக்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படாவிடின் எதிர்கால யாழ்ப்பாண குடாநாடு சுடுகாடாக மாறும் ஆபத்துக்கள் காணப்படுகின்றன.

முண்டாசுப்பட்டி

திரை விமர்சனம்

புகைப்படம் எடுத்துக்கொண்டால் ஆயுள் குறையும் என்பது இரண்டு தலை முறைக்கு முன்பு தமிழர்களிடம் நிலவி வந்த நம்பிக்கைகளில் ஒன்று. அதுதான் இந்தக் கதைக்கான ஆதார ஸ்ருதி. புகைப்படம் எடுத்துக்கொண்டால் நோய் வாய்ப்பட்டு இறந்துபோவது உறுதி என்று நம்புகிறார்கள் முண்டாசுப்பட்டி கிராமத்து மக்கள். ஆங்கிலேய ஆட்சியின்போது அந்தக் கிராமத்தில் நடந்த ஒரு அசம்பாவிதம்தான் இந்த நம்பிக்கைக் குக் காரணம். விளைவு அந்தக் கிராமத் தில் கமராவைக் கண்டாலே தலை தெறிக்க ஓடுகிறார்கள்.

உயிரோடு இருப்பவர்களைப் படம் பிடிக்கக் கூடாது என்பதால் இறந்த பிறகு பிணத்தை அலங்கரித்து புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்வது அவர்கள் வழக்கம். அந்தக் கிராமத்தின் தலை வர் இறந்துபோக, அவரது பிணத்தைப் புகைப் படம் எடுக்க ஹாலிவுட் ஃபோட்டோ ஸ்டுடியோவின் உரிமையாளர் கோபியை யும் (விஷ்ணு) அவன் உதவியாளரையும் (காளி வெங்கட்) அழைக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு பள்ளிக்கூடத்தில் புகைப் படம் எடுக்கச் சென்றிருந்தபோது கலைவாணி (நந்திதா) என்னும் பெண் ணைச் சந்திக்கி றான் கோபி. கலைவாணி முண்டாசுப் பட்டியைச் சேர்ந்தவள்.

ஊர்த் தலைவர் உயிர் போகாமல் இழுத்துக்கொண்டிருக்க, அவர் இறக் கும்வரை அங்கேயே தங்கியி ருந்து புகைப்படம் எடுத்துத் தரும் படி ஊர்க்காரர்கள் வேண்டிக்கொள் கிறார்கள். கலைவாணியும் அந்த வீட்டில்தான் இருக்கிறாள். அந்த ஊரிலேயே தங்கும் கோபி, கலைவாணி யிடம் தன் காதலைச் சொல்கிறான். அவளுக்கும்அவனைப்பிடிக்கிறது. ஆனால் அவ ளுக்கு ஏற்கனவே திருமணம் நிச்ச யமாகி விட்டது.

ஊர்த் தலைவர் இறந்ததும் அவர் பூத உடலைப் புகைப்படம் எடுத்துவிட்டு ஸ்டூடியோவுக்குத் திரும்புகிறான் கோபி. ஆனால் எடுத்த புகைப்படம் சரி யாக விழவில்லை. அதற்குப் பதிலாக ஒரு தந்திரம் செய்கிறான். ஆனால் குட்டுவெளிப் பட்டு மாட்டிக் கொள்கிறான். ஊர்க் காரர்களின் கோபத்துக்கு ஆளாகி தண்டனை பெறும் கோபியும் அவன் நண் பர்களும் எப் படித் தப்பினார்கள், கோபி யின் காதல் என்ன ஆயிற்று என்பதுதான் மீதிக் கதை.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரை தேடும் இணைய வலை

திரென்று உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி பொலிஸ் சீருடையில் ஒருவர் அதிகாரத் தோரணையில் விசாரித்தால் அநேகம் பேர் நிச்சயம் அந்த நபர் தங்கப்பதக்கம் சிவாஜியோ அல்லது வால்டர் வெற்றி வேல் சத்யராஜாகவோ தான் இருக்க வேண்டும் என்று நம்பிவிடுவார்கள். அதனால்.கடகடவென நேற்று வைத்த மீன் குழம்பு முதல் இன்று காலை பல் விளக்கியது வரை நீங்கள் விவரித்து புல்லரிக்க வைத்து விட வாய்ப்பிருக்கிறது. அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் சிக்கினால் முதலில் சீருடையில் இருப்பவர் உண்மையிலேயே பொலிஸ் தானா என்று அடையாளப் படுத்திக்கொள்வேன் என்று கூறும் அன்பர்கள் தங்கள் தோளில் தட்டிக் கொடுத்துக் கொண்டு தொடரவும். கிட்டத்தட்ட அப்படியொரு சூழ்நிலையினை மின்னஞ்சல் மூலம் உருவாக்கி உங்களை உணர்ச்சி வசப்பட வைத்து பலியாடாக்குவது தான் ஸ்பியர் பிஷ்ஷிங் தாக்குதல் (Spear Phishing Attack)

ஒரு நல்ல திடம், மணம், சுவை நிறைந்த Spear Phishing தாக்குதலைச் சமைக்கத் தேவையான பொருள்களில் முதன்மையானது தரமான பலியாடு மற்றும் அதன் மின்னஞ்சல் முகவரி. பலியாட்டின் நம்பிக்கைக்குரிய ஒருவரின் அல்லது எதைச் சொன்னாலும் உடனே செய்ய வைக்கக் கூடிய பணியிடத்தின் உயரதிகாரியின் பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன தான். இவற்றுடன், தாக்குதலுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட வைரஸ் முதலான ஆயுதங்களுடன் களமிறங்குதல் சிறப்பு. இவையெல்லாம் நம் தெரு முனையில் உள்ள கடையில் கிடைத்து விடாது என்பதையும் நினைவில் கொள்ளவும். முதலில் வைரஸாகச் செயற்படப்போகும் நிரல்களை எழுதும் திறன் வேண்டும். அந்த நிரல்கள் கணினி மற்றும் வலையமைப்புப் பாதுகாப்புக்கான் மென்பொருள் கள் மற்றும் தொழில்நுட்பங்களால் கண்டுபிடிக்க முடியாத வகையில் இருக்க வேண்டும். ஒரு வேளை உங்கள் தாக்குதல் வெற்றிகரமாக முடிந்தால் பலியாட்டின் கணினியிலிருந்தும் அதன் வலையமைப்பில் இருந்து உங்களின் நிரல் உங்களிடம் தொடர்பு கொள்ள ஏதுவாக ஒன்றோ அல்லது உங்களது தாக்குதலின் நீள, அகலத்திற்கேற்ப பல வழாங்கிகளோ இணையத்தின் இணைப்பிலிருக்க வேண்டும்.

தாக்குதலுக்குத் தயார்

பொதுவாக Spear Phishing Attack என்பது பெரும் நிறுவனங்களின் வலையமைப்புக்குள் நுழைவதற்கும் அவர்களின் தகவல்களைத் திருடு வதற்குமே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. மேற்சொன்ன அனைத்தும் தயாரான பின், யாரைத் தாக்கப் போகிறோம் என்பதை முத லில் தீர்மானிக்க வேண்டும். உதாரணத்துக்கு உங்களின் தாக்குதலை ஒரு நிறுவனத்தின் மீது செயற்படுத்த வேண்டுமென்றால் முதலில் அங்கு வேலை பார்க்கும் நபர்களின் பெயர்கள் அவர்கள் பணிபுரியும் துறை, மேலதிகாரிகள், முதலாளிகள் போன்ற தகவல்களனைத்தை யும் சேகரிக்க வேண்டும். இவையெல்லாம் கிடைத்ததும், பூப்போட்டுப் பார்த்து எளிதாக ஏமாற்றப்படுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும். தகவல் தொழில்நுட்பத்துறை சாராதவராகவும், தமிழ்ப் பெயராகவும் கிடைத்தால் சிறப்போ சிறப்பு.

சிறுதவறே பெருநஷ்டம்

உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் துறை மேலாளரின் பெயரிலோ அல்லது உயரதிகாரியின் பெயரிலோ ஒரு மின்னஞ்சலை அனுப்பி, அதில் நயமாக பேசி, அவரின் கணினி யில் உங்கள் நிரலை விதைக்க வேண்டியது உங்களின் சாமர்த்தியம். 'இத்துடன் இணைத்திருக்கும் கோப்பினைப் பிழைதிருத்தி அனுப்பவும்' என்று சொல்லலாம். அல்லது 'சென்ற வாரவிடுமுறையில் குடும்பத்துடன் கச்சத்தீவுக்கு சுற்றுலா சென்றிருந்தோம்.. புகைப்படங்களைப் பார்க்க இங்கு செல்லவும்' என்று சொல்லி இணையத்துக்கு வரவைத்தும் உங்கள் நிரலை நிறுவலாம். எப்படி மற்றொருவரின் மின்னஞ்சல் முகவரியின் பெயரில் நாம் மின்னஞ்சல் அனுப்ப முடியும் என்று மண்டைக்குள் விளக்கெரியும் நண்பர்கள் கூகுளாடவும், அதிக நேரமிருப்பவர்கள் இணைய நிரல்கள் எழுதக் கற்றுக் கொள்ளவும் பரிந்துரைக்கப்படுகிறது. இத்தாக்குதலில் பயன்படுத்தப்படும் மின்னஞ்சல்களின் முகவரிகள் மிகச்சரியாக இருக்கும் காரணத்தால் உணர்ச்சிவசப்பட்டு பலர் பலியாவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதன் மூலம் நடைபெறும் சிறு தவறு மூலம் நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் அல்லது உங்கள் கணினி இருக்கும் வலையமைப்பின் சகல சங்கதிகளையும் எங்கோ இருக்கும் கட்டுப்பாட்டு வழங்கியிடம் அனுப்பிக் கொண்டிருப்பீர்கள்.

தாக்குதல் மையங்கள்

மெதுவாகப் பரவும் விஷம் போல உங்கள் கணினியிலிருந்து கிடைக்கும் மேலதிகத் தகவல்கள் மூலம் கிட்டத்தட்ட வலையமைப்பில் இருக்கும் ஒவ்வொருவரையும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் பலியாடாக மாற்றி, ஒரு நாள் நிறுவனத்தின் மொத்த மானமும் ஊடகங்களிலும், இணையத்திலும் மணக்க மணக்க பிரியாணியாகப் படைக்கப்படும். இது போன்ற தாக்குதலுக்குப் பலியாவது பெரும்பாலும் அரசாங்கத் துறைகள், இராணுவம், விண்வெளி மற்றும் அணு ஆய்வு மையங்கள், தொழில்நுட்பத் துறை நிறுவனங்கள் அதிலும் குறிப்பாக வலையமைப்பின் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள். பொதுமக்களுக்குத் தெரிந்தே விடக்கூடாத உண்மைகள் சந்தி சிரிப்பதும், அதனால் ஏற்படும் அரசியல் சதிராட்டங்களும் தான் அரசாங்கம் இத்தகையத் தாக்குதல் மூலம் சந்திக்கும் பாதிப்புகள். மற்ற தனியார் நிறுவனங்கள் இதன் மூலம் பெருத்த பொருள் நஷ்டம் அடைந்து ஊமைக்காயத்துடன் அவையடக்கத்துடன் சங்கடப்பட்டு கூனிக் குறுகும் நிலைக்கு ஆளாவார்கள்.

இராணுத்தளவாடங்களைத் தயாரிக்கும் உலகின் முன்னணி நிறுவனமான லக் ஹீட் மார்ட்டின் மற்றும் வலையமைப்புப் பாதுகாப்புக்கானத் தொழிநுட்பத்துறையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான RSA போன்ற முதலைகள் இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளுக்கு பூஜ்ஜியங்கள் மிகமிக அதிகம். மிகவும் ரகசியத் தகவல்களை கையாளும் நிறுவனங்கள் இது போன்று ஒருவர் செய்யும் சிறு தவறினால் தங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை இழந்து விடுவதும், RSA போன்ற ஊரில் உள்ள மற்றவர்களின் வலையமைப்பின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நிறுவுனங்கள் மற்றவர்களால் கேலியும், கிண்டலும் செய்யப்படும் நிலைக்கு ஆளாவதுமே இது போன்ற தாக்குதல்களைக் கண்டு அனைவரும் அஞ்சுவதற்குக் காரணம்.

மனிதத் தவறுகளே காரணம்

இதுவரை நாம் கனவிலும் நினைத்திராத எத்தனையோ தொழிநுட்பங்கள் வலையமைப்பின் பாதுகாப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் உலகம் இருக்கும் வரை சவாலாக இருக்கப் போவது மனித தவறுகள் மட்டுமே. இணையக் களவாணிகள் தங்கள் திறமையை விட அதிகம் நம்புவதும் இவற்றைத்தான். யாராவது தொலைபேசியில் 'ஐயாம் மேஜர் சுந்தர்ராஜன் ஸ்பீக்கீங், நான் தான் மேஜர் சுந்தர்ராஜன் பேசுறேன்' என்று சொன்னால் உடனே நம்பி தங்களின் கடவுச்சொல் முதல் வீட்டு நிலைக்கதவில் சாவி ஒளித்து வைத்திருக்கும் இடம் வரை பதார்த்தமாக பகிர்ந்து கொள்ளும் அன்பர்கள் இருக்கும் வரை இது போன்ற தாக்குதல்கள் வெள்ளை மாளிகை முதல் வெள்ளவத்தை வரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

இதற்குத் தீர்வே இல்லையா?. இருக்கிறது. மின்னஞ்சலில் வெறும் தகவல்களை மட்டுமே பரிமாறும், கோப்புகளையோ அல்லது இணையச்சுட்டிகளையோ அனுமதிக்காத நிறுவனங்களும் அமைப்புகளும் உண்டு. குறிப்பிட்டக் கால இடைவெளியில் அனைத்து பணியாளர்களையும் அழைத்து வலையமைப்பின் பாதுகாப்புக் குறித்துக் காதைத் திருகி வகுப்பெடுத்து, விழிப்பாக இருந்து கொள்ள அறிவுரைகள் வழங்கி செம்மைப்படுத்தும் நிறுவனங்களும் உண்டு. இது போன்று இணையத்தின் மூலம் தொடுக்கப்படும் தாக்குதல்கள் வெற்றியடைகிறதா அல்லது தோல்வியடை கிறதா என்பது அதனை நடத்தும் இணையக் களவாணிகளுக்கு மட்டும் தான் தெரியும்.

ஒரு வேளை வெற்றியடைந்து விட்டால், பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் எப்படி, எப்பொழுது அதனைக் கண்டுபிடிப்பார்கள்?.

இங்கு தான் 'காவல்துறை உங்கள் நண்பன்' என்ற அறிவிப்புப் பலகையுடன் உலா வரும் வலையமைப்புப் பாதுகாப்பு வல்லுநர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. பொதுவாகச் சிறுநகரங்களிலும், குக்கிராமங்களிலும் ஊருக்குள் புதிதாக ஒரு காகம் வந்தால் கூட சரியாகக் கண்டுபிடித்து, பயணம் தொடங்கிய இடம், செல்லும் இடம், பார்க்கப் போகும் நபர், அவருக்கு எந்த வகையில் சொந்தம் என்று சகலத்தையும் அலசிய பின் அனுப்பி வைக்கும் புலனாய்வாளர்கள் ஊருக்கு வெளியே சுமைதாங்கிக் கல்லின் மேலோ அல்லது மதகுக்கு மேலோ இருந்து கொண்டு எப்படி ஊருக்குள் வருவோர், போவோரை அளவெடுப்பார்களோ கிட்டத்தட்ட அதே வேலையினை உங்கள் கணனி வலையமைப்பில் பார்ப்பவர்கள் தான் இவர்கள். இவர்களின் உலகம் முற்றும் மாறுபட்டது. இவர்கள் பார்வைபடும் இடமெல்லாம் வலையமைப்பு எண்களும்(IP Address) மற்றும் வலைத்தொடர்பு எண்களுமே (port) நிறைந்திருக்கும். ஆயிரக்கணக்காண நபர்கள் பணியாற்றும் இடமாக இருந்தாலும் இந்தத்துறையில் இரண்டு அல்லது மூன்று பேர் தான் இருப்பார்கள். இவர்களால் எப்படி மிகப்பெரிய வலையமைப்பின் பாதுகாப்பினைக் கட்டுப்படுத்த முடிகிறது, எப்படி வலையமைப்பின் தாக்குதல் ஏற்பட்டாலோ அல்லது பாதுகாப்புக் குறைபாட்டினால் பாதிக்கப்பாட்டாலோ இவர்களின் கண்களுக்கு மட்டும் அது தெரிய வருகிறது?.. இவர்கள் பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் என்ன?

(வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர வேட்டகை

● அடேல் பாலசிங்கம்

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 39

இந்தியாவில் சந்தித்த நெருக்கடிகள்

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எம்மை வரவேற்க பேபி சுப்பிரமணியம் வந்திருந்தார். இது நடந்தது 1983 ஓகஸ்ட் மாதம். கசங்கிய வெள்ளை வேட்டி ; ஒரு பழுப்பு நிற சேட்; முகத்திலே கவலைக் கோடு. இது தான் பேபி சுப்பிரமணியத்தின் அன்றைய தோற்றம். இந்தத் தடவை அவருடைய கலைந்த கோலத்துக்கு காரணம் அவருடைய வழமையான அசட்டையல்ல. நாம் சென்றடைவதற்கு முந்திய சில வாரங்களாக மும்முரமாக அரசியல் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தார் என்பதும், சகிக்க முடியாத வேதனைகளை அவர் தாங்கிக் கொண்டிருந்தார் என்பதும் தெரிந்தது. சிறீலங்காவில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரத்தை ஒட்டி , தமிழ் நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தது. அனைத்து அரசியல் தலைவர்களும் சிங்கள அரசுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்திக் கொண்டிருந்தார்கள். சென்னை வீதிகளை ஆர்ப்பாட்டச் சனத்திரள்கள் திணறடித்தன. கட்டடங்களிலும் சிற்றூர் திகளிலும் கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. திராவிட இயக்க ஆதரவாளர்கள் தமக்கே உரித்தான கறுப்புச் சட்டைகளில் பெருந்திரளாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

நாம் சென்னையை சென்று அடைந்த போது "வூட்லண்ட்ஸ்' விடுதியிலே தங்க ஏற்பாடாகியிருந்தது. இதைப் பார்த்ததும், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் பலமாக காலூன்றாது விட்டார்களோ என்று உடனே ஐயம் அடைந்தோம். எமது ஐயத்தை உறுதிப்படுத்துவது போல , ஓர் அரசியல் அலுவலகம் கூட நிறுவப்படவில்லை என்று அறிந்தோம். நேசன் போன்ற பழைய நண்பர்கள் எம்மைச் சந்திக்க வந்த போது எமது சந்தேகம் சரியே என்று உறுதிப்படுத்தப்பட்டது. தமிழ் நாடு முழுவதிலும் ஒரு சில விடுதலைப் புலிப் போராளிகளே ஆங்காங்கு தரித்திருந்துஆரவாரம் இல்லாத அரசியற் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். உண்மையில் மிகக் குறைவான எமது போராளி களே தமிழ் நாட்டில் தரிந்திருந்தார்கள். பெரும்பாலான போராளிகளை, பிரபாகரன் தம்மோடு யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிச் சென்றிருந்தார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான கலகங்கள் காரணமாக, தமிழ் நாட்டிலும், புதுடில்லியிலும், உயர் மட்ட அரசியல் மற்றும் ராஜ தந்திர நடவடிக்கைகள் களைகட்டியிருந்தன. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் போன்ற ஏனைய போராளி அமைப்புக்கள் திருமதி இந்திராகாந்தியின் பிரத்தியேகப் புலனாய்வுப் பிரிவான "றோ" என்ற அமைப்புடன் தொடர்பு களை ஏற்படுத்தியிருந்ததோடு இராணுவப் பயிற்சித் திட்டத்திலும் ஈடுபட்டிருந்தன.

1983இனக் கலவரத்தால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயலின் பரிமாணம், இலங்கை முழுவதிலும் நிகழ்ந்த கோரச் சம்பவங்கள் தொடர்பாக அரசுத் தலைவர் ஜெயவர்த்தன காட்டிய மமதை, இதனால் தமிழ் நாட்டில் திரண்டெழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு - இந்தநிகழ்வுகள், காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட இந்திய அரசுக்கு வாய்ப்பை வழங்கின. தறிகெட்டதன் அண்டை நாட்டை ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது நியாயமே என்ற தார்மீக உணர்வையும் இந்தியாவுக்குக் கொடுத்தது. புதுடில்லி இருமுனை நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுத்தது.

(பதிவு தொடரும்)

மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

முகத்தில் வசீகரமும், செயலில் திறமையும் இருக்கும். அக்கம் பக்கத்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். வாகன பயன்பாடு அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரர் புதிய விஷயங்களை ஆர்வமுடன் தெரிந்து கொள்வர். பூர்வ சொத்தில் பணவரவு கூடும் நண்பரின் உதவி கிடைக்கும். இல்லறத்துணை குடும்ப நலனில் உரிய அக்கறையுடன் நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் உருவாகிற சிரமங்களை சமயோசிதமாக சரிசெய்வீர்கள். அரசுப் பணியாளர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு சலுகை பெறுவர். குடும்ப பெண்கள் பணவசதிக்கேற்ப வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

உறவினர்களிடம் குடும்ப விவகாரம் பேசுவதால் கருத்து வேறுபாடு அதிகரிக்கலாம். கவனம் தேவை. வீட்டுத் தேவைகளுக்கான பணச்செலவு கூடும். பொது இடங்களில் நடக்கும் விவகாரங்களை அதிக நேரம் வேடிக்கை பார்க்க வேண்டாம். புத்திரரின் செயல்களை கண்காணித்து வழிநடத்துவது நல்லது. வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை உங்களின் நல்ல குணத்தை மனதார பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களால் பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் கண்களுக்கு தகுந்த பயிற்சியும், ஓய்வும் தருவது நல்லது.

மிதுனம்

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உங்கள் சொல்லுக்கு நண்பர், உறவினர் உரிய மதிப்பு, மரியாதை தருவர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்க பிடிவாத குணத்துடன் அலைகுவர். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை தெய்வ வழிபாட்டில் கூடுதல் நம்பிக்கை கொள்வார். தொழிலில் வியத்தகு வளர்ச்சியும், திருப்திகர அளவில் பணவரவும் கிடைக்கும். பணியாளர், பணித்திறன் வளர்த்து எளிதாக பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள் பணவசதிக்கேற்ப புத்தாடை அணிகலன் வாங்குவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.

கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

முக்கியமான செயல்கள் நிறைவேற முருகப்பெருமானின் நல்லருள் துணை நிற்கும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். இல்லறத்துணையிடம் கருத்து வேறுபாடு வராத அளவில் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறப்பாக இருக்கும். இயந்திர பிரிவு பணியாளர் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். பெண்கள் நகை, இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் அதிக விலையுள்ள பொருள்களை கவனமுடன் பயன்படுத்தவும்.

சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

பசு, பால் பாக்ய யோகத்தினால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், செல்வ வளமும் அதிகரிக்கும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரர் கவனக்குறைவான செயலால், சிறு அளவில் சிரமம் எதிர்கொள்வர். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணியாளர்களுக்கு தாமதமான சலுகை எளிய முயற்சியால் வந்து சேரும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் நல் அன்பை பெறுவர். மாணவர்களுக்கு படிப்புக்கு தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும்.

கன்னி

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

மன உறுதியுடன் செயல்படுவதால், முழு அளவில் நன்மை கிடைக்கும். தம்பி, தங்கைக்கு சுப நிகழ்ச்சி நடத்துவதற்கான முயற்சி கை கூடும். பூர்வ சொத்தில் கிடைக்கிற பணவரவு அதிகரிக்கும். உடல் நல ஆரோக்கியம் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பங்களை பயன்படுத்தி, தகுந்த பலன் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, பிற சலுகை கிடைக்க யோகம் உண்டு. பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் கருத்துகளை அறிந்து பணி மேற்கொள்வர். மாணவர்கள், நண்பருடன் வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

புதிய பணிகளை, சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து தொடங்குவது நல்லது. குடும்ப தேவைகளுக்கான பணச் செலவு அதிகரிக்கும். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை தேடித் தருவர். வெகுநாள் தீர்வு பெறாத விஷயத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணையின் மனதில் நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள், உடல்நலம் பேணுவதால், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்கிற மனநிலை உருவாகும். பெண்கள், சிறு செலவுகளை சேமிப்பு பணத்தில் மேற்கொள்வர். மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர, பிற விவாதம் பேச வேண்டாம்.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

எவரிடமும் நிதானித்துப் பேசி, நல்அன்பை பெறுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் மனதில் ஊக்கம் தரும். புத்திரர் தன்னுடைய கடமைகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவர். உடல்நல ஆரோக்கியம் சீராகும். இல்லறத்துணையின் கவனக்குறைவான செயல், சிரமம் உருவாக்கலாம். தொழிலில் புதியவர்களின் அறிமுகம் உற்பத்தி, விற்பனை அளவை அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் அக்கறையுடன் பின்பற்றுவர். குடும்ப பெண்கள், கணவரின் சம்மதமின்றி, எவருக்கும் பண பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.

தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

பெண் தெய்வ அருளும், மகளின் ஜாதக யோகமும் துணை நின்று உதவும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரர் கவனக்குறைவால், தன் லட்சியம் நிறைவேற்றுவதில் தாமதம் உருவாகும். உறவினர் குடும்ப சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை வியத்தகு முன்னேற்றம் பெறும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு தேவையான பணிமேற்கொள்வர்.

மகரம்

உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

குறிப்பிட்ட விஷயத்தில், மனதில் இருந்த சஞ்சலம் தீர, புதிய வழி பிறக்கும். பழகுபவர்களிடம் உற்சாகமாக பேசுவீர்கள். உறவினர் உறுதுணையாக செயல்படுவர். வீடு, வாகனத்தில் அதிக பயன்பாட்டு வசதி பெற, தேவையான மாற்றம் செய்வீர்கள். இல்லறத்துணை, உங்களின் அந்தஸ்து மேம்பட, உரிய வழிவகை சொல்வார். தொழில், வியாபாரத்தில், புதியவர்களின் தொடர்பு வளர்ச்சியை உருவாக்கும். பணியாளர்கள், நிம்மதி நிறைந்த மனதுடன் பணியில் ஈடுபடுவர். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

கும்பம்

அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பொதுப் பிரச்னைகளில் கருத்துசொல்ல வேண்டாம். புத்திரரின் உடல்நலம் பேணுவதில் கூடுதல் அக்கறை வேண்டும். பணக்கடன் தொந்தரவு சரி செய்வதால் மட்டுமே, மனம் உற்சாகம் பெறும். இல்லறத்துணை பிரார்த்தனை நிறைவேறி இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவார். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறையை பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், பணச்செலவில் சிக்கனம் மேற்கொள்வர். பெண்கள், ஆரோக்கிய உடல்நலம் அமைந்து குடும்ப பணிகளில் ஆர்வம் கொள்வர்.

மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

அஷ்டமச்சனியின் காரணமாக, கடந்த காலத்தில் உருவான கஷ்டங்களுக்கு, புதிய விடிவு காலம் பிறந்துள்ளது. மன உறுதியுடன் செயல்பட்டு, பெற வேண்டிய நன்மையை முழு அளவில் பெறுவீர்கள். சொத்து ஆவணம் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு, சமயோசிதமாக சரி செய்வது நல்லது. பணியாளர்கள், சக பணியாளர்களிடம் தேவையற்ற விவாதம் பேசவேண்டாம். குடும்ப பெண்கள், சேமிப்பு பணத்தில் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால், படிப்பில் கவனம் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாந்த சிறுத்தை

ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும், ஒரு புள்ளி மானையும் கண்டது. அவை இரண்டும்மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கை யுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்தமான்கள் இரண்டும்வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில்இதுவலதுபாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்குவந்தது. 'எதைத் துரத்தலாம்' என்று தயங்கி நின்றது. பிறகு, 'சரி . கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சி தான் சுவையாக இருக்கும்' என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேக மாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசிவேறுஅதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்றப் பாதையில் ஓடியது. ஆனால் புள்ளிமான்எப்போதோ பஞ்சாகப் பறந்துவிட்டிருந்தது.

தருணத்தின் முக்கியம் அறிந்து முடிவை விரைவாக எடுக்க வேண்டியது அவசியம்.

தெரிந்து கொள்வோம்

01. தேசியக் கொடியில் வாளேந்திய சிங்கம் எதனைக் குறிக்கிறது?
சிங்கள இனத்தைக் குறிக்கிறது.

02 தேசியக்கொடி எப்போது அரைக்கம்பத்தில் ஏற்றப்படும்?
தேசிய துக்க சம்பவத்தின் போது

03 தேசியக் கொடியிலுள்ள வெள்ளரசமிலை எதனைக் குறிக்கின்றது?
பௌத்த மதத்தை குறிக்கின்றது.

04 இலங்கையின் தேசியக் கீதம் யாரால் பாடப்பட்டது?
ஆனந்த சமரக்கோன்

05 இலங்கை எப்போது சுதந்திரம் அடைந்தது?
1948 பெப்ரவரி 4ஆம் திகதி

06 இலங்கை எந்தத் துணைக்கண்டத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது?
இந்தியத் துணைக்கண்டத்திற்கு அருகில்

07 இலங்கைக்கு "இலங்காபுரி" என்ற பெயர் யாரால் வைக்கப்பட்டது?
இராவணனால்

08 இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?
பாக்கு நீரிணை

09 தேசியக் கொடி,தேசியக் கீதம் என்பன எதனைக் குறிக்கும்?
ஒற்றுமையையும் நாட்டுப்பற்றையும் குறிக்கும்

10 இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
டி.எஸ்.சேனநாயக்க

கவனம்

கவனம் எதிலும் நாம் கொள்வோம்
கவலையில்லா வழிசெல்வோம்
எப்பொருள் எங்கே வாங்கிடினும்
விலைச்சீட்டு உடனேபெற்றிடுவோம்
என்று எங்கே வாங்கியது என்பதற்கு
அதுவே சான்றிதழாம்
வாங்கிய பொருளில்குறை இருந்தால்
வழக்குக்கூடத் தொடுத்திடலாம்
போக்குவரத்துக்கள் அதிகம் உள்ள
சாலையில் வண்டியில் போவது போல்
வாழ்க்கையில் நாமும் நடந்து வந்தால்
வருத்தம் வந்து சேராது
நம் சொல்லை உலகு மீறாது

மனித உடல்

பந்தி அறிந்து கொள்வோம்

01. ஒரு குழந்தை 330 எலும்புகளுடன் பிறக் கிறது.
02. உடலில் 206 எலும்புகள் உள்ளன.
03. பிபுல்லா என்பது முழங்காலையும் குதி காலையும் இணைக்கும் எலும்பு
04. மனித உடலில் உள்ள நீளமான எலும்பு தொடை எலும்பு.
05. மனித உடலில் உள்ள சிறிய எலும்பு காது எலும்பு.
06. மனித உடலில் உள்ள முதுகெலும்புகள் 33.
07. முகத்தில் உள்ள எலும்புகள் 14
08. கைகளில் உள்ள எலும்புகள் 27
09. மனித உடலில் எளிதில் உடையும் பகுதி கழுத்துப் பட்டை எலும்பு
10. மூளையில் பெரிய பகுதி பெருமூளை சொரிப்ரம் என்று அழைக்கப்படுகிறது.

வாரம் ஒரு திருக்குறள் படிப்போம்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல

விளக்கம் : விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திரு வடிகளை நினைப்பவர்களுக்கு எப்போதும் துன்பம் இல்லை.

சிறுவர் உலகம்

விடுகதை

01. ஊரெல்லாம் சுத்துவான். வீட்டுக்குள் வரமாட்டான். அவன் யார்? — செருப்பு
02. ஒரு குகை. முப்பத்திரண்டு வீரர்கள். ஒருநாகம். அது என்ன? — வாய்
03. வெள்ளிக் கிண்ணத்துல தண்ணீர். அது என்ன? — தேங்காய்
04. மழையில் பூக்கும் பூ. அது என்ன? — குடை
05. டாக்டர் வந்தாரு. ஊசி போட்டாரு. காசு வாங்காமல் போனாரு. அவர் யார்? — கொசு
06. குண்டுச் சட்டியில குதிரை ஓட்டுகிறான். அவன் யாரு? — ஆட்டுக்கல்
07. வெள்ளி ஓடையில கறுப்பு மீன் துள்ளி விளையாடுது. அது என்ன? — கண்
08. வெள்ளிக் கிண்ணத்தில தங்கக் காசு. அது என்ன? — முட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்காக உருகுதல்

■ கதிர்

வீட்டருகில் இரண்டு தெரு தள்ளியிருக்கும் வீதி, ஆனால் அகலமான சாலை போன்றது. சமீபத்தில் ஒரு முற்பகல் நேரத்தில் சாலையினைப் பாதி அடைத்து பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். திடீர் பந்தல் என்றவுடனே துக்க காரியமாக இருக்கலாமெனத் தோன்றியது. குவிந்து கொண்டிருந்த கூட்டமும், அதை மரண வீடென்று வெகு எளிதாக உணர்த்தியது. வாகனங்களாலும் மனிதர்களாலும் அந்தப் பகுதியே நிரம்பிக் கிடந்தது.

எல்லா மரணங்களையும் நாம் ஒரே மன நிலையோடு ஒரே அளவான துக்கத்தோடு அணுக முடிவதில்லை. கல்யாணச்சாவுகளை, எதிர்பார்த்து காத்திருந்து நிகழும் மரணங்களை சற்றே நிறைவான, பயம் தணிந்த மனநிலையோடு அணுகுகிறோம். வாழவேண்டிய வய்தில் எதிர்பாராத தருணத்தில் நிகழும் அகால மரணங்களை துக்கம் விசாரிக்கும் கூட்டம் வெகு பதற்றத்தோடு அணுகுகிறது. யாருடைய சாவாக இருந்தாலும் அகால மரணம் என்பது கூடுதல் துக்கத்தையும், ஒரு கணம் தன்னோடு பொருத்திப்பார்த்து தன் வாழ்க்கைக்கும் உத்தரவாதம் இல்லையென்ற அச்சத்தையும் கொடுத்துவிடுகின்றது.

கொளுத்தும் வெயில் மதியத்தில் அந்த வீட்டின் முன்பு நிரம்பியிருந்த கூட்டமும் பரபரப்பும் அது ஒரு எதிர்பாராத மரணம் என்பதாக எனக்கு உணர்த்தியது. அந்த இடத்தைக் கடக்கும்பொழுது யாரேனும் தெரிந்த முகங்கள் தெரிகின்றதா எனப் பார்ப்பதும், இறந்தது யாராக இருக்கும் என்று யோசிப்பதுமாக இருந்தேன். ஒருவேளை கூட்டம் குறைவாக இருந்திருந்தால் நானும் யாரோவென அதைப்பற்றி அவ்வளவாக யோசிக்காமலே கூட இருந்திருக்கலாம்.

கடந்து செல்லும் ஒருவீதியில் நிகழ்ந்த மரணம் குறித்து இத்தனை பேசவேண்டுமா எனத் தோன்றலாம். காரணம் இருக்கின்றது. அடுத்த சில நாள்களில் பந்தல் பிரிக்கப்பட்டது. பந்தல் பிரிக்கப்பட்ட தினத்திலிருந்தே மரணம் குறித்தான நினைவுகள் மறதிக்குள் மூழ்கத் துவங்கின.

இரண்டு நாள்கள்தான் கடந்திருக்கும். அதே வீட்டின் வாசலில் மீண்டும் பந்தல். கார்கள், கூட்டம் என இன்னொரு மரணத்தை உணர்த்தியது. எந்தத் தொடர்புமற்றுக் கடந்து போகும் எனக்கே அயர்ச்சியாக இருந்தது. போனவாரம் பந்தல் போட்டிருந்தது உண்மையா அல்லது கனவா என நொடிப்பொழுதில் சந்தேகம் வந்தது. அதே வீட்டில் அடுத்த மரணமா, அல்லது அந்த வீட்டின் பின்பக்கம், மாடியில் என வேறு வீடுகள் இருக்கின்றதா என்றும் சந்தேகம் வந்தது. யாரையாவது கேட்டுத் தெரிந்துகொண்டேயாக வேண்டுமென மனசு பரபரத்துத் தொலைந்தது. எத்தனையோ வீதிகளில் எத்தனை சாவு வீட்டு பந்தல்களைப் பார்த்தாலும், இரண்டு நாள் இடைவெளியில் மீண்டும் போடப்பட்ட பந்தல் மனதை விட்டு மறையமாட்டேன் என்கிறது.

மரணம் குறித்து எவ்விதமாக யோசித்தாலும் தலைக்குமேல் போதிமரமொன்று கிளை விரிப்பதுவும், மனதிற்குள் பயமேற்படுவதும் ஒருங்கே நிகழ்ந்துவிடுகின்றன. மரணத்திற்கு பின்னான வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அறிய முடியாததே மரணம் குறித்த அத்தனை பயங்களுக்கும் காரணமென்று நினைக்கிறேன். அந்த பயத்தின் பொருட்டே மரணத்தைக் கண்டு மருண்டோடுகிறோம். அது வந்துவிடக்கூடாதென்று எதையெதையோ பற்றுகிறோம். எத்தனை சாமிகளை வேண்டுகிறோம்.

தனக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களின் மரணத்தை அது நிகழும்போது உடனிருப்பதும், நிகழ்ந்த சில நிமிடங்களில் உணர்வதுமென்பதும்தான் உலகின் ஆகக் கடும் கொடுமையாக இருக்கமுடியும்.

உயிர் பிரிந்த கணத்தில் உடலிலிருந்து சூடு வெளியேறி குளிர் ஆக்கிரமிக்கும் தருணம் அச்சமும், அவ்வளவுதானாவெனும் சந்தேகமும் நிரம்பியது. கண்ணெதிரே மரணம் நிகழ்ந்த சில நிமிடங்களில் அந்த உடலை ஏந்தும் ஒரு அவல நிலைக்கு ஒருமுறை தள்ளப்பட்டேன். நான் கைகளில் ஏந்திக் கிடத்தியபோது 'கொரட்' என்ற சப்தம் மட்டும் ஒரேயொருமுறை மெலிதாகக் கேட்டது. விரல்களை மடக்கியவாறு நெஞ்சில் கை வைத்துவிட்டு, உள்ளங்கை வைக்கும்போது உடலின் கதகதப்பு அப்படியே உள்ளங்கையில் ஒட்டிக்கொண்டது. உடல் குளிரத் தொடங்கியது. உள்ளங்கை சுடத் தொடங்கியது. அந்தச் சூடு அவ்வளவு எளிதில் என்னை விட்டுப் போய்விடவில்லை.

காலம் கொஞ்சம் கொஞ்சமாக கையை குளிரச்செய்துகொண்டிருந்த நாள்களில் அது அக்கினி வெயிலின் ஒரு மதியப்பொழுது. இலக்கற்ற அரட்டையும், எதுவரையிலெனத் தீர்மானிக்காத மென் நடையுமாக இரண்டு நண்பர்களுடன் அந்த ஏரிக்கரை மீது ஊர்ந்து கொண்டிருக்கிறேன்.

பெயர் சொல்லத் தெரியா மரம் செடி கொடிகள் இரு பக்கத்திலிருந்தும் கூடி கூடாரம் அமைத்திருக்கின்றது. இருபக்கங்களிலிருந்தும் வளைந்த மரங்கள் கூட்டு வண்டியின் கூரை போல் குனிந்திருக்கின்றன. காலம் காலமாக விழுந்த தழை, இலை ,காய், கனி பூ என பாதையெங்கும் மெதுமெதுப்பாக. முள் கிடக்கும் சாத்தியங்கள் ஏராளம். மொத்தமான செருப்பு என்பதால் பயமிருக்கவில்லை. அவ்வளவாக நிலத்தைக் கவனித்து எட்டு வைக்கவில்லை. அப்போது ஏனோ பார்க்கத் தோன்றியது. நடக்கும் வழியில் குருவிக்குஞ் சொன்று கீழே கிடந்தது. இறக்கை முளைக்கா பச்சிளம் குருவிக்குஞ்சு. கண்ணில் பாயும் அதன் மென்மை தொடுவதற்கே பயத்தைத் தருகிறது.

என்ன செய்ய? அப்படியே விட்டுவிடவா? எடுத்து ஓரமாக வைக்கவா? எதாவது கிளையில் வைக்கவா? இப்படி இங்கு வந்திருக்கும்? கேள்விகளோடு எடுத்து கையில் ஏந்துகிறேன். அதுவரை உணரா ஒரு சூடு. அது வெயிலின் சூடல்ல. நிழலில்தான் கிடந்தது. சூடு உள்ளங்கையில் கொதிப்பாய் ஊடுருவுகிறது. ஒருபோதும் நான் உணர்ந்திராத சூடு. அந்த குருவிக்குஞ்சின் நடுக்கம் போலிருக்கும் துடிப்பு உயிரெங்கும் பரவுகிறது.

சிறுவனாக இருந்த காலத்தில் மரம் ஏறி கூடுகளிலிருக்கும் முட்டை, குஞ்சுகளைக் கூட பார்த்ததாக, எடுத்ததாக ஞாபகம். சமீபத்தில், 20-30 ஆண்டுகளாக இப்படி ஒரு குஞ்சைக்கூட பார்த்ததில்லை. சுற்றிலும் பார்த்துவிட்டு மேலே அண்ணாந்து பார்த்தால் தலைக்கு மேலே ஒரு குருவிக்கூடு தெரிகிறது. கூட்டிலிருந்து விழுந்திருக்கலாம் என்பது புரிகிறது. "கூடு இருக்கு, கூட்டிலேயே வைத்துவிடலாமா?" எனக் கேட்க, கண்ணன் கடுமையாக மறுக்கிறார்.

"அவ்வளவுதான்" இனிமேல் தாய்க்குருவி அதை சேர்க்காது"

ஏனென்று ஆராயவோ விவாதிக்கவோ அப்போது தோன்றவில்லை, நேரமுமில்லை. "என்னவோ நடக்கட்டும், கூட்டிலேயே வைப்பம். சேர்த்தா சேர்க்கட்டும் .. இப்படியே விடவோ, ஓரமாப்போடவோ வேண்டாம்." எனச் சொல்லிவிட்டு எட்டி அந்தக் கிளையைப் பிடிக்க முயற்சிக்கிறேன். எட்டவில்லை. கண்ணனைக் கை நீட்டச் சொல்லி அவர் கையில் கிடத்தி விட்டு, நாலெட்டு ஓடிவந்து குதித்து கிளையைப் பிடிக்கிறேன். கூடு விழுந்துவிடக்கூடாதே என்றும் பயம். கிளை ஆடியதில் தாய்க்குருவி பறந்தோடுகிறது. அப்படியே பதமாக வளைத்து வசமான இடம் வந்ததும் கூட்டில் குருவிக்குஞ்சை விடுகிறோம். கூட்டில் இன்னொரு குஞ்சும் இருப்பது தெரிகிறது. சேர்த்துக் கொண்டு கூட்டில் கூட்டாக வாழ்வதும், கூடுவிட்டு பறந்தேகுவதும் இனி அவர்கள் பாடு. எங்கு துடைத்தாலும் அந்த குருவிக் குஞ்சின் சூடு உள்ளங்கைவிட்டுப் போகவேயில்லை.

குருவிக்குஞ்சுக்காகத் துடித்த என் பெருங்கருணை குறித்து எனக்கே ஆச்சரியமாக இருக்கின்றது. அதே தினத்தில் மதிய சமையலுக்காக வீட்டில் கொடுத்துவிட்டு வந்த கோழிக்கறியிலிருந்து வெளியேறியிருக்கும் உயிர் பற்றி மறந்துவிடும் மனநிலை வாய்த்தது குறித்தெல்லாம் ஆச்சரியப்பட வேயில்லை நான்.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது படத்தின் பிரதான கதை. இத்துடன் கஞ்சு கிளைக் கதையும் உண்டு. வானத்திலிருந்து வந்து விழும் விண்கல் ஒன்றுக்கு 'வான முனி' என்று பெயர் வைத்து, குலதெய்வமாக வழிபடுகிறார்கள் முண்டாசுப் பட்டிக்காரர்கள். இந்தக் கல்லில் விலை மதிக்க முடியாத பல கனி மங்கள் இருப்பதால் அதைத் திருடி, வெள்ளைக் காரனிடம் விற்க கோமளப் பட்டி ஜமீன்தார் (ஆனந்த்ராஜ்) ஒரு பக்கம் காய் நகர்த்துகிறார்.

போதும் போதும் என்கிற அளவுக்கு நகைச்சுவைக் கண்ணி வெடிகளைத் திரைக்கதையில் புதைத்துவைத் திருக்கிறார் அறிமுக இயக்குநர் ராம்குமார். எடுத்துக்கொண்ட கதைக்கு ஏற்ற திரைக்கதை, பாத்திர வார்ப்பு, காட்சி யமைப்பு ஆகியவற்றில் கவனம் எடுத்துக்கொண்டு நேர்த்தியாகச் செயற்பட்டிருக்கிறார்.

ஆனால் திரைக்கதை, கதைக்களம், வசனம் எல்லாவற்றிலும் சில பலவீனங்கள் வெளிப்படுகின்றன. விண்கல்லை வைத்துத் தொடங்கும்போது படம் பார்வையாளர்களை நிமிர்ந்து உட்கார வைக்கிறது. அதற்குப் பிறகு ஒரு மணி நேரம் மெதுவாகவே எனப் போகிறது. கதை நடக்கும் 1982இல் புகைப் படம் எடுப்பது தமிழ் நாட்டில் பரவலாக நடைமுறையில் வந்துவிட்டது. நகைச்சுவைப் படத்தில் லாஜிக் அவசியம் இல்லை என்றாலும் இது போன்ற ஓட்டைகள் உறுத்துகின்றன. படம் சில இடங்களில் சீரியஸ் முகத்தைக் காட்டு கிறது, சில இடங்களில் அதைத் தவற விடுகிறது.

தோமளப்பட்டி ஜமீனின் பூனை சூப், துருப்பிடித்த துப்பாக்கி முதல், ஊர்ப் பூசாரியின் கள்ளக் காதல் போன்றவை மிகப் பழைய ஆபாச நகைச்சுவைக் காட்சிகள். முனீஸ்காந்தாக ராமதாஸின் நடிப்பு ரசிக்கும்படி இருக் கிறது என் றாலும் அவரது கோணங்கித்தனங்களை எல்லாக் காட்சிகளிலும் ரசிக்க முடிய வில்லை.

விஷ்ணுவுக்கு வலுவான வேடம் கிடைத்திருக்கிறது. மனிதர் 'வெண்ணிலா கபடிக் குழு'வில் பார்த்தது போலவே இருக்கிறார். முக பாவனை களில் தேறுகிறார். குரல் நடிப்பில் கோட்டைவிடுகிறார். நந்திதா காட்சிக ளுக்கு மென்மையும் அழகும் சேர்க்கிறார். நுட்பமான சில பாவனைகளின் மூலம் கவனிக்கவைக்கிறார். கதாநாய கனின் நண்பனாக மிகவும் வித்தியாசமான தோற்றத்தில் வரும் வெங்கட்டின் நடிப்பில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது.

கலை இயக்குநர் கோபி ஆனந் தின் பணி மிகுந்த பாராட்டுக்குரியது. வீடுகளுக்கு 80களின் அடையாளங் களைக் கச்சிதமாகக் கொண்டுவந்துள்ளார். பி.வி. ஷங்கரின் ஒளிப்பதிவு கதையுடன் இணைந்து பயணப்பட்டுள் ளது. ஷான் ரோல்டனின் இசை திரைக் கதைக்குப் பொருத்தமானது. 'ராசா மக ராசா' என்னும் பாடல் காதுகளில் ரீங்கரிக்கிறது.

வழக்கமான சினிமாக் கதைக் களத்துக்கு மாற்றான ஒன்றைத் தேர்வுசெய்து நகைச்சுவை ததும்ப அதைக் காட்சிப்படுத்தியிருப்பதற்காக இயக்குநரைப்பாராட்டலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமியும் கபக்ஸியும்

■ 'படலை' ஜே.கே

அத்தியாயம் - 4 கள்ளுத்தவறணை

அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

விஞ்ஞானி சோதிலிங்கம் மிக்ஸர் சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் முன்னாலே இருந்த மின்காந்தக் கதிரியக்க கருவி, திடீரென்று சடுதியான மீடிறன் அடிப்பை காட்டத் தொடங்கியது. சோதிலிங்கம் குழம்பி விட்டார். வாழ்நாளில் இப்படியொரு மீடிறன் அடிப்பை அவர் பார்த்ததில்லை. பூமியில் இப்படியொரு மீடிறனுக்கு சந்தர்ப்பமே இல்லை. போத்தல் மூடியில் மிக்ஸரை கொட்டி, மேலும் மேலும் கொறித்தும் பார்த்தார். ஏன் மீடிறன் அடிப்பு தீடீரென்று உருவாயிற்று? ஒரு மாதிரியான இரைச்சல் கேட்கத் தொடங்கியது. ஏதோ ஒரு சங்கேத வார்த்தைதான் அது. ஆனால் அர்த்தம் புரியவில்லை. பக்கத்து அறை விஞ்ஞானியான குமரனை சோதிலிங்கம் அவசரமாக இண்டர்கொம்மில் அழைத்தார்.

"குமரன், திடீரென்று மீடிறன் அடிப்பு ஏற்படுது ஏன் எண்டு விளங்கேல்ல"

சோதிலிங்கத்தின் அவசரம் குமரனுக்கு விளங்கவில்லை. அவர் என்ன சொன்ன ரென்பதையே கவனிக்காமல், குமரன் வழமைபோல குதர்க்கமாக பதிலளித்தார்.

"நான் அப்பவே சொன்னன் சேர் ... பௌதீகம் எண்டுறது ஒரு கடல்.."

"சோதிலிங்கம் மட்டும் என்ன சளைத்தவரா? இல்லை.. அது சிம்பிள்.. ஜ.கியூ வை பாவிச்சா முடியும். எம்ஸீகியூ என்றால் எறும்பை கூட பிடிச்சு விடலாம் .. ஆனா இது வேற விஷயம்.. அவசரம். டக்கெண்டு வாறியா?"

சோதிலிங்கம் நிஜமாகவே எதோ அவசரத்தில் இருக்கிறார் என்பது குமரனுக்கு புரிகிறது.

"எங்கள் ரெண்டுபேருக்குமே புரியாத பௌதீகமும் இருக்க முடியுமே? இந்தா வாறன்"

பிரகராதி.

இது பூமியில் இதுவரைக்கும் வெளியிடப்படாத நூல். பூமி மனிதர்கள் கேட்டறியாத. பிரபஞ்சத்தின் மிகச்சிறந்த அகராதி. அகராதி என்பதால் படு மோசமாக, அயர்ச்சியாக இருக்கும் என்று நினைக்காதீர்கள். பிரகராதியின் எழுத்து நடையில் ஒரு சுஜாதா டச் இருக்கும். மலையாளத்தில் இல்லாததால் ஜெயமோகனாலும், லத்தீன் அமெரிக்காவில் தோன்றாததால் சாரு நிவேதிதாவாலும் குப்பை என்று புகழப்பட்டிருக்கக்கூடிய பிரகராதி, ஒவ்வொரு வீடுகளிலும் இருக்க வேண்டிய ஒரு கையேடு. மிகச்சிறந்த நூல்கள் என்று பாராட்டு பெறும் எந்த நூல்களுமே பெரும்பாலும் வாசிக்கப்படுவதில்லை. ஆனால் பிரகராதி அப்படியல்ல. இது பிரபஞ்சம் தழுவிய பெஸ்ட் செல்லர். "வழுக்கையாறு" என்ற பெயரில் பிரபஞ்சம் முழுதும் புகழ்பெற்ற ஒரு இணையப் புத்தகக்கடை இருக்கிறது. எழுதப்பட்ட நூல்கள் மட்டுமல்லாது இன்னமுமே வெளிவராத "கந்தசாமியும் கலக்ஸியும்" போன்ற நூல்கள் கூட இந்தப் புத்தகக்கடையில் கிடைக்கும். வழுக்கையாறு கடையில் பிரகராதியின் விலை வெறும் இரண்டு சூரியன்களின் பெறுமதி தான். வாசகர்களால் 2453345 நட்சத்திரங்கள் வாங்கிய நூல் இது. சுமந்திரன் கூட "அருமை" என்று 10567342ஆவது நபராக கொமெண்ட் போட்டிருப்பார்.

சபரி கிரகத்தில் நடந்த ஒரு ஆய்வில், பல "All Time Greatest" நூல்களை எடுத்து ரிவியூ செய்ததன் மூலம் பிரகராதியை "All Light Greatest"என்று கணித்திருக்கிறார்கள். "பூச்சிய ஈர்ப்பில் வாழலாம் வாருங்கள்", "கடவுள் எங்கே போனார்", "ஒரே ஒளியாண்டில் கிரகம் டிசைன் பண்ணுவது எப்படி?" போன்ற புகழ் பெற்ற நூல்களை விட பிரகராதி சிறந்த நூல் என சிலாகிக்கப்படுகிறது.

பிரகராதி ஏன் சிறந்த நூல் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் "தண்ணி" என்ற சொல்லுக்கு பிரகராதி கொடுக்கும் விளக்கம் இது.

"தண்ணி பெரும்பாலும், உலோகங்களால் செய்யப்படும். அதிலும் துருப்பிடித்த உலோகங்களோடு அழுகிய பிஸ்கா பழத்தையும், கிரீஸ் போன்றவற்றையும் கலந்து நொதிக்க செய்து உருவாக்கவேண்டும். மாங்காய் கலக்ஸி பகுதியில் கிடைக்கும் ஒருவகை "மாம்பழம்" என்ற பழத்தை சூப்பி சாப்பிட்டு விட்டு, அதே எச்சிலுடன் பழத்தின் கொட்டையை போட்டு நொதிக்க செய்தால், பெறுமதி வாய்ந்த "தண்ணி" யை உருவாக்கலாம். எவ்வளவுக்கு எவ்வளவு எலேக்ட்ரோலைட்ஸ் அதிகம் உள்ள எச்சிலால் சூப்புகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தரமான "தண்ணி" உருவாகும்"

இப்படி சொல்லும் பிரகராதி கடைசியில் ஒரு பஞ்ச் வைக்கும்.

"தண்ணீர் குடிப்பது உடலுக்கு தீங்கு விளைவிக்கும்"

இப்படியான பினிஷிங் டச் இருப்பதாலேயே பிரகராதி இன்றளவுக்கும் சிறந்த பெஸ்ட் செல்லராக இருந்து வருகிறது.

"அண்ணே எங்களுக்கு ஒரு பதினைஞ்சு போத்தில் தாங்க"

கேட்ட சுமந்திரனை ஒரு மாதிரியாக பார்த்தார் புக்கை. பாரதியார் சிலைக்கு முன்னாலே, சிவன் அம்மன் வீதியை இணைக்கும் ஒரு குறுக்குத் தெரு இருக்கிறது. அந்த தெருவினுள்ளே ஒரு இருபது வீடுகள் தாண்டினால், வலது கைப்பக்கம் ஒரு குச்சொழுங்கை வரும். அதற்குள் நேரே போனால், நான்கு வீடுகள் தள்ளி வருகின்ற வெறுங்காணிக்குள்தான் புக்கையின் தவறணை இருக்கிறது. அது ஒன்றும் பெரிய கடை கிடையாது. நான்கு பக்கமும் அடைக்காத கிடுகு கூரை. கப்புக்கால்கள் முழுதும் சிவப்பும் வெள்ளையுமாய் சுண்ணாம்பு திட்டுகள். ஆங்காங்கே குடித்துவிட்டு விசிறி எறியப்பட்டு கிடக்கும் பனையோலை பிளாக்கள். இரண்டொரு குட்டை நாய்கள். பத்திருபது காகங்கள். இது தான் புக்கையின் தவறணை. தினமும் பத்து, பதினொரு மணிக்கு கடை கூடிவிடும். பென்ஷன்விழும்நாள்களில்தவறணைக்கு வெளியே சைக்கிள் பார்க்கிங் ரெண்டு ரூபாய் வசூலிப்பதுமுண்டு. இன்றைக்கும் ஒரு பதினைந்து பேர், கப்புக்கால்களை தேய்த்துக்கொண்டு ஆரம்பித்திருந்தனர். சிலர் பிளாக்களில் குடிப்பார்கள். சிலர் பிளாஸ்டிக் போத்தலை வெட்டி இரண்டு பாதியிலும் குடித்துக்கொண்டு இருந்தனர். அது கொக்கோகோலா போத்தில்தான் என்று தெரியாமல், யாராவது வேற்று கிரக வாசிகள் பார்த்தால், ஏன் குடிக்கும் கப்புக்கு அடியிலே போய் மூடியை டிசைன் பண்ணவேண்டும்? என்று ஆராய்ச்சியே செய்திருப்பார்கள்.

"பதினைஞ்சு போத்தில் எண்டா முதலிலேயே சொல்லி வச்சிருக்கோணும் ஐயா! ரெகுலரா குடிக்கிறவங்களுக்கும் வேணுமெல்லோ? இல்லாட்டி நாளைக்கு அவங்கள் சண்முகத்திண்ட தவறணைக்குப் போயிடுவாங்கள் அவன் சரியான கள்ளன்.. கசிப்பு கலக்கிறான் .. என்னண்ட சக்கர தண்ணியல்லோ"

"பயப்பிடாத, நாளைக்கு ஒருத்தரும் வர மாட்டாங்கள் .. எல்லாமே அழிஞ்சிடும்"

"என்னய்யா இப்பிடி சொல்லுறீங்க நல்ல முழுவிளம்தான் இண்டைக்கு"

"உன்னோட கதைக்க நேரம் இல்ல .. எவ்வளவு காசு எண்டாலும் தாறம், அந்த ரெண்டு கலனையாவது தா"

எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று சுமந்திரன் சொல்ல, புக்கைக்கு விளங்கி விட்டது. பெரியகை விடக்கூடாது.

"ஆ .. ஐயா கனடாவே? கன காலம் நிப்பீங்களே?"

கேட்டுக்கொண்டே ரெண்டு கலன் கள்ளை புக்கை ஊற்றிக்கொடுத்தார். ஏன் இப்படிக் கேட்கிறான் என்று புக்கையை நூதனமாக பார்த்தபடி,சுமந்திரன் பத்தாயிரம் ரூபா தாளை நீட்டினான்.

"காலம வெள்ளன மாத்தின காசு இல்ல"

"Keep the change!"

"ஆ?"

"மிச்சக்காசை செலவுக்கு வச்சிரு .. பத்து நிமிஷம்தான் ரைம், அதுக்குள்ள செலவழிச்சா நல்லம்"

அவ்வளவு வெள்ளன பத்தாயிரம் ரூபாயை பார்த்த புக்கைக்கு வாயெல்லாம் பல்லானது.

"திரும்பி போகும் வரைக்கும் இங்கேயே வாங்க .. நல்ல தனிப்பனை எஸ்பெஷல் கள்ளு"

புகையின் கதையை கேட்காமல் சுமந்திரன் கந்தசாமியை இழுத்துக்கொண்டே சைக்கிளடிக்கு விரைந்தார். கந்தசாமிக்கு சுமந்திரன் செய்வது எல்லாமே விசித்திரமாக இருந்தது.

"உனக்கு அறளை பேர்ந்து போச்சு சுமந்திரன்.. உண்ட போக்கு வரத்து ஒண்டுமே விளங்கேல்ல"

"கள்ளை முதலில குடி"

"ரெண்டு கலன் கள்ளு .. அதுவும் காலமை வெள்ளனை .. "

"காலமை? .. நேரம் எண்டுறதே ஒரு சார்பு .. அதில காலமை இரவு .. அப்பிடி ஒண்டுமே இல்ல .. முதலில குடி"

"தத்துவம்? இத உந்த கண்டறியாத பேஸ்புக் தரித்திரத்தில போட்டியெண்டால், வாறவன் போறவன் எல்லாம் லைக் பண்ணுவான்"

"போட்டா எல்லாருக்கும் தெரிஞ்சிடும் .. சாக முதல் நிம்மதியா அலையெட்டும் விடு .. நீ .. குடி .. நிறைய குடிச்சாத்தான் தசை இளகும் எங்களுக்கு வலு முக்கியம்"

"தசை .. இண்டைக்கு எந்த மூஞ்சில முழிச்சனோ தெரியாது .. எல்லாமே குழப்பமா இருக்கு.. இல்லாட்டி எல்லாமே தெளிவா இருந்து நான்தான் குழம்பி கிடக்கிறனோ தெரியாது .. பிளாவை எடு"

நெற்றி சுருங்கி, முகம் கறுத்து, வியர்வை ஊற்ற, கள்ளை குடித்த கந்தசாமியை பார்க்க சுமந்திரனுக்கு பாவமாக இருந்தது. ப்ச், நிதானமாகவே பேச தொடங்கினார்.

"என்னை எவ்வளவு நாளா உனக்கு தெரியும் கந்தசாமி?"

"ஒரு இரண்டு மூண்டு வருஷம் இருக்குமே? கொழும்பில படிச்சிட்டு திடீரென்று வந்திறங்கினி.. நாங்களும் யாரு? என்ன? எண்டு விசாரிக்காம உண்ர பேச்சில மயங்கீட்டம்"

சுமந்திரன்தான் செல்வராணியின் அகதி விண்ணப்பத்துக்கு ஆதாரம் திரட்டியது. எப்படி புலிகளாலும், பின்னர் இராணுவத்தாலும் கந்தசாமி துன்புறுத்தப்பட்டார் என்றும், செல்வராணி திரும்பிப்போனால் எவ்வளவு ஆபத்து என்றும், விரிவாக சுமந்திரன் எழுதிய கடிதத்தை, சமர்ப்பித்த அடுத்த வாரமே செல்வராணிக்கு அகதி அந்தஸ்து கிடைத்துவிட்டது. அந்தக் கடிதத்தில் அப்படி என் தான் எழுதினாய்? என்று பல தடவை கந்தசாமி கேட்டுவிட்டார். தொழில் ரகசியம் எவ்வளவு கெஞ்சினாலும் வெளியே வராது.

"சரி இப்ப நான் "சபரி" எண்டுற வேற்று கிரகத்து ஆள், இங்கே தப்பி வந்து அகதியா இருக்கிறன் எண்டு சொன்னா எனக்கு வெறி எண்டு நினைப்பியா கந்தசாமி?"

கந்தசாமி படலை தூணில் ஒட்டியிருந்த சுண்ணாம்புத் திட்டை சுரண்டி நாக்கில் வைத்து, இன்னுமொரு பிளாவை மோண்டு விட்டு சொன்னார்.

"ம்ஹூம்.. வெறி எண்டா நீ எப்பவுமே தெளிவா கதைப்பாய் .. இப்ப உனக்கு வெறியில்ல .. சொல்லு"

கந்தசாமிக்கு பத்து நிமிடத்தில் இதை புரியவைப்பது சாத்தியமில்லை. புரிய வைத்தும் என்ன பிரயோசனம்? அதுதான் எல்லாமே அழிய போகிறதே.

"சரி விடு .. கெதியா குடிச்சு முடி .. கோயிலடில ஓடிப்போய் கச்சான் வாங்கோணும் .. சொன்னாப்போல, துவாய் எடுத்து வச்சியா?"

"துவாயா? கொடியில காயப்போட்டு கிடக்கு .. எடுத்தோண்டு வரவா?"

விளக்கம் ஏதும் கேட்கும் நிலையை எல்லாம் கந்தசாமி தாண்டிவிட்டார். இனி சுமந்திரனை அவர் போக்கில் விட்டுப்பிடிக்க வேண்டியதுதான். கச்சான் வாங்குவதற்கும் காயப்பட்ட துவாய்க்கும் என்ன சம்பந்தம்? கந்தசாமிக்கு தலைசுற்றத் தொடங்கியது.

(கலக்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

உயிர்ப்பித்தலின் வடிவம்

ஒரு ஆறு கங்கை போல பல வளைவு. ஆத்துக்கு நடுவில ஒரு இலை ??? ஆத்துக்குப் பக்கத்தில ஒரு குடிசை. அதுக்கு மேல மலைத்தொடர்கள். மேல சூரியனும் இருந்தா சரி யென்று பாத்து அதிர்ந்து போய்ட்டன். அங்க ஒரு சூரியன். சந்திரன். அஞ்சு நட்சத்திரம்???

■ ஆதி பார்த்தீபன்

"உ னக்கு என்ன படம் பிடிக்கும்"
"ஒரு காலைக்காட்சி, அந்த காலைக் காட்சி தான் பாக்க வடிவா இருக்கும், நீ வாற கிழம வரேக்க எனக்கொரு காலைக்காட்சி கீறிக்கொண்டு வா"
"அப்ப உனக்கொரு காலைக்காட்சி நான் என்ர 'ரொயிங் 'கொப்பில எழுதி வைக்கிறன் அப்ப தான் மறக்க மாட்டன்"
என்றாள் எனது நண்பி, ம்ம் அவள் சின்னப் பெட்ட தான். ஆண்டு மூன்டில படிக்கிறாள் ,ஷிவானி அவ ளின்ட பேர்,அச்சுவேலில இருக்கிறாளாம். கிழமைக்கொருக்கா 2.30 பஸ்ஸில சந்திச்சு சினேகிதமாம். அழகா 'ரொயிங்' பண்ணுவாள் அதால எனக்கு ஒரு ஆவல்,எனக்கு பிடிச்ச காலைக்காட்சிய அவளின்ட கையால கீறிப் பாக்கோணுமென்டு,
நான் வேளைக்குப் போனா அவளுக் காக சீற்பிடிப்பன் அவளும் அப்பிடித் தான்,இப்ப அந்த 'ரொயிங்க' பாக்க நான் ஒரு கிழமை பொறுக்கோணும். அவளிண்டைக்கு 'ரொயிங்கோட', வருவாள்,ஓம் எனக்கு பிடிச்ச காலைக் காட்சி. வந்திட்டாள்
"இந்தா இரு, கீறியந்தனியே?"
"ஓம். ஆதி. ஆனா கலரடிக்கேல நீ தான் கலரடிக்கோணும்"
"பராவாயில்ல காட்டு பாப்பம்"
அற்புதமான ஓவியம், என்ன திறம அவளுக்கு.
ஒரு ஆறு கங்கை போல பல வளைவு.
ஆத்துக்கு நடுவில ஒரு இலை ???
ஆத்துக்குப் பக்கத்தில ஒரு குடிசை.
அதுக்கு மேல மலைத்தொடர்கள்.
மேல சூரியனும் இருந்தா சரி யெண்டு பாத்து அதிர்ந்து போய்ட்டன்.
அங்க ஒரு சூரியன். சந்திரன். அஞ்சு நட்சத்திரம்???
"என்ன இது காலமையில சூரியன் தானே இருக்கும். அது கூட தெரியாதே உனக்கு"
"தெரியும். ஆனா உனக்கு என்ன பிடிக்குமெண்டு எனக்கு தெரியாதே"
"நீ விரும்பினத இந்த வானத்தில விட்டிட்டு மிச்சத்த அழிச்சுவிடு"
"ஆனா காலைக்காட்சி எண்டா சூரியன் இருக்கிறது தான் வழம"
"அப்பிடி இல்ல ஆதி. நீ சொல்றது இந்த வானத்தில (வானத்த காட்டி) ,இது நான் கீறின எங்கட வானம். இதுல எங்களுக்கு என்ன பிடிக்குதோ அத வைக்கலாம் தானே!!"
எதுவும் பேச முடியேல எனக்கு.
ஓம். இது எங்கட வானம். என்ன ஒரு தன்னம்பிக்கை அந்தச் சிறுமிக்கு அவளிட்ட கற்றுகொள்ள வேண்டியது நிறய இருக்கு.

* * *

"அப்பா என்ன ரேஸ்ட்"
வாறகிழமநான்இதப்பற்றிஅவளிட்ட சொல்லோணும் ,நீ சொன்ன மாதிரி பாணோட நேற்று வச்ச குழம்புச் சட்டின்ர கரையில இருக்கிற குழம்புப் பிசுக்கை தொட்டு சாப்பிட்டன் எண்டும் அதின்ர ரேஸ்ட் சு ப் ப ரா இருந்தச் செண்டும் ஷிவானிக்குப் பொய் சொல்லத் தெரியும். காலம சாப்பிடாட்டியும் சாப்பிட்டன் எண்டு ஆனா உண்மையை மறைக்கத் தெரியாது. அவளின்ட சோர்ந்த முகம் அவளைக் காட்டி குடுத்திடும், அவளின்ட அப்பா ஒரு கூலித் தொழி லாளி. அவளே சொல்லி யிருக் கிறாள், ஒரு வேளை அடிக்கடி அவருக்கு வேலை கிடைக்காமப் போகலாம், நான் கேட்டன் "நீ சாப்பிட்டியா?"
"ஓம்!" "அப்ப ஏன் கவலையா இருக்கிற"
"இல்லயே" ஈ·ஈ·ஈ·ஈ·ஈ·ஈ·ஈ·ஈ·ஈ· (சிரிப்பாம்)
"ஓ சரி என்ன சாப்பிட்டனி"
"பாணும் பழங்குழம்பும், நீ?"
"நானும் பாண் தான், வாழப்பழம்"
"நீ பழங்குழம்போட சாப்பிட்டிருக் கிறியே. நல்லா இருக்கும். அதுலயும் சட்டில கரைய தொட்டுச் சாப்பிட்டா நல்ல ரேஸ்ரா இருக்கும்"
"வாழப்பழம் சளி வைக்குமாம். அப்ப நாங்க அத சாப்பிடக் கூடாது"
"ஓம் நான் சாப்பிட்டுப் பாத்திட்டு வந்து உனக்கு சொல்லுறன்"
அது தான் அந்த ஆசையில தான் நான் இண்டைக்கு சாப்பிட்டு பாத்திட்டன். உண்மயா நல்ல ரேஸ்ட். அவளிட்ட இதைப்பற்றி சொல்லியிருக்காட்டி எனக்கு நித்திரை வந்திருக்காது",
"ஓ வேளைக்கே வந்திட்டியா வேல முடிஞ்சுதா?"
"இல்ல நான் வேலைய விட்டிட்டன்"
"ஓ அப்ப சரி வேற வேலை செய்"
"ம்ம் நான் சாப்பிட்டு பாத்தன் நல்ல ரேஸ்ட் அத தான் சொல்லோணுமெண்டு நினைச்சன்"
"நான் சொன்னன் தானே"
"சரி நீ இண்டைக்கு என்ன சாப்பிட்டனி"
"பாண் தான்"
"ஓ பழங்குழம்பு சட்டியா"
"இல்ல ஆதி. நேற்று வீட்டில குழம்பு காய்ச்சேல. நாங்க இன்டைக்கு புதுசா ஒண்டு சாப்பிட்டமே"
"ஓ என்ன"
"தூள்"
"என்ன மிளகாய்த் தூளா?"
"ஓம் பாணோட சொட்டு தூள தொட்டு தின்னு. நல்லா இருக்கும்"
"உண்மயா நல்லா இருக்குமா"
"ஓம் எங்கட அம்மா சொல்லிச்சே காசில்லை. இந்த தூள தொட்டு சாப்பிட்டா உறைப்பா பாண் கொஞ்சம் நல்லா இருக்குமெண்டு பழம் பாண் தானே!!!!!"
(உண்மயா நல்லா இருக்குமா?)
ஷிவானி போல வாழும் தெய்வங்களுக்காக.....

* * *

ஷிவானிக்கு பந்துகள் எண்டா பிடிக்குமாம். அதுவும் பிளாஸ்டிக் பந்துகள். ஒரு நாள் இதைப்பற்றி என்னட்ட சொல்லியிருந்தாள். நல்லூர் திருவிழாவில வாங்கி உடைஞ்சு போன மஞ்சள் நிற பிளாஸ்டிக் பந்தைப் பற்றி, நானும் ஸ்ரான்லி ரோட்ல இருக்கிற ஒரு பேமன்ட்ல ஒரு மஞ்சள் நிற பிளாஸ்ரிக் பந்து வாங்கிக்குடுத்தன். இரண்டு கிழம ஆச்சு நான் குடுத்த பந்த பற்றி அவளிட்ட விசாரிக்கிற ஆர்வத்தில கேட்டன்
"பந்துக்கு சாப்பாடு போட்டியா?"
"இல்ல"
"ஏன் போடேல நீ? அதுக்கு பசிக்காதா?"
"பசிக்கும் தான் (அசடு வழிந்த சிரிப்பு) ஆனா அது மொத்தமா வந்திடுமே. பிறவது என்ன விட பெருசாயிடும். பேந்து எப்படி என்னால அதோட விளையாடேலும்....?"
"அது அப்ப செத்துப்போயிடுமே"
"இல்ல அத நான் சாகவிடமாட்டன் அது சாகாது எனக்கு தெரியுமே"
"எப்பிடித் தெரியும். நீ இல்லாத நேரம் அது தனிய இருக்கும், ஒரு மூலைல போட்டிட்டு வந்திடுவ. அது செத்துப் போயிடும்"
" இல்ல நீ இப்பிடி சொல்லுவாய் என்டு எனக்கு தெரிஞ்சு தான் அத நான் தண்ணிக்குள்ள போட்டிட்டு வந்தன் .அது தண்ணிக்க துள்ளித் துள்ளி விளயாடுமே,எனக்கெண்டா வேர்க்கும் ஆனா அதுக்கு வேர்க்கவே வேர்க்காது ,அது குளிச்சு குளிச்சு விளயாடுமே...."
"உன்ர கைய ஒருக்கா தா பாப்பம்"
"ஏன்"
அட எவ்வளவு அற்புதமான அந்த கை, விசித்திரமான அந்த விரல்கள் அந்த ரேகை களிலெல்லாம் பிரபஞ்சத்தின் மஞ்சள் ஒளி ரேகையாக ஓடுவது தான் அதின்ர சிறப்பு,அந்த விரல்கள் ஒரு பந்தின் உயிரைச் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தாழ்ந்தவர் என்ற பகுப்பை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் தலைவர் மதகில் இருந்து அரட்டையடித்துக் கொண்டிருக்கவில்லை. அப்படிவெட்டியாக இருந்தால்தான் எல்லா நண்பர்களும் ஒன்று சேரவும், யார் முதன்மையானவர் என்ற அபிப்பிராய பேதங்களும் எழும். தலைவர் தீவிரமான கெரில்லா போராளியாக இருந்தார். அதுதவிர, அவர் தனிப்பட்ட நட்பிற்கும் கடமைக்குமிடையிலான இடைவெளியை பேணினார். இன்னும் துலக்கமாக சொன்னால், தன்னுடன் ஆத்மார்த்தமான நட்புடன் இருப்பவர்களும் தூயவர்களாக இருக்க வேண்டும் என நினைத்தார். அவர்கள் பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் கறைகளை சந்தித்தால், அவர்களை தள்ளி வைக்கத் தயங்கியதில்லை. தான் நம்பிய நிலைப்பாடிற்கு அப்பால் சிந்தித்தார் என்பதற்காக அன்ரன் பாலசிங்கத்தை ஒதுக்கி வைக்கவும், தனது எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை என்பதற்காக சொர்ணத்தை தள்ளிவைக்கவும் தயங்கியவரல்ல. தன்னுடன் ஆத்மார்த்த பிணைப்பை கொண்டிருந்தவர்கள் சரியாக செயற்படவில்லை எனறபோது ஒதுக்கி வைத்தாலும், மிக நெருக்கடியான மனநிம்மதி வேண்டிய சமயங்களில் அவர்களை அழைத்து தனிமையை போக்கிய இரண்டு சம்பவங்கள் உள்ளன. முதலாவது கடாபி தொடர்புடையது. விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து கருணா விலக்கப்பட்டபோது எழுந்த நெருக்கடி நிலையில் ஒருநாள் கடாபியை அழைத்து நீண்டநேரம் தன்னுடன் உட்கார வைத்திருந்தார். கடாபியும் அவரும் கொண்டிருந்த நெருக்கம் பரகசியமானதல்ல. ஆனாலும், இதற்கு சில மாதங்களின் முன்னர்தான் கடாபியை கண்டபடி திட்டி தனது கண்ணில் விழிக்க வேண்டாம் என தலைவர் அனுப்பியிருந்தார். இரண்டாவது சொர்ணம் சம்மந்தமானது. அது யுத்தத்தின் இறுதி சமயத்துடன் தொடர்பானது. அதனை பின்னர் பார்க்கலாம்.

சொர்ணத்தின் சாகசம்

விடுதலைப்புலிகளின் தலைவரின் மெய்ப்பாதுகவலராக இருந்த சமயத்தில் சொர்ணம் பல சாகச நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். ஒருமுறை இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குள் அவர் சிக்கியபோது, சொர்ணம் அவரை காப்பாற்றியிருந்தார். எனினும் இந்த நடவடிக்கையில் சொர்ணத்தின் பங்கு பேசப்படுமளவிற்கு, அதில் முக்கிய பங்கு வகித்த நவத்தின் பங்கு பேசப்படுவதில்லை. நவத்தின் சாதுரியமும், சொர்ணத்தின் மூர்க்கத்தனமாக போராற்றலும் இணைந்து சீக்கிய ரெஜிமென்றின் முற்றுகையிலிருந்து பிரபாகரன் தப்பிக்க உதவியது. இதற்கு உடன் பதிலடி கொடுக்க புலிகள் விரும்பினார்கள். கல்கட் இலக்கு வைக்கப்பட்டார். மணலாற்றின் நித்தியவெட்டையில் உலங்குவானூர்தியில் வந்திறங்கியவர் மீது தாக்குதல் நடந்தது. ஹெலிமீது ஆர்பிஜி அடிக்கப்பட்டது. அடுத்தது சொர்ணம். முதலாவது அடி மிஸ். அதற்குள் கல்கட் சுதாரித்து அருகிலிருந்த பதுங்குகுழிக்கள் பாய்ந்து விட்டார். இரண்டாவது அடியில் ஹெலி காலி. இந்தியப் படைகளின் கூடளைத் தளபதிக்கு மரணத்தின் வாசனையை முகரச் செய்தார் சொர்ணம்.

வடக்கின போர் நட்சத்திரம்

இந்தச் சமயத்தில் விடுதலைப்புலிகளில் பல நட்சத்திரங்கள் மேற்கிளம்பினார்கள். எனினும் அவர்களில் உயர்மட்டத்தில் இருந்தவர்கள் இறந்துபோய்விட்டனர். உயர்மட்ட நட்சத்திரங்களாக எஞ்சியவர்களில் சொர்ணம் ஒருவர். மற்றவர் பால்ராஜ். இவர்கள் இருவரும்தான் இரண்டாம் கட்ட ஈழப்போரின் வடக்கு நாயகர்கள். இவர்கள் இருவரையும் மையப்படுத்தித்தான் இரண்டாம்கட்ட ஈழப்போரின் அத்தனை நடவடிக்கைகளும் அமைந்தன. இந்திய படைகளின் வெளியேற்றத்தின் பின்னர், விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பண்புமாற்றங்கள் [illegible] அதுவரை சிறிய கெரில்லா அணிகளாக இருந்தவர்கள் படையணிகளை [illegible]ர்கள். மகளிர்படையணி தவிர்த்து, ஆண்கள் படையணி இரண்டு உரு[illegible]ன. ஒன்று சாள்ஸ் அன்ரனி படையணி. அதன் தளபதி பால்ராஜ். மற்றது [illegible]பாண்டியன் படையணி. இதற்கு சொர்ணம் தளபதி. அந்த சமயத்தில் ப[illegible]ாக பேசப்பட்ட வளலாய் தொடர் காவலரண் தகர்ப்பை அவர்தான் செய்தார். அது பெரிய படைத்துறை அதிசயத்தை ஏற்படுத்திய தாக்குதல் அல்ல. புலிகளிற்கும் பெரிய இராணுவ அனுகூலங்களை ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனாலும், ஒரு கெரில்லா இயக்கத்தின் பரிணாம வளர்ச்சிகாலத்தில், அவை நம்பிக்கை ஏற்படுத்திய தாக்குதல்கள். அவரது தலையாய படைத்துறை சாதனையாக குறிப்பிடத்தக்கது 1992இல் நடந்த கட்டைக்காடு முகாம் தாக்குதல். அந்த சமயத்தில் விடுதலைப்புலிகள் மிக நெருக்கடியை சந்தித்திருந்தார்கள். ஆயுதங்களுக்கு மிகப்பெரிய தட்டுப்பாடு. வெளிநாட்டு விநியோகம் ஓர் ஒழுங்கிற்கு வரவில்லை. மரபுபடையணி [illegible]ளை உருவாக்கிவிட்டாயிற்று. ஆனால் ஆயுதங்கள் இல்லை. குறிப்பாக ரவைகள் இல்லை. இராணுவம் ஒரு முன்னகர்வை செய்தால் தாக்குப்பிடிக்க முடியாதென்ற நிலை. இயக்கத்தின் நிலைமையை உணர்ந்த சொர்ணம், கட்டைக்காடு முகாமை இலக்கு வைத்தார். அதுதான் ஆனையிறவு பெருந்தளத்தில் ஆயுதசாலை. கடல்மார்க்கமாக வந்த ஆயுதங்கள் அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்தன. தனது இம்ரான் பாண்டியன் படையணியை வைத்து அவர் அந்த தாக்குதலை மேற்கொண்டார். சில மணிநேரங்களிலேயே முகாமை வழித்து துடைத்து கொண்டு வந்துவிட்டார்கள். மரபுப்படையணியாக மாற்றமடைந்தாலும் அதன் சாவல்களை எதிர்கொள்ள முடியாமல் தத்தளித்த சமயத்தில் ஆசுவாசப்படுத்திக்கொள்ளும் அவகாசத்தை அவர்தான் ஏற்படுத்தினார்.

அதிர்ச்சிகளற்ற போர் உத்தி

இதன் பின்னர் குடாநாடு வீழ்ச்சியடையும் வரை வடக்கில் நடந்த தாக்குதல் ஒனறில் அவர் வழிநடத்தினார். அல்லது பால்ராஜ் வழிநடத்தினார். தனது சமதையானவர்கள் அல்லது கீழானவர்கள் என யாருடனும் ஒரு இங்கிதமாக நடந்து கொள்ளும் இயல்பை பால்ராஜ்ம், அதற்கு நேர்மாறான இயல்பை சொர்ணமும் கொண்டிருந்தனர். இதனால் பின்னாட்களில் இருவரும் இணைந்து தாக்குதல்களை செய்ய முடியாமல் போனது. மிகநெருக்கடியான கட்டம் என்றபோது மாத்திரம் புலிப்பாய்ச்சலில் இருவரும் ஒன்றாக களத்தை வழிநடத்தினார்கள். சொர்ணத்தின் போர் முறை மிகச்சாதாரணமானது. பழைய இதிகாசபுராணங்களில் வருவதற்கொப்பானது. புதிய புதிய உத்திகளோ அதிர்ச்சிகளோ அற்றது. ஒரு வரியில் சொன்னால், போவார்கள் அடிப்பார்கள் வருவார்கள். மாட்டுவண்டி சவாரியின் வண்டியோட்டி வெறிகொண்டு, மாட்டை குத்தி விரட்டுவதைப்போல அவர் களத்தை வழிநடத்தினார். அவரது போர்முறையில் இரண்டு தெரிவுகள் இருக்கவில்லை. எவ்வளவிற்கெவ்வளவு போர்தந்திரங்களில் நம்பிக்கை வைக்கிறானோ அந்த தளபதியின் படையணி காப்பாற்றப்படும். உயிர்களில் நம்பிக்கை வைக்கும் தளபதியின் இலக்கு நிறைவேறுமே தவிர, படையணி காப்பாற்றப்படுவதில்லை. சொர்ணம் இரண்டாம் வகை. அவரது தாக்குதல்கள் அனைத்துமே அதீதமான உயிரிழப்புக்களை ஏற்படுத்தியவை. தவளை, கட்டைக்காடு, புலோப்பளை என இரண்டாம் கட்ட ஈழப்போரில் பல உதாரணங்கள் உள்ளன. மண்டைதீவு மட்டும்தான் விதிவிலக்கு.

இந்தகாலப்பகுதியில் இராணுவமும் அதீத போர்த்தந்திரங்களைக் கைக் கொண்டிருக்கவில்லை. முதலில் எறிகணைவீச்சு. பின்னர் துப்பாக்கி வேட்டு. பிறகு நகர்வு என்பதை போல் மேலோட்டமான தந்திரங்களைத்தான் பாவித்தார்கள். இந்த சமயத்தில் மூர்க்கத்தனமாக தாக்கும் இயல்பு கொண்ட சொர்ணம் போதுமானவராக இருந்தார்.

வீழ்ச்சிக்காலம்

இராணுவத்தின் நடவடிக்கைகளில் தந்திரோபாயமான மாற்றத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியவர் மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா. அவரது வழி நடத்தலில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட சூரியக்கதிர் முன்னெப்போதும் புலிகள் சந்தித்திராத உத்தியிலான நகர்வு. இதன் பின்னர்தான் இலங்கை போரரங்கு இராணுவ உத்திகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதாக மாறியது. இந்த நகர்வை விடுதலைப்புலிகளினால் எதிர்கொள்ள முடியவில்லை. வன்னிக்கு பின்னகர்ந்தனர். யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியென்பது இன்னொரு அர்த்தத்தில் சொர்ணத்தின் வீழ்ச்சியாக இருந்தது. அவரது போருத்திகள் கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்டன. அவர் தனது போர்வாழ்க்கையில் முதலாவது சறுக்கலை சந்தித்தார். திருகோணமலை பொறுப்பாளராக அனுப்பப்பட்டார். திருகோணமலை பொறுப்பாளரென்பது, மூதூர் காடுகளில் சில நூறுபோராளிகளை வழிநடத்தும் பொறுப்பு. இதன் பின்னர், விடுதலைப்புலிகளின் புதிய தளபதிகள் விரைவாக மேலெழ தொடங்கினார்கள். குறிப்பாக தீபனின் வளர்ச்சி அசுரத்தனமானதாக இருந்தது. அதீத இராணுவ யுக்திகளை பிரயோகிக்கும் களத்திற்கு பால்ராஜினால் சட்டென மாறிக்கொள்ள முடிந்தாலும், தீபன் போன்றவர்களின் அதீத தேர்ச்சியின் முன் சொர்ணத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதுமுதல் தலைமுறையினரை ஒருவித அசௌகரியப்படுத்தியது.

கைவிட்ட சந்தர்ப்பங்கள்

ஒரு மூத்த தளபதி என்பதன் அடிப்படையில் சொர்ணத்தை விடுதலைப்புலிகள் கைவிடவில்லை. அவ்வப்போது சந்தர்ப்பங்கள் கொடுத்தபடியிருந்தனர். துரதிஸ்ரவசமாக அவரால் ஒருமுறைகூட பிரகாசிக்க முடியாமல் போய்விட்டது. நவீன களங்களில் கறார்த்தன்மைக்கும், செய் அல்லது செத்து மடி பாணிக்கும் இடமில்லை. அமைப்பின் கெரில்லா போராட்டகால மனநிலையும், நிழல்அரசுக்கால மனநிலையும் வேறானவை. ஒரேமனநிலையுடன் இரண்டையும் அணுக முடியாது. இந்த யதார்த்தம் கடைசிவரை புரியாதவராகவே சொர்ணம் இருந்தார். இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். கருணாவின் பிரிவின் பின்னர், திருகோணமலையை பொறுப்பேற்க இரண்டாவது தடவையாக அவர் அனுப்பப்பட்ட சமயத்தில் அவரது வாகன சாரதியாக இம்ரான் பாண்டியன் படையணியிலிருந்து போராளி ஒருவன் அனுப்பப்பட்டான். மன்னாரை சேர்ந்த அவன் சற்றே துடுக்குத்தனம் மிக்கவன். சம்பூரில் வாகனம் பயணித்துக் கொண்டிருந்தது. வீதி மோசமானதாக இருந்ததால், குலுங்கியது. குலுங்காமல் செலுத்த சொல்லி சொர்ணம் சொன்னார். அவன் மெதுவாக வாகனத்தை செலுத்தினான். கூட்டம் ஒன்றுக்கு சென்று கொண்டிருந்ததால், விரைவாக செலுத்த சொல்லியிருக்கிறார். அவன் விரைவாக செலுத்த மீண்டும் வாகனம் குலுங்கியது. முன்னிருக்கையில் இருந்தவர், சாரதியின் தலையில் அடித்திருக்கிறார். அவன் சட்டென வாகனத்தை நிறுத்திவிட்டான். எதுவும் பேசாமல் வாகனத்தில் இருந்து இறங்கினான். நிதானமாக வாகன சாவியை எடுத்து சொர்ணத்தின் மடியில் போட்டுவிட்டு நடந்தே முகாம் போய்விட்டான். இப்படியொரு சம்பவத்தை இரண்டாம் கட்ட ஈழப்போர் காலத்தில் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

(களங்கள் விரியும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகத்தர்கள் தேவை

SINOPEC Lubricants

இலங்கை மசகு எண்ணெய்க் தொழில்துறையில் புத்தம் புது வரவான Sinopec Lubricants தனது வருங்காலத் தொழில் முயற்சியில் நாடளாவிய ரீதியில் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட விநியோகத்தர்களுக்கு அழைப்புவிடுக்கிறது.

∴போர்ச்சூன் 500 சஞ்சிகை 2013ம் ஆண்டில் சினோபெக் நிறுவனத்திற்கு உலகின் மிகப் பெரிய நிறுவனங்களுக்குள் 04 வது இடத்தை வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் சீனாவில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்திகள் (பெற்றோலியம், டீசல், மற்றும் ஜெட் விமான எரிபொருள் உள்ளடங்கலாக) மற்றும் பாரிய அளவிலான பெற்றோலிய இரசாயன உற்பத்தியினையும் விநியோகத்தினையும் மேற்கொள்ளும் மிகப்பெரிய நிறுவனமாகும். சினோபெக் நிறுவனம் ISO 9001, ISO/TS16949, ISO 14001, OSHAS/18000 மற்றும் AS9100 தரச் சான்றிதழ்களுடன் API/ACEA/DIN/HSE/JASO/ACEA தரச் சான்றிழ்களையும் வென்றுள்ளதுடன் கேய்சன் மற்றும் டோட்டல் குவாலிட்டி மனேஜ்மன்டினால் பராமரிக்கப்படுகிறது.

இன்டர் ஓஷன் லுப்ரிகன்ட் (தனியார்) நிறுவனம் சினோபெக் நிறுவனத்தின் உள்நாட்டு விநியோக நிறுவனமாகும். இந்த நிறுவனம் அதன் செயற்பாடுகளின் ஊடாக குறுகிய காலத்தில் உறுதியான வளர்ச்சியைக் கண்டுள்ளதோடு, மசகு எண்ணெய் செயற்பாட்டாளர்கள் மத்தியில் 06வது இடத்தைப் பெற்று கணிசமான சந்தைப் பங்கினைப் பெற்றுள்ளது. இது முன்னிலையிலான ற்றும் தொழிற்றுறைக்கான உயர்தர மசகு எண்ணெயை மற்றும் கிறீஸ் வகைகள் என்பவற்றை சிங்கப்பூர் மற்றும் சீனாவிலிருந்து மிகவும் போட்டித்தன்மையான விலைகளில் இறக்குமதி செய்கிறது.

விநியோகத்தருக்கான தகைமைகள்:

01. தாங்கிகளிலும் அட்டைப் பெட்டிகளிலும் பொதிசெய்யப்பட்ட மசகு எண்ணெயைக் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய பரந்த களஞ்சியசாலை வசதி
02. விநியோகத்துக்கான ட்ரக் வண்டி அல்லது 02 சிறு லொறிகள்
03. வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல்
04. விற்பனைக்கான ஒத்துழைப்பு ஊழியர்கள் (கணக்கியல் மற்றும் களஞ்சியசாலை ஊழியர்கள்)
05. விநியோகத்தில் முன்னைய அனுபவம் (வாகனத் துறை - டயர், பற்றரி, உதிரிப் பாகங்கள் இன்னும் பல) கவனத்தில் கொள்ளப்படும்.

நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் விநியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு 2014 ஜூன் 30ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள்.

பொது முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட இன்டர்ஓஷன்
லுப்ரிகன்ட்ஸ் (தனியார்) நிறுவனம்
இல. 470, மஹவெல வீதி,
பஹலபியன்வில, கடவத்தை.
தொ.பே: 94114343747
கை.தொ.பே: 94770038774
∴பக்ஸ்: +94(0)11-2926936
மின்னஞ்சல்: info@interocean.lk

150 வருடம்

எஸ்பிஜ சர்வதேச வங்கியியல் குழுமம்
வளர்ச்சி இங்கிருக்கிறது

அறிமுகமாகிறது எஸ்பிஜ ஃபிளாஷ். இன்ஸ்டன்ட் ரெமிட்டன்ஸ் சர்வீஸ் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு.



ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா கடந்த 150 ஆண்டுகளாக ஸ்ரீலங்காவின் முன்னணி வங்கியாக ஒப்பற்ற சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்தியாவிற்கு இன்ஸ்டன்ட் ரெமிட்டன்ஸ் சர்வீஸ் அறிமுகமாகிறது. பயனரின் எஸ்பிஜ வங்கி அல்லது துணை வங்கி கணக்குகளில் ஒரு சில நிமிடங்களில் பணம் வரவு வைக்கப்படும். வேறு வங்கி கணக்குகளிலும் வந்து சேர, ஒரு நாளை விட அதிகம் ஆகாது. சுலபம், சரிதானே ?

கொழும்பு : 16, [illegible] 01
போன் : +94 11 4446600, மின்அஞ்சல் : ceosbilk@sltnet.lk

கொள்ளுபிடிய : [illegible] 385, [illegible] 03
போன் : +94 11 4522336, மின்அஞ்சல் : colpetty.lk@statebank.com

வெள்ளவத்தை : 06, [illegible] 06
போன் : +94 11 4957415, மின்அஞ்சல் : wellawatte.lk@statebank.com

கண்டி : 15, 15-1/1 [illegible]
போன் : +94 81 [illegible], மின்அஞ்சல் : sbi.kandy@statebank.com

யாழ்ப்பாணம் : 14, [illegible]
போன் : +94 21 [illegible], மின்அஞ்சல் : sbi.jaffna@statebank.com

மின்அஞ்சல் : ceosbilk@sltnet.lk
இணையதளம் : www.sbisrilanka.net

மேம்படுத்தப்பட்டு புதுப்பொலிவுடன்

தற்போது

LINK NATURAL
சீர்ஷபதி
கேஷா

முழுமையான பராமரிப்புக்கு ஆயுர்வேத கூந்தல் எண்ணெய்

தற்போது கடைகளில் - லிங்க் கேஷாவில் அடங்கியிருக்கும் மருத்துவ மூலிகைகளின் அனுகூலங்களை பாதுகாப்பாக உங்களுக்கு வழங்குவதற்கு கண்ணாடி போத்தலுடனான புதிய பெட்டி

LINK NATURAL லிங்க் தெச்சுரல் புரொடக்ஸ் கம்பனி லிமிடட்
[illegible]

21Mbps டொங்கள் upgrade

ரூ. 2,200/- மட்டுமே

இலங்கையின் அதி துரித வலையமைப்புடன் இணைந்துக்கொள்ளுங்கள்

உங்கள் பழைய டொங்களினை புத்தம் புதிய அதிவேக HSPA+ டொங்களாக மாற்றிக்கொள்ளுங்கள்

ஒரு வருடத்திற்கு அதிகமாக பிற்கொடுப்பனவு பக்கேஜினை பயன்படுத்திய அனைத்து டயலொக் வாடிக்கையாளர்களுக்கும் HSPA+ டொங்கள் ரூ. 1,500/- மட்டுமே.

திருத்தனைகளுக்கு உட்பட்டது

அருகில் உள்ள டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள் 2014 ஜூன் 30ம் திகதி வரை மட்டுமே

வரு தரின் சிறந்த இணையச் சேவை வழங்குனர்

எதிர்காலம் இன்றே.

Dialog

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஜூன் 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது